Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD



RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1325)

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | சித்திரை 23 சனிக்கிழமை (05.05.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 217


ஊடக உயிர் பறிகொடுக்கப்படாத நிலையில்... (15)



இரட்டைக் குடியுரிமைக்கு அரசியல் தடை! (09)

காணிப்பிரச்சினைக்கு தீர்வு

(04)


வன்னிக்கு இனித்தான் செல்லவேண்டும்! (10)


அனைத்துப் போட்டிகளிலும் விளையாடத் தயார் (06)

# தேசியக் கொடி ஏந்தியதற்கு மனிப்புக் கோர வேண்டியதில்லை



## சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நடத்திய மே தினக் கூட்டத்தில் தேசியக்கொடியை ஏந்தியது தொடர்பாக மன்னிப்புக் கோர வேண்டிய அவசியம் இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவருடன் இணைந்து மேடையில் தேசியக் கொடியை ஏந்தியது உண்மைதான். இவ்வாறு நான் தேசியக் கொடியை ஏந்தியது தொடர்பாக எவரும் மேலதிகமாகப் பேச வேண்டிய அவசியம் இல்லை என்பதுடன், இதற்காக எவரிடமும் மன்னிப்புக் கோரவேண்டிய அவசியமும் இல்லையெனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் (19) ஆம் பக்கம் பார்க்க

## விலை அதிகரிப்பு

**சீமெந்து**

சீமெந்து பக்கெற் ஒன்றின் விலையை 70 ரூபாவினால் அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை அனுமதியளித்துள்ளது.

**பால் மா**

இறக்குமதி செய்யப்படும் 400 கிலோ கிராம் பால்மா பக்கெட்டின் விலை 63 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் பால்மா பக்கெட்டின் விலை 163 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது

**காஸ் விலை**

12.5 கிலோகிராம் எடையுள்ள சமையல் காஸ் விலை 350 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இவ் விலை அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளதாக அவ்வதிகார சபை தெரிவித்துள்ளது.

# மீண்டும் தாக்கியுள்ள கப்ரால் ஏவுகணை

## என்கிறார் ரணில்

(கொழும்பு)

சமையல் வாயு மற்றும் பால் மா விலை அதிகரிப்புடன் கப்ரால் ஏவுகணை மீண்டும் தாக்கத் தொடங்கியுள்ளதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

பால்மா விலை அதிகரித்துள்ளது. காஸ் விலை அதிகரித்துள்ளது. இந்த ஏவுகணை எங்கே தாக்கும் என யாருக்குத் தெரியும். பொருட்களின் விலை உயர்வுக்கு சமாந்தரமாக மக்களின் (19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழருக்கான அரசியல் தீர்வை இந்தியா பெற்றுக்கொடுக்கும்

## பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்களுக்கு காத்திரமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியா உறுதியுடன் உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான ஆறு நாட்கள் மேற்கொண்ட தமது பயணம் தொடர்பாக இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்றைய தினம் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து கலந்துரையாடிபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் 45 நிமிடங்கள் வரை இடம்பெற்ற இந்தக்கலந்துரையாடலில் இந்திய நாடாளுமன்ற (19) ஆம் பக்கம் பார்க்க

# ஜப்பானிய பிரதிப் பிரதமர் கொழும்பை வந்தடைந்தார்



(கொழும்பு)

ஜப்பானிய பிரதிப் பிரதமர் கட்சுயா ஒகாடா நேற்று மாலை இலங்கை வந்தடைந்தார். ஜப்பானிய பிரதிப் பிரதமர் கட்சுயா ஒகாடா தல்லைமையிலான ஜப்பானிய தூதுக்குழுவினர் மிஹின் லங்கா விமானத்தின் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். அத்தூதுக் (19) ஆம் பக்கம் பார்க்க

# தனிப்பட்ட தகராறு காரணமாக இராணுவ வீரர்கள் சுட்டுக்கொலை

## யாழ்.நகரில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் பாதுகாப்புக் கடமையிலிருந்த இரண்டு இராணுவ வீரர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்ததால், குறித்த இரண்டு இராணுவத்தினரும் உயிரிழந்தனர்.

நேற்றுக்காலை ஆறு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத் தில் கோப்ரல் இலங்க தேவலாகே நலிங்க (வயது-26), விக்கிரமரத்ன குணசேகர சுமித் (வயது-28) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இரு இராணுவ வீரர்களும் நண்பர்கள் எனவும், இவர்கள் இருவருக்குள்ளும் இடையே தனிப்பட்ட பிரச்சினை காரணமாக கடமையின் போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றியதனால் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக பலாலி படைத் தலைமைய ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சி.சிவரூபன் ஆகியோர் சடலங்களைப் பார்வையிட்டதுடன், யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா சடலம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலங்களை (19) ஆம் பக்கம் பார்க்க

# கனேடிய பிரஜையொருவர் பரந்தனில். வெட்டிக்கொலை

(கிளிநொச்சி)

இலங்கையைச் சேர்ந்தவரும், கனேடிய பிராஜாவுரிமை பெற்றவருமான குடும்பஸ்தர் நேற்று முன்தினம் இரவு பரந்தனிலிலுள்ள அவரது வீட்டில் வைத்து கோரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

கமறிக்குடா குமரபுரம் பரந்தனைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மகேந்திரராசா (வயது-52) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவராவார்.

கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் கனடாவில் குடியேறிய இவர், வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தை அடுத்து, கடந்த 2010 ஆம் ஆண்டு (19) ஆம் பக்கம் பார்க்க

# ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் யாழ்ப்பாணத்தில் அலுவலகம்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று ஸ்ரீல ங்கா எயார் லைன்ஸ் நிறுவனத் தின் விமானப்பயணச் சீட்டு விற் பனை நிலையமொன்று அமைச் சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வைபவ ரீதியாகத் திறந்துவைக் கப்பட்டது.

30 வருடங்களின் பின்னர் திறக் கப்படும் இவ் அலுவலகம் யாழ். ஸ்ரான்லி வீதியில் இல.272 நாக விகாரைக்கு முன்பாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்று முற் பகல் 10.00 மணிக்கு ஆரம்பமா கிய இவ் அலுவலகத் திறப்பு விழாவில் . அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்துவைத்ததுடன், அலுவல கத்தையும் நாடாவெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து சமயத் தலைவர்களின் ஆசியுரையைத் தொடர்ந்து முதலாவது விமானப் பயணச்சீட்டை அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா பயணி ஒருவ ருக்கு வழங்கி அலுவலகத்தின் செயற்பாட்டினை வைபவ ரீதி யாக ஆரம்பித்துவைத்தார்.

இக்கிளை அலுவலகமானது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச் சிப் பகுதிகளைச் சேர்ந்த வாடிக் கையாளர்களுக்கு விமானப் பயணத்துடன் தொடர்புடைய அனைத்துச் சேவைகளையும் வழங்கவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் அரச அதிகா ரிகளும், ஸ்ரீலங்கன் ஏயார் லைன் ஸ்சின் பிரதம சந்தைப்படுத்தும் அதிகாரி ஜி.டி.ஜெயசீலன் மற்றும் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி கள் கலந்துகொண்டனர். (பா)


# கலந்துரையாடல்

வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலை யங்களுடனான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை முற்பகல் 10.00 மணிக்கு வலி. கிழக்குப் பிரதேச சபை தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்து ரையாடலில் வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலைய நிர்வாகிகளைக் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறும் அவ் வாறு அவர்கள் சமுகமளிக்க முடியாத சந்தர்ப்பத்தில் தங்களின் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரை அனுப்பி ஒத்துழைக்குமாறும் வலி. கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் அ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

# அனுமதியின்றி மதுபான விற்பனை

## இருவர் விளக்கமறியலில்

அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் வைத்திருந்த நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. குருநகர் பகுதி யைச் சேர்ந்த இரு நபர்களும் 180 மில்லி லீற்றர் மற்றவர் 3750 மில்லி லீற்றரும் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ். பொலிஸா ரினால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினர். மேற்படி வழக் கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா இருவரையும் 18 ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட் டார். (எஸ்)



நேற்று நடைபெற்ற நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் தேர் உற்சவத்தின்போது சுவாமி தேருக்கு எழுந்தருளி வருவ · தையும், தேர் வீதிவலம் வருவதையும் காணலாம். (137)


## சிறு விளம்பரம்

### காணி விற்பனை

உடுவில் தெற்கு, மானிப்பாய் புதுமடம் சித்திவிநாயகர் ஆலய இடது புறத்தில் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்ப னைக்கு உண்டு.

தொடர்பு : 0779276130
0773391377 (R/132)



## அறிவித்தல்

**18 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்**
**101/25 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

இல.101/25, ஸ்ரான்லி வீதியில் (மக்கள் வங்கி ஒழுங்கை) பதினெட்டு (18) மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகர சபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. எனவே இத்தொலைத் தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத் தொலைத்தொடர்பு இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத்திகதியிலிருந்து பதினா ன்கு (14) நாட்களினுள் யாழ். மாநகர சபைக்கு அறியத்தரு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மாநகர முதல்வர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(C/1559)


# கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு தேசிய விருது
# சுயதொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம்

இலங்கை கைத்தொழில் அபி விருத்திச் சபை தேசிய விருதிற் குரிய கைத்தொழில் முயற்சியா ளர்களைத் தேர்வு செய்வதற்காக நாடளாவிய ரீதியில் நடாத்தும் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில் மற் றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சின் வழிகாட்ட லில் "ஷில்ப - 2012 கர்மாந்த" தேசிய கண்காட்சி விற்பனை நிக ழ்வு ஓகஸ்ட் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 02 ஆம் திகதிவரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலை யத்தில் நடைபெறவுள்ளது. இத னையொட்டி மேற்படி விருதுகள் வழங்கப்படவுள்ளன. சிறிய மற் றும் நடுத்தரக் கைத்தொழில் முயற் சியாளர்கள் மற்றும் கைத் தொழில் சார்ந்த சுயதொழில் முயற்சியாளர்கள் தேசிய விரு துக்காக விண்ணப்பிக்க முடியும்.

சிறிய, நடுத்தர கைத்தொழில் துறை மற்றும் சுயதொழில் முய ற்சிகள் துறையில் மிகச்சிறந்த தொழில் முயற்சியாளர்களாகத் தெரிவுசெய்யப்படுபவர்களுக்குத் தங்க விருதுடன் ரூபா ஐம்பதா யிரம் (50000) பணப்பரிசும் வழங் கப்படும்.

15 கைத்தொழில் பிரிவுகளில் தேசிய மட்டத்தில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெறு வோருக்கு முறையே ரூபா 30000, 20000 மற்றும் 10000 பணப் பரிசில்களும் வெள்ளி விருதுக ளும் வழங்கப்படும்.

மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு ரூபா 10000 பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும். விண்ணப்பங் களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்திலும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. விண் ணப்பதாரிகள் தங்களது விண் ணப்பங்களை மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கு மாறு கோரப்பட்டுள்ளனர். (எஸ்)


## அறிவித்தல்

**24 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்**
**62/20 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

இல. 62/20, ஸ்ரான்லி வீதியில் (24) இருபத்திநான்கு மீற்றர் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர் பாக மாநகர சபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத் தொடர்புக்கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத் தொலைத் தொடர்பு இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத் தினை இத்திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகர சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**மாநகர முதல்வர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(C/1560)



## அறிவித்தல்

**100 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்**
**51, ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

இல. 51, ஆனந்தனவடலி வீதி, கொழும்புத்துறையில் (100) நூறு மீற்றர தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர பாக மாநகர சபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. எனவே இத்தொலைத் தொடர்புக்கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத் தொலைத்தொடர்பு இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத் தினை இத் திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகர சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**மாநகர முதல்வர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(C/1561)


# இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பணக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான தகராறில் ஈடுபட்ட இரு இளைஞர்களை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. நீர்வேலிப் பகுதி யைச் சேர்ந்த குறித்த இருவரை யும் தகராறின்போது கோப்பாய் பொலிஸார் கைதுசெய்து நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

தொலைதூர பார்வைகள் பார்க்கிறேன்.
சிலசமயம் சுவர்களையும் ஊடுருவி காண்கிறேன்.
என் கையின் ரேகைகள் மட்டும் புரியவில்லை இன்னும்.
- வாஜ்பாய்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வேடதாரிகளுக்கு வந்த வில்லங்கம்!

அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெற வேண்டிய கிழக்கு மாகாண்சபைத் தேர்தலை இந்த ஆண்டே நடத்த, ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த 2007ஆம் ஆண்டு கிழக்கில் போர் முடிவடைந்த கையோடு, அரசாங்கம் அங்கு மாகாணசபை தேர்தலை நடத்தியது. கிழக்கு மாகாணத்தில் சகஜ நிலைமை திரும்பியதை வெளி உலகுக்கு காண்பிக்க வேண்டிய தேவை அரசுக்கு இருந்தது. அங்கு தமிழ் முதலமைச்சர் ஒருவர் தெரிவானார்.

ஆனால், இம்முறை முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் கட்சிகள் அனைத்துமே அரசாங்கத் தரப்பில் இருப்பதால் தமிழ் முதலமைச்சர் என்பது கேள்விக்குறிதான். கடந்த மாகாணசபைத் தேர்தலிலும் முஸ்லிம் பிரதிநிதிகளே அதிகம் தெரிவாகியிருந்தார்கள்.

தமிழர், முஸ்லிம், சிங்களவர் மற்றும் மலையக தமிழர்களும் வசிக்கும் கிழக்கு மாகாணத்தில், அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரே அணியாக செயல்பட்டாலும் அவர்கள் வெற்றி பெற முடியாது. கடந்த 2008ஆம் ஆண்டு தேர்தலை த.தே.கூட்டமைப்பு புறக்கணித்ததற்கு இந்த உண்மையும் ஒரு காரணம்.

இம்முறை கூட்டமைப்பு, ஐ.தே.க.வுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் நிற்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பச்சைத் தொப்பிகளோடு கொண்டாடிய மேதினம், ரணிலுடன் கைகோர்த்து தேசியக்கொடி ஏந்தியமை எல்லாம் இதற்கான அறிகுறிகளாக இருக்கலாம்.

ஆனால், கிழக்கு மாகாண தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிட்டால், "வட-கிழக்கு இணைப்பு" குறித்த தனது நிலைப்பாட்டை அது மாற்றிக்கொண்டு விட்டது என்பதாகி விடும். அதே சமயம், தேர்தலைப் புறக்கணித்தால், தமிழ் பகுதிகளில் அரசியல் சகஜ நிலை திரும்புவதில் கூட்டமைப்பிற்கு விருப்பம் இல்லை என்று சர்வதேசம் எண்ணும்.

ஆகவே, கிழக்கில் அரசாங்கம், முஸ்லிம்கள், சந்திரகாந்தன் என்ற கூட்டை எதிர்கொள்ள கூட்டமைப்பிற்கு ஐ.தே.கட்சியுடன் கைகோர்த்து தேர்தலில் நிற்பது தேவையாக இருக்கும். பிரச்சினை என்னவென்றால் சிங்களக் கட்சிகள், சிங்கள மக்கள், சிங்கள தேசியம் எல்லாவற்றுக்கும் எதிராகத் தீவிர தமிழ் இனவாதத்தைக் கக்கி வரும் த.தே.கூட்டமைப்பினர் ஐ.தே.க. போன்ற ஒரு இனவாதக் கட்சியுடன் குலாவுவதை எப்படி நியாயப்படுத்த முடியும்? என்பதாகும்.

1947ல் இந்திய வம்சாவழி மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தெடுத்தது ஐ.தே. கட்சியே.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தது.

1958, 1977, 1981, 1983 ஆண்டுகளில் கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட அனைத்து இனரீதியிலான வன்செயல்களையும் தலைமை தாங்கி நடத்தியது.

1981ல் யாழ்.பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், யாழ். எம்.பி யோகேஸ்வரனின் வீடு, நாச்சிமார் கோவில் தேர், யாழ்.பழைய சந்தை, பஸ் நிலையக் கடைகள் என முழு யாழ்ப்பாண நகரையுமே எரித்துச் சாம்பராக்கியது. அப்போதைய அரசில் ரணில் விக்கிரமசிங்க முக்கிய அமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1957ல் பண்டா – செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்ற விடாமல் கண்டி யாத்திரை.

2000ம் ஆண்டில் சந்திரிகா அரசு கொண்டு வந்த நல்லதொரு தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவிடாமல் முறியடித்தது.

1977ல் பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசே இனப்பிரச்சினையை கோரமான யுத்தமாக மாற்றி, 30 வருடங்களாக தமிழ்மக்களின் வாழ்க்கையை இரத்தக்களரியாக மாற்றியது.

இவர்களோடு சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்துக் கொண்டுதான், "தமிழ்மக்களே சிங்களவனுக்கா உங்கள் வாக்கு?" என்று கேட்கும் வேடதாரிகளாக வலம் வருகிறது த.தே.கூட்டமைப்பு.

– ஆசிரியர்

# பௌத்த தர்மம் கூறியுள்ள பொறுமையை கடைப்பிடியுங்கள்

(கொழும்பு)

பௌத்த தர்மத்தில் கூறப்பட்டுள்ள பொறுமையைக் கடைப்பிடிக்கப் பழகிக் கொண்டால் எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்ள முடியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலகில் மிகக்கொடிய பயங்கரவாதத்தைத் தோற்கடித்த சந்தர்ப்பத்தில்கூட பொறுமையுடன் செயற்பட்ட தருணம் முக்கியத்தும் வாய்ந்ததாக இருந்தது.

2600 சிறி சம்புத்த ஜயந்தி வருட பூர்த்தியை முன்னிட்டு அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொறுமையினாலேயே ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாறுடைய பல்வேறு விடயங்களை உருவாக்க முடிந்தது. குரோத உணர்வுகளைத் தூண்டும வகையில் எவரும் செயற்படக் கூடாது.



புத்திசாதுரியமாகவும், பொறுமையுடனும் செயற்படுவதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## சிறுநீரக நோயால் 3000 பேர் மரணம்

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோய் காரணமாக 2000 ஆம் ஆண்டு முதல் இதுவரை மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாக வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

தற்போது சுமார் 12 ஆயிரம் பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் டபிள்யூ அத்தபத்து குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய மாகாணத்தில் மாதாந்தம் சுமார் 50 நோயாளர்கள் பதிவாவதாக தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் மாவட்டத்தின் மதவாச்சி, பதவியா, கெபித்திகொல்லாவ, கலேன்பிந்துனுவெவ ஆகிய பகுதிகளில் அதிக நோயாளர்கள் பதிவாவதாக திணைக்களப் பணிப்பாளர் தெரிவிக்கிறார். பொலன்னறுவை மாவட்டத்திலும் அதிக சிறுநீரக நோயாளர்கள் பதிவாவதாக மேலும் சுட்டிக் காட்டப்படுகிறது.

## தனியார் பேருந்துகளில் 30 கோடி ரூபா கப்பம்

(கொழும்பு)

நாட்டில் தனியார் பேருந்துகளில் கப்பம் பெற்றுக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாகவும், மாதாந்தம் 10 கோடி ரூபாவுக்கும் அதிக பணம் கப்பமாக பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக பேருந்து உரிமையாளர்கள் மாதாந்த வருமானத்தில் 25 வீதத்தை இழக்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் வினவினோம்.

கப்பம் பெற்றுக்கொள்ளும் சம்பவங்கள் தொடர்பில் அறியக்கிடைத்தால் 1955 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தமக்கு அறிவிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்தார். இல்லாவிடின் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு நேரடியாக அறிவிக்குமாறும் அவர் கூறினார்.

## 10 , 2000 ரூபா நாணயத்தாள்கள் ஓய்வுக்குச் செல்கின்றன

(கொழும்பு)

இலங்கையில் 10 ரூபா மற்றும் 2,000 ரூபா நாணயத் தாள்கள் இனிமேல் அச்சடிக்கப்படமாட்டாதென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று தெரிவித்துள்ளார்.

10 ரூபா நாணயக் குற்றியொன்று வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். இனிமேல் நாம் 10 ரூபா தாள் வெளியிடமாட்டோம். பதிலாக குற்றி நாணயத்தையே வெளியிடுவோம். இருப்பினும் 2,000 ரூபா தாளையும் இனிமேல் அச்சடிக்க மாட்டோம். நாம் ஏற்கெனவே 20 ரூபா, 50 ரூபா, 100 ரூபா, 500 ரூபா, 1,000 ரூபா, 5,000 ரூபா தாள்களை வெளியிட்டுள்ளபடியால் 2,000 ரூபா தாளுக்கான தேவையில்லை எனவும் அவர் கூறினார்.

2010 இல் 13.6 மில்லியன் அழுக்கடைந்த நாணயத் தாள்களையும் 2011 இல் 137 தாள்களையும் மத்திய வங்கி சுழற்சியிலிருந்து அகற்றியுள்ளது. இவ்வாறு மீளப்பெறும் தாள்களுக்குப் பதிலாக காலத்துக்கு காலம் புதிய தாள்கள் வெளியிடப்படுவதாக அஜித் நிவாட் கப்ரால் கூறினார்.

## 20 பாகிஸ்தான் கைதிகள் சொந்த நாட்டிற்கு மாற்றம்

(கொழும்பு)

போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுக் காரணமாக இலங்கையில் ஆயுட் தண்டனை வழங்கப்பட்டுள்ள 20 பாகிஸ்தான் பிரஜைகள் தங்களது சிறைக்காலத்தை பாகிஸ்தானில் கழிக்கும் முகமாக அவர்கள் பாகிஸ்தானுக்கு மாற்றப்படவுள்ளனர்.

சிறைக் கைதிகளை மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கையும், பாகிஸ்தானும் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளன. இந்த 20 பாகிஸ்தான் சிறைக்கைதிகளுடன் மேலும் 50 பாகிஸ்தானியர்கள் இதே குற்றத்துக்காக சிறையில் உள்ளனர்.

## உதவிப் பதிவாளரை இடமாற்றுமாறு விபுலானந்தா மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரை உடனடியாக இடமாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிஷேட்ட உதவிப் பதிவாளரினால் எந்த விதமான அபிவிருத்தி வேலைகளும் கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெறவில்லை. அத்துடன் மாணவர்களின் நலன்களில் இவர் அக்கறை செலுத்தவில்லை. இதனாலேயே குறித்த உதவிப் பதிவாளரை உடனடியாக இடமாற்ற வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜாவை தொடர்புகொண்டு வினவிய போது,

பல்கலைக்கழக வேலை நிமிர்த்தம் தற்போது கொழும்பில் தங்கியுள்ளேன். மட்டக்களப்புக்கு திரும்பியவுடன் குறித்த பிரச்சினை தொடர்பில் மாணவரகளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளேன். இது தொடர்பாக நேற்றுக் காலை மாணவர்களுடன கலந்துரையாடினேன் என்றார்.

இதேவேளை, சுவாமி விபுலானந்தா அழகியற கற்கைகள் நிறுவகத்தின் புதிய பணிப்பாளர் கலாநிதி எம்.பிரேம்குமாரை தொடர்புகொண்டு இது தொடர்பில் வினவியபோது,

கூட்டமொன்றுக்காக கொழும்பில் தங்கியுள்ளேன். இம்மாணவர்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றேன். இந்நிலையத்தின் பணிப்பாளராக நான் பதவியேற்று ஒருவாரமே கடந்துள்ளது. இந்நிலையில் மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற கால அவகாசம் தேவை என்றார்.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் கடந்த மாதம் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். இதனையடுத்து பணிப்பாளர் இடமாற்றப்பட்டு புதிய பணிப்பாளராக கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பதில் உபவேந்தர் கலாநிதி பிரேம்குமார் அண்மையில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் முதன் முறையாக மின்விநியோகம்



(கிளிநொச்சி)

கண்டாவளை - தருமபுரம் ஆகிய பகுதிகளுக்கு முதன் முறையாக .மின்விநியோகம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வடக்கின் வசந்தம் கிராமிய மின்வழங்கல் திட்டத்தின் கீழ் மின்வலு சக்தி அமைச்சும் இலங்கை மின்சார சபையும் செயற்படுத்திய கண்டாவளை, தர்மபுரம் ஆகிய பகுதிகளுக்கான மின் இணைப்பை யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். இம்மின் இணைப்பிற்காக 100.5 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உரையாற்றுகையில்,

பல தசாப்தங்களாக அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாத ஏக்கத்துடன் காத்திருந்த எமது மக்களின் தேவைகளை இன்று நாம் படிப்படியாக நிறைவு செய்து வருகின்றோம். தருமபுரம் புளியம்பொக்கணை கண்டாவளை போன்ற ப்குதிகளுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளுக்கமைவாக நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து, வீடமைப்பு, மருத்துவம், கல்விவசதி போன்ற அனைத்து தேவைகளையும் நிறைவு செய்துள்ளோம். அத்தோடு பிரதான வீதிப்புனரமைப்பு உள்வீதிகளின் புனரமைப்பு போன்ற செயற்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகி இடைநிறுத்தப்பட்டிருக்கும் வீதிகளைத் தொடர்ந்து புனரமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் நாம் மக்களிடமிருந்து வாக்குகளை கவருவதற்கான வழிமுறையாகக் கருதவில்லை. எமது மக்களுக்கு ஆற்றுகின்ற பணியாகவே நாம் கருதுகின்றோம் என்றார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன், வடக்கின் வசந்தம் மின்விநியோக திட்ட முகாமையாளர் குணசீலன் ஆகியோரும் மற்றும் மின்சார சபையின் மின் அத்தியட்சர்கள், மின் பொறியியலாளர்கள் ஆகியோரும் தருமபுரம் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## பூநகரியில் வெசாக்

(பூநகரி)

பூநகரி வாடியடி மைதானத்திலும், பூநகரி கோட்டை மைதானத்திலும் கடந்த ஒரு வாரமாக வெசாக் பந்தல்களை அமைக்கும் பணிகளில் படைத்தரப்பினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இராணுவத்தினரின் ஒவ்வொரு படைப்பிரிவினரும் வெவ்வேறு இடங்களில் பல்வேறு கலை அம்சங்கள் பொருந்திய காட்சிகளைக் கொண்ட பந்தல்களை அமைத்து வருகின்றனர்.

இவை அனைத்தும் இன்று ம்க்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (112)

## "நிமிர்வு" அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

அநாதரட்சகனின் "நிமிர்வு" சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு இன்று பி.ப. 3 மணியளவில் நடைபெறவுள்ளது. நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரவு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூல் அறிமுகவுரையை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார். (112)

## பூநகரிப் பிரதேசத்தில் நடமாடும் சேவை

(பூநகரி)

பூநகரிப் பிரதேச செயலகத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தொலைத்தவர்கள் உரிய ஆவணங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5 வர்ணப் புகைப்படங்கள், பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதி, பிரதி மற்றும் 15 ரூபா பெறுமதியான முத்திரை என்பனவற்றுடன் சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் பிறப்பை உறுதிப்படுத்தக் கூடிய வைத்தியசாலை அறிக்கை, கிராம சேவையாளர் அறிக்கை, தோட்டங்களில் பிறந்திருந்தால் கங்காணியின் அறிக்கை அல்லது பிறந்த நபரின் சாதகம் என ஏதாவது ஒரு ஆவணமாவது கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவை எதுவும் இல்லாத பட்சத்தில் அன்றைய தினம் நடமாடும் சேவையில் உள்ள அதிகாரிகளிடம் தகுந்த ஆலோசனையைப் பெற்று அடையாள அட்டை பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (149)

## மக்கள் பணியில் பாரபட்சம் கிராம சேவையாளர் இடமாற்றம்

(முழங்காவில்)


உதவி வழங்குவதில் பாரபட்சம்' காட்டிய கிராம சேவையாளருக்கு உடனடி இடமாற்றம் வழங்க பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார். பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஜெயபுரம் பகுதி கிராம சேவையாளருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச செயலகத்தின் ஜெயபுரம் உப அலுவலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற பொது மக்களுடனான சந்திப்பில் மக்களின் குற்றச்சாட்டை அடுத்து மேற்படி நடவடிக்கை பிரதேச செயலர் வி.வசந்தகுமார் மேற்கொண்டார்.

மேலும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு வாழ்வாதார உதவி வழங்கும் வேலைத்திட்டங்களுக்கும் கிராம சேவையாளருடன் பிரதேச செயலகத்தின் பிரதிநிதி, சிவில் இராணுவப் பிரதிநிதி மற்றும் பொலிஸ் பிரதிநிதி ஆகியோர் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவும் எட்டப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் 651 ஆவது படையணி கட்டளைத் தளபதி கேணல் சந்திரசேகரா, நாச்சிக்குடா பொலிஸ் பொறுப்பதிகாரி சுஜீவநிசாந் பியசேன, ஜெயபுரம் சிவில் இராணுவ அதிகாரி மேஜர் சமிந்த, கிராம அலுவலர்கள் மற்றும் ஐநூறுக்கும் அதிகமான பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (149)

## காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும்



(யாழ்ப்பாணம்)

அரியாலை-பூம்புகார் பகுதி மக்கள் தமது கிராம அபிவிருத்தி மற்றும் அரச காணிகளில் வசிப்போர் காணி உறுதிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக எழுத்து மூலம் தமது கோரிக்கைகளை முன்வைத்தால் அவற்றை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டுவந்து உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும் என ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திர தாசன் தெரிவித்துள்ளார்.

அரியாலை - பூம்புகார் சன சமூக நிலையப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற போது அதில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது அமைப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பூம்புகார் பிரதேசத்துக்கான மின் இணைப்புக்கள் விரைவில் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. நல்லூர் பிரதேச சபை ஆளும் கட்சியினர் இப்பகுதிகளின் வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு ஆர்வம் காட்டாத போதிலும் அமைச்சர் டீக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றார்.

## பூநகரி - நல்லூரில் 70 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கல்

(முழங்காவில்)

பூநகரி - நல்லூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள 70 விவசாயிகளுக்கு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டது.

சென்ற வாரம் சிறுவர் நிதியத்தின் உதவித் திட்டத்தின் கீழ் 70 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் 150 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்கான பல்வேறு வகையான மரக்கறி விதைப் பொதிகளும் வழங்கப்பட்டது. பயனாளிகளை கமக்கார அமைப்பினரும் நல்லூர் கிராம சேவை அலுவலரும் இணைந்து தெரிவு செய்திருந்தனர். (112)



ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு கேலிச் சித்திரக் கலைஞர் பயஸ் அவர்களின் கேலிச் சித்திரம் அடங்கிய "காலக் கிறுக்கல்கள்" நூலின் சிறப்புப் பிரதியை திருமதி பயஸ் தொழிலதிபர் இ.ச.பேரம்பலத்திற்கு வழங்குவதைக் காணலாம். (சுமித்தி)

## பூர்ணிமா தினம்

(யாழ்ப்பாணம்)

பூர்ணிமா தினம் இன்று அதிகாலை 4.45 மணி முதல் நண்பகல் வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்யசாயி சேவா நிலையத்தில் இந்நிகழ்வில் ஓம்கணும், காயத்திரி மந்திரம், வேதபாராயணம், பஜனை என்பனவும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி சிவகெளரி சிவகுருநாதனின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

## வணிக நிலையங்களுக்கு முன்னால் நீர் தெளிப்பதால் பாதசாரிகள் அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வணிக நிலையங்களுக்கு முன்பாகத் தண்ணீர் தெளிக்கும் செயற்பாடுகளினால் அவ்வீதிகளினால் செல்லும் பயணிகள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். காலை வேளைகளில் சில வர்த்தகர்கள் தமது வணிக நிலையங்களைத் திறந்து தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிலையங்களின் முன்பகுதியைக் கழுவுவதோடு அதற்கு முன்பாகவுள்ள வீதிகளிலும் தண்ணீர் தெளிப்பதால் பாதசாரிகள் பலர் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (138)

# உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும்

(வவுனியா)


உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பது மட்டுமன்றி அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுமே கைத்தொழிற்பேட்டையின் நோக்காக இருக்க வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கைத்தொழிற்பேட்டைக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டு பேட்டையின் கீழான பல்வேறு தொழிற்துறை சார்ந்தவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தொழிற்துறை நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் அறிவுறுத்தல்களுக்கமையவே செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான நிறுவனங்கள் ஊடாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுவதுடன், அவர்களது வாழ்வாதாரமும் மேம்படக் கூடியதாக இருக்கும் என்பதுடன் அதுவே கைத்தொழிற்பேட்டையின் நோக்காகவும் இருக்க வேண்டுமென்றும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது இருந்து வருகின்ற அரசினது கட்டுப்பாடுகளை அமைச்சரவைப் பத்திரம் மூலம் நீக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

இதனிடையே தொழிற்சாலைகளினது சுத்தம் சுகாதாரம் தொடர்பிலும் ஒவ்வொருவரும் அதிக கவனம் எடுக்க



வேண்டும். அதன் மூலமே அந்தந்த நிறுவனங்களது அழகும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் என்பதுடன் அவற்றின் மூலம் சிறந்த உற்பத்திகளையும் பெற முடியும் என்று தெரிவித்த அமைச்சர் அவர்கள் உள்ளூர் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறு இடர்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் அவற்றுக்கு துறைசார்ந்த அதிகாரிகள் ஊடாக உரிய வகையில் தீர்வு காணப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார்.

அத்துடன் தொழில் நிறுவனங்களை சிறந்த உற்பத்தி நிலையங்களாக மாற்றியமைத்து அதனூடாக அதுசார்ந்த குடும்பங்களினது பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனத் தெரிவித்ததுடன் தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் பொதுமுகாமையாளர் ஜஸ்மின் மன்னப்பெருமன ஈ.பி.டி.பி.யின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரகு ஆகியோர் உடனிருந்தனர்.

# டி.என்.ஏ பரிசோதனை

சிறுமி ஒருவரை பாலியல் வன்முறைகுட்படுத்திய இளைஞனை டி.என்.ஏ பரிசோதனைக்குட்படுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த 7 வயது சிறுமியொருவரை 18 வயதுடைய இளைஞன் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் 3 மாதம் கழித்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் இளைஞரை டி.என்.ஏ பரிசோதனைக் குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் சட்டத்தரணி கே.சுகாஸ் ஆஜரானார். (137)

# வேலைக்கு சென்ற வீட்டில் திருடியவர் சிக்கினார்


காரைநகர் மணற்பிட்டிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கூலி வேலைக்கு சென்று வந்த வேலையாள் ஒருவர் வீட்டு உரிமையாளர் வீட்டில் இல்லாத வேளை திருட்டில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த புதன் கிழமை நண்பகல் வீட்டு உரிமையாளரான பெண் வீட்டில் இல்லாத வேளை அவரது மருமகன் தற்செயலாக வீடு பார்க்க சென்ற போது காரை நகரைச் சேர்ந்த கூலியாள் வீட்டினுள் இருப்பதை அறிந்து கொண்ட மருமகன் அவரை தந்திரமாக பிடித்து மரத்தில் கட்டிய பின் அவரை விசாரனை செய்துள்ளார்.

மூவர் வந்ததாகவும், இருவர் ஓடிவிட்டார்கள் எனவும், தாங்கள் மூளாய்ப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், தாங்கள் மூவரும் வேறு இடங்களில் களவாடுவதாகவும், அப்பொருளை மூளாய்ப் பகுதிக்கு கொண்டு சென்றே பகிர்ந்து கொள்வதாகவும், ஒப்புக் கொண்டுள்ளார்.

கட்டிவைத்த நபரையும் தப்பி ஓடியவர்களின் விபரங்களையும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் பொது மக்கள் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர். (50)

## பரமர் சங்கமம்



யாழ்.குடா நாட்டில் வீதிப் போக்குவரவு முறைகளை தெரிந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றனர்? இப்படி கேட்டா நீங்க ஆளையாள் பாத்து முளிக்கத்தான் செய்வீர்கள்.

இப்புடிப்பாப்பம் நூற்றுக்கு எத்தனை பேர் இருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஒரு ஐம்பது பேர்: அப்புடித்தான் வைத்துக் கொள்வோம்.

வீதிக்கு வந்து பாருங்கள்: அப்புடி இல்லை. இருபத்தைந்து பேருகளும் தேறாது. ஆனால் வீதிப்போக்கு வரவு முறைகளைத் தெரிந்தவர்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து போர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாம் ஏன் வீதிக்கு வந்தால் இப்புடி தடுமாறுகிறார்கள் எண்டால் வீதிகளில் பயணிக்கும் ஏனையோரின் தவறுகளைத் தாமும் கடைப்புடிப்பதால் எண்டது தெரியவரும்.

இடது கை மார்க்கமாக வீதிகளில் சென்று வரவே வீதி ஒழுங்கு முறைகள் தெரிவிக்கின்றன. அதனைக் கடைப்பிடித்துச் செல்கின்றவரை எதிரில் வருகின்றவர் பிழையாக வழிப்படுத்துவதைப் பரவலாக காணக்கூடியதாக இருக்கின்றது.

இடதுகை மார்க்கமாக எதிரில் வருபவர் ஒரு சந்திப்பில் அந்த இடது கை வழக்கத்தைக் கைவிட்டு வலது கை மூலைக்கு வாகனத்தை உதாரணமாக சைக்கிள், மோட்டார் சைக்கிள்களைக் கொண்டு சென்றே மற்றொரு வீதியில் நிலையெடுக்கப் பார்க்கிறார். இடது கை ஒழுங்கில் வந்தவரும் பிழையாக வலது கை மூலையை இன்னொரு வீதிக்கு வாகனத்தை கொண்டு செல்ல முனைபவரும் மோதும் நிலைமை தோன்றுகிறதல்லவா?

இடது கை ஓட்டத்தில் வருபவர் அதே இடது கை மார்க்கத்தில் மற்ற வீதியை எடுப்பதற்கு வருவாராகில் மிகவும் தெளிவாக இருபக்க நிலைமைகளை அறிந்து வீதியை மாற்றிக் கொள்ளலாம்.

இந்தஅளவுக்குப் பொறுமை இல்லாமல் பெருமளவானவர்கள் வலது பக்க மூலைக்கு வாகனத்தை இட்டுச் செல்கையில் தொடர்ந்து தொடர்ந்தும் சிலகாத தூரம் அதே வலதுகை பக்கத்தில் பயணிக்க நேர்கிறது.

இதனால் இடதுகை ஓட்டமாக வருபவர் தாறுமாறவும், விபத்துக்குள்ளாகவும் நேர்கிறதைப் பெரும்பாலும் காணலாம்.

சமீபத்தில் ஸ்ரான்லி வீதி வின்ஸர் சந்தியில் இடது கைப்பக்கமாய் போய்க்கொண்டிருந்தேன்.

சந்தியில் நெருக்கடியைப் பாத்து வீதிக்கரையில் சைக்கிளை நிறுத்தி இறங்கினேன். வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் என்னோடு வந்து அருவிக்கொண்டு மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு "என்னையா பார்த்து வாறேல்லையோ:" எண்டு கேட்டான்.

என்ன பின்னால வாற ஆள் முன்வாகனத்தை பார்த்து வாறதோ... நான் பின்னால திரும்பிப் பார்ப்பதோ.... எண்டு கேட்டதும் தான் அவனுக்கு தன்னுடைய பிழை உறைச்சுது. உப்புடித்தான் பாருங்கோ.... வாகனம் முன்னால போகும் அதனைச் செலுத்திறவையின்ர பார்வை பின்னால போகும் இண்டைய யாழ்ப்பாண வீதிப்போக்கு வரவு இந்த லட்சணத்தில நடந்தா என்ன நடக்கும் சொல்லுங்க பாப்பம்?

### – நெல் காணிகள் உவராவதை நிறுத்த–
# கடல் நீர் உட்புகுவதை தடுக்குமாறு நீர்ப்பாசன பொறியியலாளரிடம் மனு

(முழங்காவில்)

புநகரி - மன்னார் வீதியில் அமைந்துள்ள இரு பாலங்களால் கடல் நீர் உட்புகுந்து நெற்காணிகள் உவர் நிலமாக மாறிவிடுவதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளரிடம் மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடற்பெருக்கு நேரத்திலும் மாரிகாலத்திலும் கடல் நீர் ஆற்று வாய்க்கால் ஊடாக நல்ல நிலங்களைச் சென்றடைவதால் இந் நிலங்கள் உவர் நிலமாக மாறியுள்ளதால் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைக்கல்லாறு பாலம் ஊடாக கடல் உவர் நீர் சென்றடைவதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (112)

# மின்னியலாளர் இலவச பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி க.பொ.த (சா/த) வரை கல்வி கற்றிருத்தல வேண்டும், விண்ணப்ப முடிவுத திகதியன்று 16 - 35 வயதிற்குட பட்டவராக இருத்தல் வேண்டும். தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இல, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகமைகள் என்பவற்றை குறிப்பிட்டுச் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஸ்ணபாலன் அறிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(05.05.2012 –சனிக்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 23 ஆம் திகதி. சதுர்த்தசி பிற்பகல் 12.18 வரை. நட்சத்திரம் சித்திரை மரணயோகம் முற்பகல் 08.10 வரை. சித்திரா பூரணை விரதம், சித்திரகுப்த விரதம். இராகுகாலம் 08.56 - 10.26 வரை. சுபநேரம் 2.56 - 4.26 வரை. எமகண்டம் 1.26 - 2.56 வரை. குளிகைகாலம் 5.56 - 7.26 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சகாயம், போட்டி பெருமை அகலும், கல்வியில் ஊக்கம், அமோக விளைச்சல். |
| ரிஷபம் | போட்டியில் வெற்றி, சுபச்செலவுகள், ஸ்தல யாத்திரை, நினைத்தது எல்லாம் நடக்கும். |
| மிதுனம் | நல்ல தருனம், பெரியோர் நேசம், தலையீடுகளைத் தவிர்க்கவும், பெற்றோர் ஆலோசனை. |
| கடகம் | திடீர் நன்மை, கூட்டு முயற்சி, வாக்குவாதங்களைத் தவிர்க்கவும், சுபகாரியங்கள். |
| சிம்மம் | பிரயாண அனுகூலம், தொட்டதெல்லாம் துலங்கும், கடன்கள் குறையும், மதிப்பு உயரும். |
| கன்னி | வெற்றிகள் நாடிவரும், இடமாற்ற அலைச்சல், பணியில் இடையூறு, சிந்தித்துச் செயறபடவும். |
| துலாம் | சுகவாழ்வு, நண்பர் விரோதியாவார், தெய்வ வழிபாடுகளால்நன்மை, எதிர்பாராத இடமாற்றம். |
| விருச்சிகம் | எதிர்ப்பு அலைகள், குடும்பத்தில் ஒற்றுமை, உறவினர்களால் பிரச்சினை, இடையூறுகள். |
| தனுசு | தனதானிய வரவு, கௌரவமான பதவிகள், அவதூறுகள் மறையும், வெளியூர்ப் பயணம். |
| மகரம் | வாழ்வில் வசந்தம், அரச முயற்சிகளில் தடை, பொன்பொருள் சேரும், தொழிலில் போட்டி. |
| கும்பம் | உல்லாச பயணம், சுபகாரியங்கள் நடைபெறும், அவதானத்துடன் நடக்கவும், உழைப்பில் வெற்றி. |
| மீனம் | சந்திராட்டமம், புது முயற்சி கூடாது, நிதானம் கடைப்பிடிக்கவும், பிரச்சினை, தொழில் வளம். |

## தலைவர் யார்?

(மும்பை)
சர்வதேச கிரிக்கெட்சபை(ஐ.சி.சி.) தலைமைச் செயல் அதிகாரியாக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஹாரூன்லார்கட் 2008ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இருந்துவருகிறார். அவரது பதவிக்காலம் விரைவில்முடிகிறதுஅவருக்கு அடுத்த தலைமைச் செயல் அதிகாரி யார் என்பதை தேர்வு செய்வதற்கான ஐ.சி.சி.யின் நியமன குழுக் கூட்டம் அதன் தலைவர் சரத்ப வார் தலைமையில் மும்பையில் நாளை நடைபெறவுள்ளது.

தலைமைச் செயல் அதிகாரி பதவிக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபைத் தலைமைச்செயல் அதிகாரி டேவிட் கோலியர், ஐ.சி.சி.பொது மேலாளர் டேவ்ரிச்சர்ட் சன் உட்பட 4 பேர் பெயர் அடிபடுகிறது. இதில் கிரிக்கெட் நிர் வாகத்தில் அதிக அனுபவம் வாய்ந்த டேவிட் கோலியருக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.



# அனைத்து வகைப் போட்டிகளிலும் விளையாடத் தயார்

(பெங்களூர்)
மேற்கிந்தியத்தீவுகள் அணிசார்பாக அனைத்து வகையான போட்டிகளிலும் விளையாட தாம் தயாராகவுள்ளதாக அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

வானொலி சேவையொன்றுக்கு வழங்கிய செவ்வியை அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக ஒரு வருட காலமாக கிறிஸ் கெய்ல் அணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இந்நிலையில் அவர் இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

எனினும் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் குழாமில் கிறிஸ் கெய்ல் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

எனினும் சர்வதேச ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிகளுக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் கிறிஸ் கெய்ல் இணைத்துக் கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் சமசெட் அணியுடனான ருவென்ரி-20 கிரிக்கெட போட்டிகளுக்கான ஒப்பந்தத்தில் இருந்து மேற்கிந்தியவீரர் கெய்ல் விலகியுள்ளார். இங்கிலாந்துடன் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் இணைந்து கொள்வதற்கான நகர்வாக அவரின் இந்தச் செயற்பாடு அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஒலிம்பிக்கிற்குத் தகுதி



(கொழும்பு)
இலங்கை தேசிய பட்மிண்ரன் சம்பியனான நிலுக கருணாரத்ன லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கத் தகுதி பெற்றுள்ளதாக இலங்கை பட்மிண்ரன் சம்மேளனத் தலைவர் பராக்கிரம பஸ்நாயக்க சற்று முன்னர் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

சர்வதேச பட்மிண்ரன் பேரவையின் நிரல்படுத்தலில் நிலுக கருணாரத்ன 47 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதுடன், ஒலிம்பிக் தகுதிக்கான் நிரல்படுத்தலில் அவர் 29 ஆம் இடத்தில் உள்ளார்.

இதன் பிரகாரம் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதிபெற்ற மூன்றாவது இலங்கையராக நிலுக கருணாரத்ன விளங்குகின்றார்.

ஒலிம்பிக்கிற்குத் தகுதி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. சாதிக்க முற்படுவேன் என கருணாரத்ன தெரிவித்தார்.

# இன்று ஆரம்பமாகின்றது மாவட்ட மட்ட தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட தாச்சிப் போட்டி இன்றைய தினம் முதல் அடுத்த மாதம் நான்காம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி மற்றும் யாழ்ப்பாணம் மக்கள் வங்கி என்பனவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 15ஆவது ஆண்டு மாபெரும் மாவட்ட மட்ட தாச்சிப் போட்டி கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் 20இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொள்கின்றன. இன்றைய முதல் போட்டியில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணியை எதிர்த்து கைதடி மின்னொளி அணி மோதவுள்ளன.

வீரர்கள் சீருடையுடன் போட்டிகளில் பங்குகொள்ளவேண்டும் என்றும்,போட்டி ஆரம்பிப்பதற்கு 30 நிமிடத்திற்கு முன்னர் போட்டியில் பங்குபற்றும் அணி சமூகம் தரவேண்டும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## தாஜ்மகால் சுற்றுலா



(புதுடில்லி)
உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ் மஹாலை டில்லி அணியில் இடம்பெற்றுள்ள வெளிநாட்டு வீரர்கள் கடந்த வியாழக்கிழமை சுற்றிப் பார்த்ததோடு, புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.

தென்னாபிரிக்காவின் மோர்ன் மோர்கல், வான்டெர்மெர்வ், இலங்கை வீரர் ஜெயவர்த்தனா, நியூஸிலாந்தின் டெய்லர் ஆகியோர் ஆக்ராவில் அமைந்துள்ள தாஜ் மஹாலை சுற்றிப் பார்த்து அதிசயித்து மகிழ்ந்தனர்.

டில்லி அணிக்கு அடுத்த ஆட்டம் கொல்கத்தாவுடன் வரும் நாளை மறுதினம் தான் உள்ளது. அதனால் இப்போது கிரிக்கெட்டை மறந்துவிட்டு, ஊர் சுற்ற புறப்பட்டுவிட்டனர் இந்த வீரர்கள்.

இந்தச் சுற்றுலா மிகுந்த மகிழ்ச்சி அளித்ததாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன ஊடகவியாளர் ஒருவருக்கு கருத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## மும்மை இன்டியன்ஸ் வெற்றி

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 45ஆவது போட்டியில் மும்பை இன்டியன்ஸ் அணி ஒருஓட்டத்தால் த்ரில் வெற்றியொன்றை பெற்றுக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இன்டியன்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் 35 பந்துகளில் 34 ஓட்டங்களையும் ஜேம்ஸ் பிராங்ளின் 23 பந்துகளில் 25 ஓட்டங்களையும் டினேஷ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 22 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பூனே புவனேஷ் குமார் 3 ஓவர்களில் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஆஷிஷ் நெஹ்ரா 4 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அஷோக் டின்டா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 121 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பூனே வொரியர்ஸ் அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இறுதியில் 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் மிதுன் மன்ஹாஸ் ஆட்டமிழக்காமல் 34 பந்துகளில் 42 ஓட்டங்களையும்இ ரொபின் உத்தப்பா 18 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 4 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும்இ லசித் மலிங்க 4 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.முக்கிய கட்டத்தில் ஆட்டத்தின் போக்கைமாற்றிய லசித் மலிங்க போட்டியின் நாயகனாகத் தெரிவானார்.

# தென்னாபிரிக்காவில் பிறந்தவர் நியூசிலாந்து அணியில்



தென்னாபிரிக்காவைப்பிறப்பிடமாகக்கொண்ட சகலதுறை வீரர் நீல் வொக்னர் நியூசிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் நடைபெறவுள்ள போட்டிகளுக்கான அணியில் இவர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இதனிடையே ச ர்வதேச ஒருநாள் மற்றும் ருவென்ரி 20 போட்டிகளில் இருந்து பிரண்டன் மெக்கலத்திற்கு ஒய்வு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நான் தென்னாபிரிக்காவில் பிறந்தாலும் வளர்ந்து கொண்டது நியூசிலாந்தில்தான். நியூசிலாந்தின் கலாசாரம், பழக்கவழக்கங்களுக்கு நான் உட்பட்டுவிட்டேன். நியூசிலாந்து கிரிக்கெட் அணியில் இடம்கிடைத்தது மகிழ்ச்சி. கிடைத்த வாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஆடி அணியில் நிரந்தர இடம்பிடிக்க முயற்சிப்பேன். இதற்காக கடவுளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என நீல் வொக்னர் பத்திரிகைச் சந்திப்பில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# அதிக கோல் சாதனை

ஐரோப்பிய கால்பந்துப் போட்டியின் ஒரு சீசனில் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை பார்சிலோனா அணி நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி (24) படைத்துள்ளார்.

மலாகா அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் பார்சிலோனா அணி 4:1 என்ற கோல் கணக்கில் அபாரமாக வென்றது. இப்போட்டியில், ஹட்ரிக் கோல் அடித்து அசத்திய மெஸ்ஸி நடப்பு சீசனில் தனது கோல் எண்ணிக்கையை 68 ஆக உயர்த்தியதுடன், பேயர்ன் முனிச் வீரர் ஜெர்ட் முயல்லர் 1972,73 சீசனில் படைத்த சாதனையை முறியடித்தார்.

இந்த சீசனில் மெஸ்ஸி 9ஆவது முறையாக ஹட்ரிக் கோல் போட்டுள்ளார். எனினும், மற்றொரு லீக் ஆட்டத்தில் அத்லெட்டிக் பில்போ அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய ரியல் மாட்ரிட் அணி பார்சிலோனாவை பின்னுக்குத் தள்ளி சம்பியன் பட்டம் வெல்வதை உறுதி செய்தது.

ஸ்பெயின் முதல் டிவிஷன் கால்பந்துப் போட்டியில் ரியல் மாட்ரிட் அணி சம்பியன் பட்டம் வெல்வதை உறுதி செய்தது. நேற்று முன்தினம் இரவு நடந்த லீக் ஆட்டத்தில் அத்லெடிக் பில்போ அணியுடன் மோதிய ரியல் மாட்ரிட் 3:0 என்ற கோல் கணக்கில் அபாரமாக வென்று முதலிடம் பிடித்தது. அந்த அணிக்கு இன்னும் 2 லீக் ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. 32ஆவது முறையாக கோப்பையை வெல்லும் மகிழ்ச்சியில் பயிற்சியாளர் ஜோஸ் மவுரின்ஹோவை பந்தாடுகின்றனர் மாட்ரிட் வீரர்கள். இடது கோடியில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ.

## காயத்தால் அவதியுறும் மும்பை இன்டியன்ஸ்

(மும்பை)
ஐ.பி.எல் போட்டிகளில் பங்குபற்றி வரும் மும்பை இன்டியன்ஸ் அணி காயங்களால் அவதிப்பட்டு வருகிறது.

அவ்வணியின் முக்கியமான வீரர்களுள் ஒருவரான பொலாட் காயமடைந்துள்ளமையாலேயேஅவ்வணி புதிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதிடில்லி டெயா டெவில்ஸ் அணிக்கெதிராக இடம்பெற்ற போட்டியில் காயமடைந்த பொலாட், அதன் பின்னர் டெக்கான் சார்ஜர்ஸ்அணிக்கெதிராகஇடம்பெற்றபோட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை.

அதிரடி சகலதுறை வீரரான பொலாட், இத்தொடரில் துடுப்பாட்டத்தில் தொடர்ச்சியாகப் பிரகாசித்திருக்காத போதிலும், பந்துவீச்சாளராக மிகச்சிறப்பாகச் செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில் பொல்ட்டின் இழப்புக் காரணமாக அவ்வணி அணிச்சமநிலையைப் பேணுவதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

காயமடைந்துள்ள பொலாட், இன்னுமொரு வாரகாலத்திற்கு போட்டிகளில் பங்குபற்றமுடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்த அவ்வணியின் வீரர் ரொபின் பீற்றர்சன், அவர் இல்லாத இடத்தை நிரப்ப அதிக சிரத்தையுடன் விளையாட வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார். மும்பை இன்டியன்ஸ் அணி ஏற்கனவே லசித் மலிங்க, சச்சின் டெண்டுல்கர் ஆகியோரின் காயத்தால் அவதிப்பட்டதோடு, தற்போது வரை தென்னாபிரிக்காவின் ஹேர்சன் கிப்ஸின் காயம் காரணமாக அவரைப் போட்டிகளில் பங்குபெற வைக்க முடியாது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விசேட மாணவர்களின் விளையாட்டுப் போட்டி



(கரிப்பட்டமுறிப்பு)

விசேட கல்வி மாணவர்களின் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக வலயக்கல்வி அலுவலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுப்போட்டி மிகவும் சிறப்பான முறையில் மு/கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

இதனை விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி.சு. சர்வேஸ்வரநாதன் ஒழுங்குபடுத்தி நடாத்தினார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி டு. மாலினி வெனிற்றன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக திருமதி பாலிகா வீரசிங்க வைத்தியர் மாங்குளம் வைத்தியசாலை கலந்துகொண்டார். இந்நிகழ்வில் விசேட தேவையுடைய மாணவர்கள் 75 பேர் கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

## அளவெட்டி மத்தி சம்பியன்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச மட்டத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் அளவெட்டி மத்தி அணி சம்பியன் பட்டம் வென்றது.

தெல்லிப்பளை பொலிஸ் நிலையமும், தெல்லிப்பளை பிரதேச செயலகமும் இணைந்து புத்தாண்டைச் சிறப்பிக்கும் முகமாக நடத்திய பாரம் பரிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக கரப்பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது.

கடந்த 27ஆம் திகதி மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி அணி மோதியது.

மூன்று செட்களைக் கொண்ட இப்போட்டியில் அளவெட்டி மத்தி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் கருப்பானை இந்து இளைஞர் அணியும் மோதின.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 49-47 என்ற புள்ளிகள் அடிப்படையில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றது.

இதேவேளை, அன்றைய தினம் பாடசாலை அணிகளுக்கிடையிலான கரப்பந்து மற்றும் வலைப்பந்துக் காட்சிப் போட்டி நடத்தப்பட்டது.

கரப்பந்தாட்டக் காட்சிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலய அணியும் மோதின.

இதில் 2 - 0 என்ற நேர் செட் கணக்கில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற வலைப்பந்தாட்டக் காட்சிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும் மோதின. இதில் 29-13 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெலலிப்பளை யூனியன் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (93)

## கால்பந்து நடுவர்களுக்கு

# பயிற்சி வகுப்பு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திற்கு புதிதாக இணைக்கப்படவுள்ள நடுவர்களுக்கான மத்தியஸ்தர் வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இவ்வகுப்பில் ஒவ்வொரு கழகங்களிலிருந்தும் ஐந்து பேர் பங்குபற்ற முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

# உபதலைவராகத் தெரிவு



(கொழும்பு)

ஒலிம்பிக் பதக்கம் வென்றவரான சுசந்திக்கா ஜயசிங்க இலங்கை மெய்வல்லுநர் சம்மேளன உபதலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இம்முறை மெய்வல்லுநர் சம்மேளன தேர்தலில் ஆறு உப தலைவர்கள் பதவிக்கு 14 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்ததுடன், அவர்களின் பொதுநலவாய பதக்கம் வென்றவரான சுகத் திலகரத்னவும் உள்ளடங்கியிருந்தார். எனினும் நேற்று முன்தினம் நடைபெற்ற மெய்வல்லுநர் சம்மேளனத் தேர்தலில் சுகத் திலகரத்ன தோல்வியடைந்ததாக விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடகச் செயலாளர் ஷர்ஷ அபேகோன் கூறினார்.

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம் பருத்தித்துறை மெதடிஸ் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை சம்பியனானது.

இப்போட்டி கடந்த 24ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலய அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மிகவும் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இவர்களின் ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாது அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலய அணி திணறியது. இறுதியில் 2-0 என்ற நேட் செட் கணக்கில் வெற்றிபெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மாவட்ட மட்ட சம்பியனானது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியும், மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலய அணியும் மோதின.

இதில் மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

# வடமராட்சி வலய பெரு விளையாட்டு வெற்றிபெற்ற பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலய பெரு விளையாட்டுக்களில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு.

**கரம்**

15 வயதுப் பிரிவு

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், வடமராட்சி இந்துக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்துக் கல்லூரி.

**ஆண்கள் பிரிவு19 வயதுப் பிரிவு எல்லே**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம், மணற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ்.

15 வயதுப் பிரிவு கபடி

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், வேலாயுதம் மகாவித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

கலட்டி ஆர்.சி.ரி.எம்.எஸ்., வேலாயுதம் மகாவித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்.

**கால்பந்து**

15 வயதுப் பிரிவு

உடுப்பிட்டி ஏ.எம்.சி. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், தேவரையாளி இந்துக் கல்லூரி.

17 வயதுப் பிரிவு

தேவரையாளி இந்துக் கல்லூரி, இமையாணன் அ.த.க. பாடசாலை, நெல்லிடிய மத்திய மகாவித்தியாலயம்.

கரப்பந்து

15 வயதுப் பிரிவு

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, தொண்டைமானறு வீரகத்தி ம.வி., நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, இமையாணன் அ.த.க. பாடசாலை, தொண்டைமானாறு மகாவித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

உடுப்பிட்டி மகாவித்தியாலயம், சிதம்பராக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி.

மென்பந்து கிரிக்கெட்

உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, இமையாணன் ஏ. ரி.எம்.எஸ்.

மேசைப்பந்தாட்டம் 15 வயதுப் பிரிவு

ஹாட்லிக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லிடிய மத்திய மகாவித்தியாலயம்.

(தொடரும்)

# மரதனில் வென்றோர்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 42ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் விளையாட்டுக்கழகமான ஜெற் லைனர்ஸ் கழகத்தினால் மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது.

மரதன் ஓட்டப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற வீரர்கள் விபரம் வருமாறு:

முதலாமிடம் யே. நிரோஜன், இரண்டாமிடம் யே. டிலக்ஷன், மூன்றாமிடம் யே. தர்சன், நான்காமிடம் ஜெ. கணேசன், ஐந்தாமிடம் கி. கிருசாந்.

(எஸ்.பி)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

புலோலி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 7ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க. சண்முகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), சி. புஸ்பலிங்கம், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா. ரகுநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள், பெற்றோர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு வீர,வீராங்கனைகளை உற்சாகப்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (109)

# தனித்துவ சமூகமெனும் பொய்!

- அ. ஆனந்தன்

**அற்ப** விசயங்கள், யாரும் பொருட்படுத்தாத விசயங்கள் எனப் பொதுவாகக் கருதப்படும் விசயங்கள்தான் பல சமயங்களில் ஒரு சமுதாயத்தை, அதன் பெருமையை ஆழமாகப் பாதிக்க வல்லவையாக ஆகிவிடுகின்றன. இது போன்ற விசயங்களில் மனதை ஈடுபடுத்துவது ஏன் அவசியமாகிறது?

தற்பெருமிதம், சுயவிளம்பர மோகம் போன்ற விசயங்கள் பொய்யைச் சமூகமயமாக்குகின்றன. பொய் என்றால் நீதிமன்றத்தில் சாட்சி, சம்பந்தம் என்று வரும் போது கூறுவது மட்டுமல்ல. அது சிலரைச் சில சமயங்களில் மட்டும் பாதிக்கக் கூடிய விசயம்.

ஆனால் தன்னை வரம்பிற்கப்பாற்பட்டு பெரிதாக்கிக் காட்டுவது, பார்ப்பது, தான் பெறுவதற்கு அருகதையில்லாத பெருமைகளை அடைய முயல்வது தங்களின் காரியத்திற்காக ஒருவரை அவருக்கு முற்றிலும் பொருந்தாத விதத்தில் வானளாவப் புகழ்வது ஆகியவை தனித்தனியாக யாரையும் குறிப்பாகப் பாதிப்பதில்லை. அதனால் அது நம்மால் கண்டு கொள்ளப்படாமலும் போய்விடுகிறது.

ஆனால் பணம் செலவு செய்து சுயநல நோக்கங்களோடு செய்யப்படும் அது பொய்யை உறுத்தலின்றி நடமாட, கோர நர்த்தனம் ஆட அனுமதித்து சமூகத்தின் இன்றைய நியதி ஏதாவதொரு பொய்யே என்ற நிலையை நோக்கிக் கொண்டு செல்கிறது.

வருந்தத் தகுந்த விதத்தில் தமிழ்ச் சமுதாயம் தலைவிரித்தாடும் இந்த சுயவிளம்பரப் போக்கினால் எந்தப் பொய்யையும் சிரமமின்றிச் சகித்துக் கொள்ளும் ஒரு சமூகமாக மாறிவருகிறது.

இப்படிப்பட்ட சுயவிளம்பரம், தற்பெருமை போன்ற போக்குகள் சாதாரணமாக உயர்ந்த சமுதாய அமைப்புகளில் தோன்றுவதில்லை. தன்னைப் பற்றி மிக அதிகம் பேசுவது அரைவேக்காட்டுத்தனம் பக்குவமற்ற நடவடிக்கை என்ற எண்ணப்போக்குகளே இன்றும்கூட உயர்சமூகத்தின் உரைகற்களாக உள்ளன.

தமிழ்ச் சமுதாயத்தில் இப்போக்கு எப்படி வந்தது என்று அப்போக்குகள் தலைவிரித்தாடும் இன்றைய சூழ்நிலையில் பார்ப்பது அவசியமாகிறது. எந்த ஒரு போக்குமே திடீரென தற்செயலாகக் கிளர்ந்தெழுந்து வளர்வதில்லை. ஒரு நல்ல போக்கு இருப்பதற்கும், அழிவதற்கும் அதைப்போல் ஒரு தவறான போக்கு உருவாவதற்கும், வளர்வதற்கும் காரணங்களாக சில சமூகப் பின்னணிகள், சரியான அல்லது தவறான சமூக இயக்கங்கள் நிச்சயம் இருக்கின்றன. அதைப்போல் இப்போக்கிற்கும் ஒரு பின்னணியும் இதன் வளர்ச்சிக்கான பல காரணிகளும் இருக்கவே செய்கின்றன.

தமிழ் சமூகம் ஒரு முன்னேறிய சமூகமாக, நாடு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலத்திலேயே விளங்கியது. அதற்கான காரணம் இன்று பலரும் உரத்து முழங்கி முன் வைப்பது போல் அதனுடைய தொன்மையும் பாரம்பரியமும் மட்டுமல்ல. பழைய நிலவுடைமைக் காலத் தமிழ்ச் சமூகத்தின் எந்தப் போக்குகள் பின்னைய அதன் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்திருக்கின்றன என்று ஆக்கபூர்வமாகத் தேடினால் அப்படி எதுவுமில்லை என்பதே தெளிவாக நமக்குத் தெரியவரும்.

பழைய நில-வுடைமைக் காலத் தமிழ்ச் சமூகத்தின் எந்தப் போக்குகள் பின்னைய அதன் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்திருக்கின்றன என்று ஆக்கபூர்வமாகத் தேடினால் அப்படி எதுவுமில்லை என்பதே தெளிவாக நமக்குத் தெரியவரும்.

அப்படியானால் தமிழ் சமூகம் ஒரு முன்னேறிய சமூகமாகக் கருதப்பட்டதற்கான காரணங்கள் எவை என்று பார்த்தால் அதன் வேர் வெள்ளையர் ஆட்சிக் காலம் தொடங்கி நமக்கு கிடைத்த கல்வியிலேயே உள்ளது என்பதை நாம் அறியமுடியும். கிறிஸ்தவ மிசனரிகள் பல பகுதிகளில் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்து அதற்கு முன்பு கல்வி என்ற பெயரில் இங்கிருந்ததைக் காட்டிலும் மேலான ஒரு தாராளவாதக் கல்வியை கற்பிக்கத் தொடங்கினர்.

அதன் விளைவாகக் கல்விகற்று வெளி வந்தோர் விஞ்ஞானம் அறிந்தவர்களாக தொழில்நுட்பம் தெரிந்தவர்களாக, பொருளாதார, இலக்கிய அறிவு பெற்றவர்களாக ஆயினர். அத்திறமைகளைப் பயன் படுத்தி பல்வேறு பணிகளில் அவர்கள் சென்றமர்ந்தனர். அவ்வாறு தங்களுக்கு வேலை தேடிக் கொண்டதோடு மட்டுமின்றி அதுவரையில்லாத விஞ்ஞான தொழில்நுட்ப, பொருளாதார, இலக்கியரீதியான புது விசயங்களை மற்றவர்களும் கற்கவேண்டும் என்று கல்விப் பரவலாக்கலை அவர்கள் ஆதரித்தனர்.

அது மட்டுமின்றி கல்வி கற்க வசதியில்லாதவர்களிடமும் இக் கருத்துக்களை அவர்கள் எடுத்துச் சென்றனர். தங்களது முயற்சியின் மூலம் அக்கருத்துக்களின் பாலான ஒரு ஈடுபாட்டை அவர்கள் வளர்த்தெடுத்தனர். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு நாம் தொன்மை, புராதனம் என்று பெருமையுடன் பேசிக் கொள்கிறோமே அவை உருவாக்கியிருந்த செயற்கையான சமூகப் பிரிவுகளை அக்கல்வி முறை தகர்த்தெறிந்தது.

எந்த ஒரு சமூகத்திலும் அச்சமூகத்தில் ஊடுருவும் வேறொரு சமூகப் பகுதியின் பழக்கவழக்கங்களும் வாழ்க்கை முறையும் அச்சமூகம் அன்றைய நிலையில் அவற்றில் சிலவற்றை அல்லது பலவற்றை ஏற்றுக் கொள்ள முடிந்ததாக இருந்தால் மட்டுமே அது ஏற்றுக் கொள்ளும். அவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியாதவற்றை அதாவது அன்றைய காலகட்டத்தின் நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராதவற்றைப் புகுத்த முற்பட்டால் அது அதனை ஏற்றுக்கொள்ளாது.

இதற்கு ஒரே விதிவிலக்கு வெள்ளையர்கள் தங்களது ஆட்சியை நிலைநாட்டியபோது ஏற்பட்டதுதான். அவர்கள் அதுவரை நிலவிய சமூக உற்பத்தி முறையைக் காட்டிலும் மேலானதொரு எந்திரத் தொழில் உற்பத்தி முறையை அறிமுகம் செய்து அதுவரை நிலவிய நில-வுடைமை உற்பத்தி முறையைக் காலாவதியானதாக ஆக்கினர்.

அதன் விளைவாக நம் சமூக வாழ்விலும் பல்வேறு அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டன. பழைய வாழ்க்கைக் கண்ணோட்டங்கள், போக்குகள் பலவும் அடிப்படையில் தகர்ந்துபோயின.

ஒரு சமூகத்தின் பொருள் உற்பத்தி முறையே அடிப்படையானது. அது தற்போது இருப்பதைக் காட்டிலும் உயர்ந்த ஒன்றை எதிர்கொள்ளும் போது நிச்சயமாக எத்தனை முட்டுக் கட்டைகள் போட்டு அதனைத் தடுக்க நினைத்தாலும் அந்த மேலான உற்பத்தி முறையின் முன்பு அது சரணடைந்தே தீரும். அந்த முன்னேறிய பொருள் உற்பத்தி முறை நிலைகொண்ட பின்பு அது அதன் வளர்ச்சிக்கும் தற்காப்பிற்கும் உகந்த வகையிலான பல்வேறு சமூக, அரசியல், கலாசாரக் கருத்துக்களை அது உருவாக்கவே செய்யும். அது ஏற்கனவே நிலவிய சமூக, அரசியல் கலாசாரக் கருத்துக்களில் இருந்து பெரிதும் மாறுபட்டதாகவே இருக்கும். இத்தகைய மாறுதல் என்பதே அன்றும் இன்றும் என்றும் மாறாத விதி.

தமிழ்ச் சமூகம் வேறு சமூகக் கலப்பின்றி இருந்திருக்குமானால் மிக உன்னதமாக ஒரு வழிப்பாதையில் வளர்ந்தோங்கி இருக்குமென்று முன் வைக்கப்படும் கருத்து சுருக்கமாகச் சொன்னால் பாமரத்தனமானது. சமூக வாழ்க்கை பல சிக்கல்கள் நிறைந்தது. அதனுடைய வளர்ச்சிப் போக்கை இவ்வாறு பார்ப்பது எந்த வகையிலும் விஞ்ஞானபூர்வ பார்வையாக இராது.


பிற சமூக கலப்புகள் இன்றி வாழ்ந்த சமூகம், இன்றும் வாழ்ந்து வரும் சமூகம் என்று எதுவுமே இருக்க முடியாது. அவ்வாறு ஒன்று இருக்குமானால் அது தேங்கிய குட்டைபோல் ஆகி அதன் மக்கட் தொகையும் சுருங்கி அச்சமூகமே ஒரு நாள் இல்லாதொழிந்துவிடும். பல ஆதிவாசிக் குழுக்கள் இவ்வாறு அழிந்துபோனதே அதற்கு எடுத்துக்காட்டு.

இவ்வாறு நமது தமிழ்ச் சமூகத்தின் மேன்மை புதிய உற்பத்தி முறையினால் வித்திடப்பட்டு அதையொட்டி நமக்கு கிடைத்த கல்வியினால் பெறப்பட்டது. அது அதனால் பலன் பெற்றோரால் பரப்பவும் விரிவாக்கவும் பட்டு வளர்ந்தோங்கியது. அந்தத் தன்மை விடுதலை பெற்ற காலத்தில் வந்த ஆட்சியாளர்களால் ஓரளவு பராமரிக்கவும் பட்டது. பள்ளிக் கல்வி வரை கல்வி அவர்களால் இலவசமாக்கப்பட்டது. கல்வி கற்பித்தவர்களிடமும் கூலிக்கு மாரடிக்கும் போக்கு நிலவாமல் அது இலட்சிய பூர்வபணி என்ற எண்ணப்போக்கு இருந்தது.

கல்வி கற்றோர் எண்ணிக்கைக்கேற்ப நமது பகுதியில் வேலை வாய்ப்புகள் இல்லாதபோது, இவர்கள் தலைநகருக்கும் நாடு முழுவதும் சென்று வேலை தேட வேண்டிய, பணியமர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கெல்லாம் வேலைக்குச் சென்ற அவர்கள் பெற்றிருந்த கல்வி தந்த தகுதி-களையும் திறமைகளையும் வெளிப்படுத்தினர். பதவிகளில் மேலுக்கு வந்தனர்.

அதை வைத்தே தமிழர்கள் ஒரு முன்னேறிய பகுதியினர் என்ற எண்ணம் அறிவு சார்ந்த பலரிடம் ஏற்பட்டது. இவ்வாறே தமிழ்ச் சமூகம் தன் மேலேறிய தற்பெருமித உணர்வுகளிலிருந்தும் இறங்க முடியாததாக ஆகிற்று.

ஒரு சமூகத்தின் பொருள் உற்பத்தி முறையே அடிப்படையானது. அது தற்போது இருப்பதைக் காட்டிலும் உயர்ந்த ஒன்றை எதிர்கொள்ளும் போது நிச்சயமாக எத்தனை முட்டுக்கட்டைகள் போட்டு அதனைத் தடுக்க நினைத்தாலும் அந்த மேலான உற்பத்தி முறையின் முன்பு அது சரணடைந்தே தீரும். அந்த முன்னேறிய பொருள் உற்பத்தி முறை நிலைகொண்ட பின்பு அது அதன் வளர்ச்சிக்கும் தற்காப்பிற்கும் உகந்த வகையிலான பல்வேறு சமூக, அரசியல், கலாசாரக் கருத்துக்களை அது உருவாக்கவே செய்யும்.



# பல்கலைக்கழக செயற்பாடுகளை குழப்பினால் மஹாபொல புலமைப் பரிசில் இரத்து




(கொழும்பு)

மஹாபொல புலமைப் பரிசில் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பல்கலைக் கழக மாணவர்கள், பல்கலைக்கழக செயற்பாடுகளை குழப்பினால் அல்லது வகுப்புகளுக்குச் செல்லாமல் இருப்பார்களாயின் அவர்களுக்கு வழங்கப்பட்ட புலமைப் பரிசில் இரத்துச்செய்யப்படும் என உயர்கல்வி அமைச்சு நேற்றுமுன் தினம் தெரிவித்தது.

இது மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் கொள்கையில் கூறப்பட்டுள்ள நிபந்தனையாகும். ஆனால் இது இவ்வளவு காலமும் அமுலாக்கப்படவில்லை.

மாணவர்களின் வன்முறைகள் அதிகரித்து வருவதிலும் பல்கலைக்கழக விவகாரங்களில் மாணவர்கள் தலையிடுவதாலும் மஹாபொல நம்பிக்கை நிதிய கொள்கையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை இறுக்கமாக நடைமுறைப் படுத்துவது அவசியம் என பல்கலைக் கழகங்கள் கருதுகின்றன என அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

பல்கலைக்கழக ஒழுங்குவிதிகளுக்கு மாணவர்கள் அமையாதுவிடின், மஹாபொல திட்டத்திலிருந்து அவர்களை நீக்கிவிடும் சட்டத்தை கடுமையாக அமுலாக்கினால் மாணவர்களை இடைநிறுத்தம் செய்தல், விசாரணை மேற்கொள்ளுதல், பொலிஸார் கைது செய்தல் ஆகிய நிலைமைகளை வெகுவாக குறைக்கமுடியும் என அவர் கூறினார்.

இவ்வருடம் 11,800 மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் வழங்கியுள்ளதாக மஹாபொல நம்பிக்கை நிதிய அதிகாரிகள் கூறினர்.

இதில் பெரும்பான்மையானவை உள்ளூர் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஏனையவை இலங்கை சட்டக்கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள் போன்றவற்றுக்கு வழங்கப்படுகின்றன என அவர்கள் தெரிவித்தனர்.

## ஊடக சுதந்திரத்தில் இலங்கை 161 ஆவது இடம்

ஐக்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் சுதந்திர இல்லம் என்ற அரச சார்பற்ற நிறுவனம் வெளியிட்டுள்ள கணிப்பின்படி ஊடக சுதந்திரத்தில் இலங்கை 161 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

மொத்தமாக 197 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு சுதந்திர இல்லம் கணிப்பொன்றை நடத்தியுள்ளது. இந்தக் கணிப்பீட்டில் பின்லேன்ட், நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன.

ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஈஸ்டொனியா ஆகியன 22 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளன.

## பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்க நடவடிக்கை




(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் போஷாக்கை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு பசுப்பால் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தமது அமைச்சு தயாராகவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கான பாலை அந்தந்த பிரதேச விவசாயிகளிடமிருந்தே கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

தனியார் நிறுவனங்கள் பால் கொள்வனவு செய்ய மறுக்கும்போது பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளை பாதுகாப்பதற்கு இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

## இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் அரசியலில் ஈடுபடத் தடை




(கொழும்பு)

இரண்டு நாடுகளில் இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் அரசியலில் ஈடுபடுவது தடைசெய்யப்பட உள்ளது. இதற்காக குடிவரவு குடியல்வு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் இலங்கைக்குச் செல்ல விசா அனுமதி தேவையில்லை என்றபோதிலும் இலங்கையில் அரசியலில் ஈடுபட முடியாதவாறு சட்டத்தில் திருத்தங்களை செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதனடிப்படையில் பிரதேச சபை, மாகாண சபை, நாடாளுமன்றம் ஆகியவற்றிக்கான தேர்தலில் இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் போட்டியிட முடியாது என்பதுடன், ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட முடியாது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம், மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடத்தப்படுவதாக தெரிவித்து அனைத்துப் பல்லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலான ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.**



## அமெரிக்காவில் இசைபாடும் இலங்கை யானை சாந்தி

(கொழும்பு)

இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட யானை ஒன்று இசைக் கருவி இசைத்து அதன் திறமையை வெளிகாட்டியுள்ளது.

வொஷிங்டனில் உள்ள ஸ்மித் சோனியன் தேசிய மிருகக்காட்சிச் சாலையில் சாந்தி என்ற ஒரு யானை இவ்வாறு இசைக் கருவி இசைக்கிறது.

குறித்த சாந்தி எனப்படும் யானை ஹார்மோனிகா இசைக்கும் வீடியோக் கட்சிகளை ஸ்மித் சோனியன் தேசிய மிருகக் காட்சிச்சாலை வெளியிட்டுள்ளது.

36 வயதுடைய சாந்தி என்ற யானை வெளியில் இருந்து கேட்கும் இசைக்கும் அசைவு கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சாந்தி ஹார்மோனிகா இசைக்கவில்லை என்றும் அதனை அனுபவிப்பதாகவும் அதன் பராமரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து



வொஷிங்டனுக்கு பரிசளிக்கப்பட்ட சாந்தி என்ற யானை, 10 வயது கந்துல என்ற யானைக்கு தாய் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலுற்பத்தியாளர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படும்



(கொழும்பு)

பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படும் என கால்நடை வள கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.


தமது உற்பத்திக்காக உரிய விலை கிடைக்கவில்லை என்று தெரிவித்து நுவரெலிய பிரதேச பாலுற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், இது தொடர்பில் கால்நடை வள மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார்.

குறித்த பாலுற்பத்தியாளர்கள் பிரச்சினை தொடர்பில் தமது கவனத்திற்கு கொண்டு வரவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தமக்கு முறையிடும் பட்சத்தில் அவர்களுக்கான உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உறுதியளித்துள்ளார்.

## சடலம் மீட்பு



(புத்தளம்)

புத்தளம் கடற்கரையோரத்தில் அடையாளம் காணப்படாத ஆணின் சடலமொன்றினை புத்தளம் பொலிஸார் நேற்று வெள்ளிககிழமை காலை மீட்டுள்ளனர்.

புத்தளம், புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் 9 ஆம் வட்டார கடற்கரையோரத்திலேயே இச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. குறித்த சடலத்தினை கண்ட பொதுமக்கள் இதுபற்றி புத்தளம் பொலிஸாருக்கு கொடுதத தகவலையடுத்து, குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர்.

## இலங்கையில் 50 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள்



(கொழும்பு)

இலங்கையில் தற்போது பதிவு செய்யப்பட்ட 50 ஆயிரம் குற்றவாளிகள் வரை (ஐ.ஆர்.சி) இருப்பதாக பொலிஸ் குற்றத் தகவல் பிரிவு தெரிவித்துள்ளது. இதில் 800 பெண்கள் இருப்பதாக அந்தப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிரிவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பிரசித்தமான குற்றவாளிகளின் பட்டியலில் வருடாந்தம் ஆயிரம் பேர் வரை இணைவதாகவும், மரணமடைதல், 70 வயதைத் தாண்டல் போன்ற காரணங்களினால் சிலர் குற்றவாளிகளின் பெயரப் பட்டியலில் இருந்து அகற்றப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல் ஒன்று தொடர்பாக ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டு இரண்டாவது தடவையாகவும் அந்த நபர் குற்றச்செயல் ஒன்று தொடர்பாக சிறைத்தண்டனை வழங்கப்பட்டால் குறித்த நபர் ஐ.ஆர்.சி என கருதப்படுவார்.

# வன்னிக்கூடாகச் சென்றிருக்கிறேன் வன்னிக்கு இனித்தான் செல்லவேண்டும்

## ஏசியன் ட்ரிபியூனுக்கு இரா.சம்பந்தன் அளித்த செவ்வியிலிருந்து

**ஏசியன் ட்ரிபியூன்:** இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றத் தூதுக் குழுவினரை உங்களது தலைமையிலான TNA தூதுக் குழுவினர் சந்தித்திருக்கிறீர்கள். அவர்கள் இந்தியா திரும்பி ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், நீங்கள் நாடு பிரிவு படுவதை விரும்பவில்லையெனக் கூறியிருக்கிறார்கள். இது சரியானதா?

**ஆர்.சம்பந்தன்:** அது மிகச் சரியானது. பேச்சுவார்த்தையின் மூலமான நீடித்த தீர்வொன்றையே நாங்கள் நாடுகின்றோம்.

**ஏசியன் ட்ரிபியூன்:** அத்துடன் எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ், டி.கே.ரங்கராஜன் எம்.பி ஆகியோர் அங்கு வழங்கியுள்ள பேட்டியில் "நான் ஒரு இலங்கையன். இலங்கையராக இறக்கவே நான் விரும்புகின்றேன்" என்று நீங்கள் கூறியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது சரியா?

**ஆர்.சம்பந்தன்:** ஆம். ஆனால் நான் இலங்கையில் இறக்க வேண்டுமென்று கூறவில்லை. "சம உரிமை" கொண்ட ஒரு இலங்கையனாக நான் இருக்க விரும்புகின்றேன் எனக் கூறினேன். இரண்டாந்தர இலங்கைப் பிரஜையாக நான் இருக்க விரும்பவில்லை எனக் கூறினேன். அதுதான் உண்மையில் நான் கூறியது.

**ஏசியன் ட்ரிபியூன்:** ஏனைய இலங்கையர்களைப் போல, சம உரிமை வேண்டும் என்பதா இதன் பொருள்?

**ஆர்.சம்பந்தன்:** நான் சொல்ல விளைந்தது ஒன்றுபட்ட இலங்கைக்குள், சிங்களவர்களுக்குச் சமனானவர்களாக தமிழர்கள் இருக்க வேண்டும் என்பதே. தமிழர்களோ முஸ்லிம்களோ இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழக்கூடாது. இனப்பாகுபாடின்றி இலங்கையின் பிரஜைகள் அனைவரும் சமமாக வாழவேண்டும். சமமாக வாழ்வதன் மூலம் இலங்கையர் என்று பெருமைப்பட வேண்டும்.

**ஏசியன் ட்ரிபியூன்:** நீங்கள் ஒரு தேசிய வாதியா?

**ஆர்.சம்பந்தன்:** என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பாருங்கள். எல்லாம் தங்கியிருப்பது அரசில்தான். அரசு எவ்வாறு நடக்கிறது, தமிழர்களின் மனங்களை எவ்வாறு வெல்கிறது என்பதைப் பொறுத்தே இருக்கிறது. எனக்குப் பிரச்சினையில்லை. தமிழ் மக்களுக்கே அது பிரச்சினை. மக்கள் மிகவும் காயப்பட்டிருக்கிறார்கள். தமக்குச் சாதகமாக விடயங்கள் நடந்தேறுவதை அவர்கள் பார்க்க வேண்டும். அதற்காக அவர்களின் உள்ளங்கள் வென்றெடுக்கப்பட வேண்டும். இதற்கான செயற்பாடுகளில் நாங்கள் உதவலாம்.

..........

**ஏசியன் ட்ரிபியூன்:** ஜனாதிபதியை அண்மையில் சந்தித்தீர்களா?

**ஆர்.சம்பந்தன்:** ஜனவரிக்குப் பின் அவரைச் சந்திக்கவில்லையென்று நினைக்கின்றேன்.

**ஏசியன் ட்ரிபியூன்:** அப்படியென்றால் ஜனவரிக்குப் பின் நீங்கள் அவரைச் சந்திக்க வில்லையா?

**ஆர்.சம்பந்தன்:** ஒன்றோ ஒன்றரை மாதங்களுக்கு முன்போ சந்தித்ததாக ஞாபகம்.

**ஏசியன் ட்ரிபியூன்:** நாடாளுமன்றத்திலா?

**ஆர்.சம்பந்தன்:** நான் நினைக்கிறேன் அலரிமாளிகையிலாக இருக்க வேண்டும். ஒரு மாதத்துக்கு முன்னர் அலரிமாளிகையில் சந்தித்தேன். எனக்குச் சரியாக ஞாபகம் இருக்கின்றதென்றால், ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக இருக்கலாம்.

**ஏசியன் ட்ரிபியூன்:** தமிழர்களுக்கு அரசு செய்ய வேண்டிய அடிப்படை விஷயங்கள் என்று எவற்றைச் சொல்வீர்கள்?

**ஆர்.சம்பந்தன்:** நிறைய விடயங்கள்... காணி விவகாரங்கள், இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள், நிரந்தரத் தீர்வுக்கான ஏனைய விடயங்கள்...


**ஏசியன் ட்ரிபியூன்:** உயர் பாதுகாப்பு வலயத்தில் 65 சதவீதமான பகுதி அப்புறப்படுத்தப்பட்டு விட்டதென நான் நினைக்கின்றேன்... சரி, இது விடயங்களை நீங்கள் அரசுக்கு தெரியப்படுத்தியிருக்கிறீர்களா?

**ஆர்.சம்பந்தன்:** ஆம் நிறையத் தடவைகள்.

**ஏசியன் ட்ரிபியூன்:** அண்மையில் பாதுகாப்பமைச்சரைச் சந்தித்தீர்களா?

**ஆர்.சம்பந்தன்:** அவரை மட்டுமல்ல, நாடாளுமன்றில் இதுபற்றிப் பேசியிருக்கிறோம். அமைச்சர்களோடு பேசியிருக்கிறோம். காணி விவகாரம் தொடர்பாக, சமயத் தலங்கள் காலாசார இடங்கள் தொடர்பிலான பிரச்சினைகள், இராணுவப்பிரசன்னம் என்று எல்லாப் பிரச்சினைகள் தொடர்பாகவும் பேசியிருக்கின்றோம். இவற்றைத் தீர்ப்பதற்கு கால அவகாசம் தேவைப்படாது. ஆனாலும் எதுவும் நடக்கவில்லை.

அண்மையில் வன்னிக்குச் சென்று திரும்பிய ஒரு பெண் இராஜதந்திரியை நான் சந்தித்தேன். அவர் தனது அவதானங்களைச் சொன்னார். கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் வன்னி மக்கள் அதிக



விரக்தியுற்றிருப்பதாக அவர் சொன்னார்.

**ஏசியன் ட்ரிபியூன்:** நீங்கள் ஏன் வன்னிக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிடக்கூடாது?


**ஆர்.சம்பந்தன்:** நான் போயிருக்கிறேன். ஆனால் சில பகுதிகளுக்குப் போக முடியவில்லை. பொதுவாக வன்னிக்கூடாகச் சென்றிருக்கிறேன். மீண்டும் செல்ல வேண்டும்.

---

# ரோபோக்களால் என்ன இலாபம்?

ரோபோக்களால் நமக்கு என்ன இலாபம் என்றும் சிலர் புலம்புவதை நாம் சாதாரணமாகக் கேட்கிறோம். றொக்கெற்றால் என்ன இலாபம் என்று நாற்பதாண்டுகளுக்கு முன்பு கேட்டார்கள். புதிய புதிய கருவிகளால் மனிதவாழ்வு திசைமாறிப் போய்க் கொண்டிருப்பது பற்றிய கவலையை சிலரேனும் வெளியிட்டபடியேதான் இருக்கிறார்கள்.


இதன் ஒரு அந்தப் பார்வையாக, வேட்டையாடி வாழ்ந்த சமத்துவ சமுதாய மனிதர்களுக்கெதிரான அழிப்பு நடவடிக்கையாகவே விவசாயம் தோன்றியது



என்று கூட சொல்லிவிடலாம். அதுபோல, பல நூறு மில்லியன் மக்கள் வேலையே இல்லாமலோ, அரைகுறை வேலையோடோ திண்டாடும்போது எதற்கு தானியங்கி எந்திரங்கள் அல்லது ரோபோக்கள் என்ற கேள்வியும் மிக நியாயமாகத் தெரியும்.

ஆனால், மனிதகுலம் கண்டுபிடிப்புகளைக் கைவிட்டுவிட்டு இனி வாழாது. இன்று, ஏதாவது தடை இருப்பதைத் தூரத்தில் பார்த்தால் அல்லது அறிந்தால் காரை, ட்ரக்கை, ரயிலைத் தானாகவே நிறுத்தி விடுமளவுக்கு கணினிகளும் தானியங்கி எந்திரங்களும் முன்னேறி இருக்கின்றன. செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியதால்தான் மூலை முடுக்கெல்லாம் செல்'.போன் இன்று மக்களுக்குக் கிட்டியிருக்கிறது. உலகின் மூலை முடுக்கையெல்லாம் நம் வீட்டில் தொலைக்காட்சி முன் அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடிகிறது.

ரோபோக்களால் உடனடியாக என்ன பெரும் பயன் என்பதை நம்மால் காண முடியாதது, சில பத்தாண்டுகளுக்கு முன்பு கணினிகளால்



என்ன பயன் என்று காண முடியாததை ஒத்ததே.

ரோபோக்களின் ஒரு பிரச்சினை அவை திரும்பத் திரும்ப மனித உருவில் செய்யப்படும் உளைச்சலுக்கு ஆளாவதுதான். இது குறித்து அசிமோவ் என்னும் அறிவியல் புனைவெழுத்தாளர் நிறையக் கதைகளில் சர்ச்சித்திருக்கிறார். கடவுள் படைத்த மனித உருவில் மனிதர் எதையும் படைக்கக் கூடாது என்ற அபத்த நம்பிக்கைகளைப் பரப்பும் செமிதிய மதங்களின் பிடியில் சிக்கி இருக்கும் ஐரோப்பிய நாகரிகங்களின் நடுவில் இருப்பவர் அஸிமோவ். அவருக்கு இந்த வகை உளைச்சலால் ஏற்படும் பல பிரச்சினைகள் நன்றாகவே தெரிந்திருந்ததில் ஆச்சரியம் இல்லை. இணை வைத்தல் என்பதைப் பயங்கரக் குற்றமாகக் கருதும் மதங்கள் உலகில் இன்னமும் கோலோச்சுகின்றன அல்லவா?

மாறாக, மனித உருவில் அல்லாத தானியங்கி எந்திரங்கள் குறித்தும் மனிதருக்கு உளநிலைப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பது அஸிமோவின் கருத்து, புரிதல். அவருடைய ரோபோ நாவல்களில் இந்தப் பிரச்சினைகள் விரிவாகவே பேசப்படுகின்றன. 50களிலேயே இதைக் கவனித்து எழுதிய அஸிமோவ் ஒரு அதிசய மனிதர் என்றே இன்று தெரிய வருகிறார். அவர் இந்தக் கதைகளை எழுதிய காலத்தில் கணினிகளே சாதாரணமாகத் தெரியவராத கருவிகளாக இருந்தன. அவற்றை எப்படி தூரக் காலத்தில் உருவகித்து, மனித உருவுள் அவை புதைக்கப்படும், தானியங்கிகளாக அந்த ரோபோக்கள் ஆகும், மனிதர் போலவே யோசிக்க, செயல்படவும் அவற்றால் முடியும், அந்த வகை எந்திரங்களை மனிதர் எப்படி அணுகுவர் என்பதை எல்லாம் அவர் எப்படி யோசித்தார், அவற்றின் உளநிலைப் பிரச்சினைகளை எப்படி ஊகித்தார் என்பதெல்லாம் அதிசயங்களே. அஸிமோவுக்குப் பல பத்தாண்டுகள் முன்பே எச். ஜி. வெல்ஸ் இப்படிப்பட்ட எந்திரங்களின் வருகை குறித்து ஊகங்களைக் கொண்ட நாவலை எழுதினார் என்பதும் இன்னொரு அதிசயமே.

ரோபோக்களைத் தயாரிக்கும் பிரபல ஹொண்டா நிறுவனம், சமீபத்தில் தன் தயாரிப்பான ஒரு நடக்கும் ரோபோவுக்கு அஸிமோவ் என்று பெயரிடக் காரணம், அஸிமோவ் என்ற நாவலாசிரியரின் தொலைநோக்குதான். அந்த "அஸிமோவ் ரோபோக்கள்" முதலில் நடக்கத் தொடங்கியபோது குழந்தைகளைப் போலத் தள்ளாடித் தடுமாறித்தான் நடந்தன. இன்று அவை ஓரளவு எளிதாக நடக்கின்றன. அந்த ரோபோக்களின் பொறிநுட்பத்திலிருந்து பிறந்த சில கருவிகள் இன்று நடக்கமுடியாமல் தவிக்கும் முதியோருக்கும், பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மல்ரிபிள் ஸ்க்லெரோஸிஸ் என்ற, படிப்படியாக உடலில் தசைகள் செயலிழக்கும் நோயால் அவதிப்படுவோருக்கும் ஓரளவு உதவக்கூடியவையாகக் கிட்டவிருக்கின்றன. இக்கருவிகள் இப்போது சோதனைக் கட்டத்தில் இருக்கின்றன. பெருமளவில் சந்தையில் கிட்ட இன்னும் சில வருடங்கள் ஆகும், ஏனெனில் உதவத் தயாரிக்கப்பட்ட கருவிகள் அப்படி உதவுவதற்குப் பதில் மேலும் சோதனையாகாமல் இருக்க வேண்டுமல்லவா?

---

# நியுயோர்க் நகர கட்

நியுயோர்க் நகரில் கட்டட ஒ
காரர்கள் இப்போது கடுமையாகக்
பாடுகளுக்கு உள்ளாகிறார்கள்.
சொந்தக்காரர்களும் ச ஏப்ரல்
அங்கு மழை பெய்யும். நகரில் த
தேங்கும் இடங்களில் - நீச்சல்
குட்டைகள், ஏரிகள் ஆகியனவற்
பெருகாமல் இருக்க நகர நிர்வாக
நடவடிக்கைகளை மிகக் கண்டிப்
கொள்கிறது. வீடுகளிலோ, கட்ட
மிடங்களிலோ தண்ணீர் தேங்கி
வீட்டுக்காரர்களுக்கும், ஒப்பந்தச்
களுக்கும் 1000 டொலர் வரை கூ
அபராதம் விதிக்கப்படுகிறது. (130,

ஒரு கட்டட ஒப்பந்தக்காரர்
கள் குளிக்கவென வீட்டின் மாடிய
குளம் போல தொட்டி ஒன்றை நி
இருந்தார். தினமும் அதில் நீரை
செய்தாராம். நிறைய பறவைகள்
வந்து குளித்துப் போயின என்கிற
ஆனால் நகர நிர்வாகம் அவருக்
அபராதம் விதித்து நோட்டீஸ் அ
இருக்கிறது.

குறித்த ஒப்பந்தக்காரர் இதை
சபையின் முட்டாள்தனம் என்கிற
ஆனால், ஏனைய பொதுமக்களின் நலனையும் பார்க்க வேண்டிய பொறுப்பிலிருப்பவர்களுக்கு, இப்படி தனி ஒருவரின் பறவைக் காருண்யத்தை எல்லாம் அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது என்று தெரியும்.




# படுக்கை விரிப்பு எதற்கு?




**மே**ற்கத்திய நாடுகளிலிருந்து வந்த ஃபாஷன்... எனக் கூறி, நாம் இதுவரை ஜீன்ஸ், கவுன், கோட் - சூட் போன்ற ஆடைகளை அணிந்து வலம் வருகிறோம். அவர்கள் அடுத்த கட்டத்திற்குப் போய்விட்டார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இப்போது ஃபாஷன் என்ன தெரியுமா? மெத்தை விரிப்புகளுக்காக பயன்படுத்தப்படும் துணிகளில், உடைகள் தைத்துக் கொள்வது தான், அங்கு இப்போது ஃபாஷன்.



ஹொலிவுட் நடிகை சாண்ட்ரா புல்லக், இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல நடிகையும், பாடகியுமான ரிகானா, ஹொலிவுட் நடிகைகளும், பொப் பாடகிகளுமான லிண்ட்சே லோகான், சைரஸ் மைலி போன்ற பிரபலங்கள், விருந்துகளுக்கும், முக்கியமான நிகழ்ச்சிகளுக்கும் இந்த மெத்தை விரிப்புத் துணிகளால் தைக்கப்பட்ட உடைகளைத் தான் அணிந்து செல்கின்றனர். இவ்வளவு ஏன்? இங்கிலாந்து மகாராணி





எலிசபெத்துக்கு கூட, இந்த உடைகளை அணிவதில் ஆசை வந்து, உடைகள் தைத்துக் கொண்டிருக்கிறார். கூடிய விரைவில், இங்கேயும் வந்து விடும். ஃபாஷன் என்பதே நாம் அவர்களைப் பார்த்துக் கொப்பியடிப்பதுதானே?

# முப்பரிமாண அச்சடிப்பு

3டி சினிமாதான் உண்டா? இல்லை 3 டி அச்சடிப்பும் உண்டு என்கிறார்கள் இந்தத் தொழில் நுட்பத்தை விற்கும் நிறுவனங்கள். அச்சடிப்பு என்றால் ஏதோ காகிதத்தில் எழுத்தை அச்சடிப்பது அல்ல. பொருட்களையே இந்த அச்சடிப்பு இயந்திரங்கள் நேரே கணினியில் உருவான டிஸைனை வைத்து உருவாக்கி விடுமாம். இதில் உருவாகிற பல பொருட்கள் மருத்துவத் துறையில் பயன்படத் தொடங்கி இருக்கின்றன. சில ஃபாஷனாக இருக்க உடைகள், பொருட்களைத் தயாரிக்கின்றன. சில



விளையாட்டுப் பொருட்களைத் தயாரிக்கப் பயன்படுகின்றன. ஏனைய படங்களை இங்கே சென்று பாருங்கள். http://www.wired.com/design/2012/04/10-things-3d-printers-can-do-now/?pid=163

# சினிமாவில் அடுத்த சுனாமி!




**சி**னிமாவில் தொடர்ந்து தொழில் நுட்பம் முன்னேறுகிறது. முப்பரிமாணக் காட்சிகள் என்ற பெயர் கொண்ட 3-டி படங்கள் இப்போது பரவலாகி வருகின்றன. ஜேம்ஸ் கமரூன் தனது டைட்டானிக்கை 3-டி ஆக வெளியிட்டார். அதைத் தொடர்ந்து பழைய தமிழ்ப் படங்களும் கூட டிஜிற்றல், 3-டி நுட்பங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றன.

படச்சுருளை நம்பிப் படம் எடுப்பது குறைந்து டிஜிற்றல் முறையில் படமெடுப்பது பெரிதும் அதிகரித்து விட்டது. இப்போது படச்சுருளில் படம் யாரும் எடுக்கிறார்களா என்பதே ஐயம்தான். இவை ஒரு புறம் நடந்திருக்கையில், பீற்றர் ஜாக்ஸன் என்ற ஹொலிவுட் இயக்குநர் - லோர்ட் ஓஃப் த ரிங்ஸ் (3 படங்கள்), கிங்கொங், டின் டின்னின் சாகசங்கள் (தயாரிப்பு) என்று நமக்குத் தெரியவந்தவர் - இப்போது டோல்கைனின் இன்னொரு நாவலான த ஹொப்பிற்றை படமாக்கி முடிக்கவிருக்கிறார். இந்தப் படம் வழக்கமான வேகத்தில் படத் துண்டுகளை நகர்த்தாமல் முன்னைப் போல இரட்டை மடங்கு வேகத்தில் படத் துண்டுகளை ஓட்டுகிறது.

முன்பு இருந்த வேகப்படி ஒரு வினாடிக்கு 24 துண்டுக் காட்சிகள் (ஃப்ரேம் என்பார்கள் இதை) திரையில் ஓடி தொடர்ந்த இயக்கமாக நமக்குப் பிரமையைத் தரும். இப்போது பீற்றர் ஜாக்ஸன் கொண்டு வருகிற படத்தில் வினாடிக்கு 48 துண்டுக் காட்சிகள் ஓடும். இதில் காட்சித் துல்லியம் எக்கச்சக்கமாகக் கூடுகிறது, நகர்வுகளில் வேகமான சண்டைக் காட்சிகளில் கூட விறுவிறுப்பு அதிகரித்து நமக்கு நேரில் பார்ப்பதான பிரமை கூடுகிறது என்கிறார்கள். சினிமாவில் வரப்போகும் அடுத்த சுனாமி இதுதான் என்கிறார்கள்.

இது சினிமாவை மேலும் யதார்த்தத்தோடு குழப்பிக் கொள்ளும்படி ஆக்கி விடுமா? என்று விவாதமும் எழுந்திருக்கிறது. நமது தமிழ்ப் படங்களைப் பொறுத்து அந்தப் பிரச்சினை இல்லை. அவை என்றுமே யதார்த்தத்தோடு உறவற்றுதான் அமைக்கப்படுகின்றன. யதார்த்தத்தைப் பற்றி நம் மக்களைப் போலவே திரைப்படங்களும் கவலைப்படுவதில்லை. ஆனால் சினிமாவில் காட்டுவதை யதார்த்தம் என்று நம்பித் தலைவர்களை உருவாக்கும் வரை செல்கிறோம்.

# இங்கே ஊடகக்காரர்கள் இல்லை இனவாதிகளே இருக்கிறார்கள்!

**த**மிழ் ஊடகங்கள் உண்மைக்கும் யதார்த்தத்துக்கும் அப்பால் கற்பனாவாதத்திலும் தவறுகளைக் களையாமலும் இருக்கின்றன. வியாபார நோக்கத்திற்காக உயிர்களையும் குருதியையும் கண்ணீரையும் அவலங்களையும் தாராளமாகப் பயன்படுத்திப் பழகி விட்டன. வேறு சூழலில் என்றால், இந்த மாதிரி ஊடகங்களைக் கையாள்வதற்குக் கூச்சப்படுவார்கள்.

ஆனால், தமிழில் இந்தக் கூச்சம், நாகரிகம் எல்லாம் கிடையாது. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே பாணியில் - எந்த முன்னேற்றமும் இல்லாமல் ஊடகங்களை நடத்தும் சமூகம் என்றால், அது ஈழத்தமிழ்ச் சமூகமாகத்தானிருக்கும்.

தமிழின் மூத்த ஊடகவியலாளர்களில் எனக்கு நம்பிக்கையே இல்லை. அவர்கள் ஊடகவியலாளர்களைப் போலவே செயற்படுவதில்லை. எப்போதும் அரசியற் கட்சிக்காரர்களாகவே இருக்கிறார்கள். ஊடக அறநெறி, தொழில்முறைப் பொறுப்பு, தொழில் நேர்த்தி எல்லாம் அவர்களிடம் கிடையவே கிடையாது.

அப்படியிருந்திருந்தால் இப்படித் தமிழ் ஊடகங்கள் சீரழிந்திருக்காது. சில ஊடகக்காரர்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தாலும் அவர்களால் ஒரு பிரத்தியேக வெளியை உருவாக்க முடியவில்லை. அதற்கு "அணி ஊடகக்காரர்கள்" இடமளிக்கவும் இல்லை.

"அணி ஊடகக்காரர்கள்" இனவாதிகளாகவே இருக்கிறார்கள். சிங்கள இனவாதத்துக்குப் பதிலாக தமிழ் இனவாதத்தை வளர்ப்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் சிங்கள இனவாதத்தைக் குறை சொல்வார்கள். அதேவேளை தாம் வளர்ப்பதும் இனவாதமே என்று புரிந்து கொள்ளாமல். அல்லது அதை ஏற்றுக் கொள்ளாமல்.

என்றபடியால்தான் கறுப்பு வெள்ளை அரசியலை தங்கள் ஊடகங்களில் இவர்களால் மிகச் சுலபமாக வளர்க்க முடிகிறது. கறுப்பு வெள்ளை அரசியலில் ஒரு போதும் விரிந்த பார்வைக்கு இடமில்லை. விமர்சனங்களுக்கு இடமில்லை. நியாயங்களுக்கு இடமில்லை. இந்த நிலை இப்படியே வளர்ந்து உண்மைக்கும் இடமில்லாமற் போய் விடுகிறது.

இதனால், தமிழ் பேசும் மக்களின் அரசியற் குறைபாடுகளைப் போலவே தமிழ் ஊடகங்களின் குறைபாடுகளும் இருக்கின்றன.

நாற்பது ஆண்டுகளாக இந்த ஊடகங்கள் எதைச் சாதித்திருக்கின்றன?

தமிழ் பேசும் சமூகங்களின் பிரச்சினை குறித்த தெளிவை குறிப்பிட்ட இந்தச் சமூகங்களிடமாவது புரிய வைத்திருக்கின்றனவா?

அல்லது தமிழ், சிங்கள உறவையாவது பலப்படுத்தியிருக்கின்றனவா?

அல்லது முறையான ஜனநாயகச் சூழலை தமிழ் ஊடகத்திலும் அரசியலிலும் வளர்த்திருக்கின்றனவா?

அல்லது மாற்றுப் பார்வை, மாற்றுப் பார்வை பற்றிய புரிதல்களோடு செயற்பட்டிருக்கின்றனவா?

அல்லது புதிய விவாதங்களுக்கான வாசல்களையாவது திறந்திருக்கின்றனவா?



அல்லது நெருக்கடியான கட்டங்களில் அவற்றை எதிர்கொள்ளும் வகையில் மக்களைத் தயார்ப்படுத்தும் காரியங்களுக்குப் பின்னணியாக இருந்திருக்கின்றனவா?

அல்லது போரினாலும் அகதி வாழ்வினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளைப் பற்றிய விழிப்புணர்வை இந்த ஊடகங்கள் தமிழ் பேசும் சமூகங்களிடம் ஏற்படுத்தியிருக்கின்றனவா?

அல்லது அரசியல், பண்பாடு, மனிதாபிமானப் பணிகள் போன்றவற்றில் ஒரு அழுத்தத் தரப்பாக இந்த ஊடகங்கள் பணியாற்றக்கூடிய, ஆலோசனை வழங்கக் கூடிய நிலையைப் பெற்றிருக்கின்றனவா?

தவறுகள், அநீதிகள் பற்றிய பார்வையில் பக்கச்சார்பின்றி செயற்பட்டிருக்கின்றனவா?

அப்படியெல்லாம் நடந்ததாக இல்லையே! அப்படி நடப்பதற்கு இந்த ஊடகங்களினால் முடியாது. காரணம், இவைதான் கறுப்பு - வெள்ளை ஊடகங்களாக இருக்கின்றனவே! கறுப்பு - வெள்ளைத் தனங்களால் பிரிப்புகளையும் அடையாளப்படுத்தல்களையும் மட்டுமே செய்ய முடியும். அதற்கப்பால் அவற்றினால் எதையும் செய்ய முடியாது. எனவேதான் எங்களுடைய ஊடகங்கள் தனித்துவ அடையாளங்களைப் பெறமுடியாமற் போயுள்ளன.

விடுதலைக்காகப் போராடிய சமூகங்கள் என்றவகையிலும், பெரும் அழிவுகளைச் சந்தித்த சமூகங்கள் என்றவகையிலும், இன்னும் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சமூகங்கள் என்றவகையிலும், இந்த ஊடகங்கள் எப்படிச் செயற்பட்டிருக்க வேண்டும்?

இனரீதியாகப் பிளவாக்கப்பட்டிருக்கும் தமிழ், முஸ்லிம் உறவுகளைப் பலப்படுத்தும் விதமாக இந்த ஊடகங்கள் செயற்படத் தயங்குவது ஏன்?

கிழக்கு தமிழ் மக்களின், முஸ்லிம் மக்களின் தனித்துவத்தினை ஏற்கமறுப்பது ஏன்?

சாதி ரீதியாக இன்றும் அடக்கப்பட்டு வரும் ஒடுக்கப்படும் மக்களுக்கு நியாயம் கேட்க முடியாமல் இருப்பது ஏன்?

அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றிய அக்கறைகளில்லாமல் இவை தொடர்ந்தும் செயற்படுகின்றன.

விரிந்த தளத்தில் சீரியஸாகச் சிந்திக்கும் எவரும் தமிழ் ஊடகங்களை அங்கீகரிக்க மாட்டார்கள். அல்லது கடுமையான விமர்சனங்களையே முன்வைப்பார்கள்.


ஆனால், இது குறித்த வெளி அபிப்பிராயங்களை ஏற்றுக் கொள்ள இந்த ஊடங்கள் தயாரில்லை. அதேவேளை உள்ளே விமர்சனங்களைச் செய்யவோ மறுபார்வைகளைக் கொள்ளவோ உள்ளரங்கில் விவாதங்களை நடத்தவோ கூட இவை முன்வருவதில்லை. ஆகையால்தான் இவை ஐம்பது ஆண்டுகளாக ஒரு மாதிரி, ஒரே தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த ஐம்பது ஆண்டுகாலத்திலும் உலகம் பல மாற்றங்களைக் கண்டு விட்டது. அரசியல் நடவடிக்கைகளில், பொருளாதார வளர்ச்சியில், சர்வதேச உறவுகளில், அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியில், சமூக ஊடாட்டத்தில் எனப் பலவற்றிலும் ஏராளம் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அந்த மாற்றங்களை உள்வாங்கியே ஒவ்வொருவரும் வாழ்கின்றனர். ஆனால், இவர்கள் கொண்டிருக்கும் கருத்தியற் தளத்தில் மாத்திரம் விடாப்பிடியாகவே இருக்கின்றனர்.

**- நன்றி: எதுவரை.**

## ...ர கட்டுப்பாடு

...ட்டட ஒப்பந்தக்
...மயாகக் கட்டுப்
...ர்கள். வீட்டுச்
... ஏப்ரல் மா...தில்
...கரில் தண்ணீர்
...ச்சல் குளம்,
...னவற்றில் நுளம்பு
... நிர்வாகம் தடுப்பு
...கண்டிப்பாக மேற்
... கட்டடம் கட்டு
...தங்கி இருந்தால்
...ப்பந்தக்காரர்
...வரை கூட
... (130,000 ரூபா)
...காரர் பறவை-
... மாடியில் சிறு
...றை நிறுவி
... நீரை மாற்றவும்
...வகள் அங்கு
... என்கிறார்.
...வருக்கு
...ஸ் அனுப்பி
... இதை நகர
...ன்கிறார்.



# கிளி / மாவட்ட அரச அலுவலர்களுக்கு ஆக்கத்திறன், கலைவெளிப்பாட்டு போட்டி

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க அலுவலர்களிடம் காணப்படும் திறமைகளை வெளிக்கொண்டு வரும் நோக்கத்தோடு ஆக்கத்திறன், கலை வெளிப்பாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவை ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

ஓவியம், கட்டுரை, கவிதை, தனிநடிப்பு, பேச்சு, தனிநடனம், சிறுகதை, கையெழுத்துச் சஞ்சிகை, நடனம், பட்டிமன்றம், கவியரங்கம், நாடகம், வில்லுப்பாட்டு, பாடலிசைக்கும் போட்டி (தனி) ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளுக்கான பொது நிபந்தனைகள் -

சொந்த ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும், போட்டியாளா கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றுபவராக இருத்தல் வேண்டும், வயதுக்கட்டுப்பாடு இல்லை.

போட்டிகளுக்கான செலவீனங்களைப் போட்டியாளர்களே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆக்கப் போட்டிகள் தவிர்ந்த ஏனைய போட்டிகளுக்கான விடயப்பொருள் போட்டிகளுக்கு 5 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

அதிகளவிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலக ரீதியாகப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும்.

ஒருவர் எத்தனை போட்டிகளிலும் பங்குகொள்ள முடியும். ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுவதுடன், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 100 ரூபா விண்ணப்பக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

அரசியல், இன, மன பேதமற்றதாக ஆக்கங்கள் / செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.(mount)

ஓவியம் வரைதல்

ஏ-3 அளவுடையதாக அமைதல் வேண்டும்.

மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக ஆக்கங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பண்பாட்டு விழுமியங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக ஓவியங்கள் அமைதல் வேண்டும்.

காட்சிப்படுத்தத்தக்க வகையில் ஓவியங்கட்கு சட்டம் அமைக்கப்படல் வேண்டும்.

தமக்கேற்ற பாணியில் வரைந்து விரும்பிய வர்ணங்களால் அழகுபடுத்தலாம்.

கட்டுரை

2000 தொடக்கம் 2500 சொற்களுக்குட்பட்டதாக ஏ-4 தாளில் ஒரு பக்கம் தட்டச்சுச் செய்து வழங்குதல் வேண்டும்.

எழுத்துப்பிழைகளுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

விடயப்பொருள்

துரித அபிவிருத்தி மூலம் கிளிநொச்சி மாவட்டத்தைக் கட்டியெழுப்புவோம்.

புதியதோர் உலகம் செய்வோம்.

ஆசியாவின் ஆச்சரியமாக.

கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதன் சாதக பாதக விளைவுகள்.

ஈழத்து தமிழ் வளர்த்த அறிஞர்கள்.

கவிதை

8-10 அடிகள் கொண்டதாக எழுதப்படல் வேண்டும்.

சந்தம், ஓசை, நயம், கொண்டதாக அமைதல் நன்று.

மரபு சார்ந்ததாகவோ, நவீனமாகவோ அமையலாம்.

விடயப்பொருள்

மெல்லத்தமிழ் இனிச்சாகுமா?

பொன்னையா தந்த ஈழகேசரி.

பண்பாட்டு வாழ்வு மாறலாமா?

தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும்.

பேச்சு

10 நிமிடங்களுக்குள் தரப்பட்ட பொருள் தொடர்பாக அரசியல் தவிர்த்துப் பேசுதல் வேண்டும்.

உச்சரிப்பு, தெளிவு, ஆற்றல், கருத்துக்கள், வெளிப்பாட்டுத் திறன் ஆகியன கவனிக்கப்படும்.

விடயப்பொருள்

போட்டிக்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.

தனிநடனம்

5 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

இதனோடு தொடர்புடைய அனைத்தையும் போட்டியாளரே கொண்டு வருதல் வேண்டும்.

இறுவட்டுப் பயன்படுத்த முடியும்.

தனி நடிப்பு

5 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

நடிப்பிற்கான ஒப்பனை மற்றும் இசை போட்டியாளரால் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

விடயப்பொருள்

ஷேக்ஸ்பியரின் ஷைலொக் ஒதெல்லோ அன்ரனி, இராவணன், சீதை, அரிச்சந்திரன், சந்திரமதி மற்றும் தற்காலப் பின்னணியில் அரசியல் தவிர்ந்ததாக தமக்கு விரும்பிய பாத்திரம்.

சிறுகதை

2000 -2500 இற்குமிடைப்பட்ட சொற்களில் அமைதல் வேண்டும்.

ஏ-4 தாளில் ஒரு பக்கம் தட்டச்சுச் செய்யப்படல் வேண்டும்.

எழுத்துப்பிழைகளுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

எமது சமகால வாழ்வு மற்றும் பண்பாட்டுச் சீரழிவுகளை மையமாகக் கொண்டதாக உள்ளடக்கமாக அமைதல் வேண்டும்.

கையெழுத்துச் சஞ்சிகை

ஏ-4 அளவுடையதாக தாளில் இருபக்கமும் அமைதல் வேண்டும்.

அரசியல் கலப்பற்ற விதத்தில் தாங்களே விடயப் பொருளை தீர்மானித்து 10 பக்கங்களை உள்ளடக்கியதாக அனுப்புதல் வேண்டும்.

நாடகம்

30-35 நிமிடங்களுக்குட்பட்டதாக தயாரிக்கப்படல் வேண்டும்.

அரசியல், இன. மத, பேத மற்ற கருத்துக்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

சமூக நாடகமாக அமைதல் (10 - 12 நடிகர்கள் உள்ளடக்கப்படலாம்).

விடயப்பொருள்

கைத்தொலைபேசிப் பாவனை.

எமக்கு கிடைத்த பொன்னான வாழ்வு.

அருகிவரும் மனித நேயம் போன்ற சாரம்சங்களில் கருப்பொருள் அமைதல் வேண்டும்.

சிறந்த ஆண், பெண் நடிகர், சிறந்த எழுத்துரு, சிறந்த இயக்குநர், சிறந்த இசை அமைப்பு ஆகியவற்றுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

போட்டி நடைபெறும் தினத்தன்று 30 நிமிடங்களுக்கு முன்னதாக நாடக எழுத்துருவின் பிரதி கையளிக்கப்படல் வேண்டும்.

பட்டிமன்றம் / கவியரங்கம்

போட்டிக்கான குழுவினரைத் தாங்களே ஒழுங்கு செய்தல் வேண்டும்.

விடயம் பொருள் போட்டிக்கு 20 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.

திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் பேச வேண்டிய விடயம் ஒழுங்கு தீர்மானிக்கப்படும்.


ஒரு குழுவில் நான்கு உறுப்பினர்கள் இடம்பெறலாம்.

ஒருவருக்கு 5 நிமிடங்களும் தலைமைக்கும் தொகுப்புரைக்குமாக 10 நிமிடங்களும் ஒரு குழுவினருக்கு வழங்கப்படும்.

ஓவியம், கட்டுரை, கவிதை, சிறுகதை, கையெழுத்துச் சஞ்சிகை ஆகியவற்றிற்கான ஆக்கங்கள் மே 18 ஆம் திகதிக்கு முன்னதாக அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு விண்ணப்ப இடது மேல் மூலையில் ஆக்கத்திறன் போட்டிகள் -2012 எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்வதற்கு விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து 2012.05.10 ஆம் திகதிக்கு முன்னதாக மேலேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (142)

# சித்திரா பூரணை விரத மகத்துவம்



சித்திரை மாதத்து சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணையே சித்திரா பூரணையாகும். வருடம் பிறந்து முதலாவதாக வரும் பூரணை என்பதோடு எமது தலை விதியை நிர்ணயிக்கும் எமது வாழ்நாள் கணக்குகளை எழுதிப் பேணும் யமதர்மராஜனின் கணக்குப் பிள்ளையாகத் திகழும் சித்திரகுப்தர் திரு அவதாரம் செய்த நாளாகவும் இது கொள்ளப்படுகின்றது.

ஒவ்வொரு இந்து சமயத்தினரும் கடமை விரதங்களில் ஒன்றாக கருதப்படும் சித்திரா பூரணை விரதத்தினை தாயை இழந்த ஒவ்வொரு இந்துவும் அனுஷ்டிப்பது வழமையாக உள்ளது.

தமது தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் தாயை நினைத்து விரத மனுஷ்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுகின்றது என்பது இந்து சமயத்தவர்களின் நம்பிக்கை.

இந் நாளினை சித்திர குப்த விரதநாள் என்றும் கூறுவர். இந்நாளில் சித்திரகுப்த விரதம் நோற்பார்கள். இந்நாளில் பொங்கி வழியும் பால் நிலவு போல் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்கித் திளைக்கும்.

அந்நாளில் பொங்கவிட்டுத் தெய்வங்களை மக்கள் வழிபாடு செய்து விழாவாகக் கொண்டாடி வந்தார்கள் இந்நாளில் ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவார்கள். இதற்கு சித்திரைக் கஞ்சி என்று பெயர். அன்று மாலையில் சித்திர குப்தருடைய கதையை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் எல்லோரும் பயபக்தியாக கேட்டு அனுபவிப்பார்கள். அவ் வழமை சில ஆலயங்களில் காணப்படும் தன்மை இப்பொழுது உள்ளது.

மாதம் தோறும் பூரணை வரதம் அனுட்டிப்பது சிறப்பு எனவும், அவ்வாறு மாதம் தோறும் பூரணை விரதம் அனுஷ்டிக்க முடியாதவர்கள் சித்திரா பூரணையையாவது அனுஷ்டிக்க வேண்டும். இப் பூரணை விரதமானது மற்றைய பூரணை விரதங்களை அனுஷ்டிப்பதன் பலனைக் கொடுக்கவல்லது.

இவ் விரதத்தினை முதன் முறையாக அனுஷடிக்க ஆரம்பிப்போர் ஐந்து அல்லது ஒன்பது கலசங்கள் வைத்து, அவைகளில் சித்திர குப்தனையும் மற்றும் எட்டுத் திக்குப் பாலகர்களையும் இருத்தி வழிபட்டு பின்னர் தானம், ஓமம், பிராமண போசனம் முதலியன செய்ய வேண்டும் என தேவி புராணம் கூறுகின்றது.

பொன், வெள்ளி இவைகளான பதுமையில் சித்திர குப்தனை இருத்தி நியமப்படி வழிபாடு செய்ய வேண்டும் எனவும், படைக்கும் பொருட்களாக அன்னம், வெல்லத்துடன் கலந்த எள், பால், நெய் என்பவற்றை படைத்து வழிபாடு ஆற்றுவார்கள்.

வழிபாட்டின் முடிவில் பாயாசம் நிறைந்த வெண்கலப் பாத்திரத்தை தானமாக கொடுக்கும் வழமையும் காணப்பட்டுள்ளது. இம்முறை தற்காலத்தில் அருகி வந்தாலும் சில விடயங்களில் இம்முறை இன்னும் நடைமுறையில் உள்ளது.

இந்நாளில் எல்லாப் பலன்களையும் கொடுக்கக்கூடிய இந்திரனை வழிபாடு செய்தல் நலம். மருக்கொழுத்தினால் இந்திரன் முதலிய தேவர்களை வழிபடவேண்டும் என தேவி புராணம் மேலும் கூறி நிற்கின்றது.

இயமனுடைய கணக்குப் பிள்ளையாகக் கருதப்படும் சித்திரகுப்தர் அவர் அவருடைய கணக்கினை அவரவர்கள் செய்த நன்மை தீமைகளை எழுதி வைத்து கடைசியில் உத்தரிக்கின்ற காலங்களில் அக் கணக்கினை வாசிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய முக்கியத்துவங்களைக் கொண்ட சித்திரா பூரணை நினத்தன்று உப்பைத் தவிர்த்து பசும்பால், தயிர் என்பவற்றை உண்ணாமல் இருத்தல் சிறப்பான பலனைத் தரும் இதனால் விரதம் அனுஷ்டிக்கும் ஒவ்வொருவரினதும் பாவச்சுமை குறையும்.

**சச்சி தவநேசன்**
(பயிற்றப்பட்ட ஆசிரியர் இந்து சமயம்)
**ஆ.யு.சைவசித்தாந்த மாணவன்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

04) வார்த்தைகளினால் கூறமுடியாத சம்பவத்தை ஒரு புகைப்படம் வெளிப்படுத்தும்?
1) புகைப்பட கருவியின் ஆரம்பத்தை விளக்குக.
2) புகைப்படமொன்றைப் பிரசுரிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் எவை?
3) உமது பாடசாலையின் சஞ்சிகை ஒன்றிற்காக சில புகைப்படங்கள் தேவைப்படுகின்றன. நீர் எவ்வாறான புகைப்படங்களைத் தேர்ந்தெடுப்பீர்?
4) சினிமா தொழிலில் புகைப்படத்தின் பயன்பாடுகள் எவை?

05 "தகவல்களைச் சேமிப்பதற்குத் தற்போது பலவகையான தொழில்நுட்பக் கருவிகள் பயன்படுகின்றன"
1) உமக்குத் தெரிந்த தகவல்களைச் சேமிக்கக் கூடிய கருவிகளைக் குறிப்பிடுக.
2) ஊடக நிறுவனங்கள் பயன்படுத்தும் நவீன கருவிகள் எவை?
3) வெளிநாட்டில் இருக்கும் உமது நண்பருக்கு விரைவாக ஒரு வீடியோவை அனுப்ப எண்ணுகிறீர். அதனை எவ்வாறு அனுப்ப முடியும்?
4) "SMS"என்பதன் பொருள் விளக்கம் என்ன?

06) "பொதுமக்கள் விரும்பும் தகவலை வெளியிட ஊடகவியலாளன் பல வழிகளிலும் உத்திகளைக் கையாள்வான்"
1) உமது பாடசாலையின் சஞ்சிகையை வெளியில் விற்பனை செய்ய உத்தேசிக்கின்றீர் எனின் அதில் பிரசுரிக்கக் கூடிய செய்திகள் வகைகள் எவை?
2) அச்செய்தி ஒன்றில் இருக்க வேண்டிய குணாம்சங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
3) உங்களைச் செய்தி நிருபராக ஊடகக் கழகம் நியமித்துள்ளது எனின், நீங்கள் எங்கிருந்து செய்திகளைப் பெறுவீர்கள்?
4) உங்களை ஒரு ஊடகவியலாளனாகக் கற்பனை செய்துகொண்டு ஓர் ஊடகவியலாளனின் தன்மைகளை சுருக்கமாகக் கூறுக.

07) "நேற்று மாலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் பெண் உட்பட மூன்று பேர் ஸ்தலத்திலேயே பலி" என்ற செய்தித தலைப்பில் ஓர் செய்தி வந்திருக்கின்றது" எனின்,
1) செய்தி (News) என்றால் என்ன?
2) செய்தி ஒன்றில் உள்ளடங்கும் விடையங்கள் எவை?
3) செய்தி ஒன்றிக்கும் கட்டுரை ஒன்றுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?
4) இந்தச் செய்திக்கு புகைப்படத்துடன் கலர்ப் பிரதியாக வெளியிட முடியுமா? விபரிக்க.

08) "நாளைய தினம் புதியதொரு பத்திரிகை வெளிவர இருக்கின்றது என செய்தி ஒன்றை நீர் வாசித்துள்ளீர்.
1) செய்தி ஆசிரியரை தேர்ந்தெடுப்பதற்குச் செல்வாக்குச் செலுத்தக்கூடிய விடையங்கள் எவை?
2) ஒரு வியாபார நிறுவனம் தனது பொருட்களை விளம்பரப்படுத்த எண்ணியுள்ளது. அது தேர்வு செய்யக் கூடிய ஊடகம் எவ்வாறு தீர்மானிக்கப்படும்?
3) இன்று தொலைக்காட்சி ஊடகமானது விளம்பரப்படுத்தலில் முதலிடம் வகிக்கின்றது. இதற்கு பிரபல நட்சத்திரங்களைத் தெரிவுசெய்கின்றது. அவ்வாறு தெரிவு செய்யக் கூடியவர்கள் எத்துறையைச் சார்ந்தவராக இருக்க முடியும்?
4) விளம்பரத் துறையில் பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர். இதனை ஏற்பீரா, விளக்குக.

09) "இன்று நவீன கற்பித்தல் கருவிகள் பல பாவனைக்கு வந்துள்ளன".
1) உமக்குத் தெரிந்த நவீன கற்பித்தல் கருவிகள் எவை?
2) பக்கம் புரட்டி (filp chavt) இன் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
3) தொலைபேசியின் பயன்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிடுக.
4) பல்லூடக எறியை (multi media Projetev) இன் தொழிற்பாட்டினைக் குறிப்பிடுக.

10) "இன்றைய குடும்பப் பெண்களை தொடர்நாடகம் (சீரியல்) கவர்ந்துள்ளது.
1) தொடர் நாடகம் ஒன்றில் நடிப்பதற்கு உம்மைத் தயாரிப்பாளர் அணுகியுள்ளார். நீங்கள் அதில் நடிப்பதற்குக் கவர்ந்த விடயம் என்ன?
2) சினிமாவில் இயக்குநரின் பங்கு என்ன?
3) திரைப்படம் ஒன்று வெற்றிகரமாக அமையப் பங்களிப்புச் செய்யக்கூடிய விடயங்கள் எவை?
4) நடிகரின் பங்களிப்புக்கள் எவை?






# தொடர்பாடல் மற்றும் ஊடகவியல் கற்கை - 2012

பகுதி - I
3 மணி

ஆசிரியர் : கே.கே.மனோராசா



# கல்வி முரசு



01) தொடர்பாடல் என்றால் என்ன?
1) ஒரு நபர் பிறநபர்களுடன் தனது தகவலை பரிமாறிக் கொள்வது
2) ஒரு நபர் பிற நபர்களுடன் முரண்படுவது
3) ஒரு நபர் தனிமையில் உரையாடுவது
4) மேறிகூறிய எதுவுமில்லை

02) தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தை முன்வைத்தவர்?
1) ஏ.வி.டைசி 2) பேராசிரியர் பௌஸர் 3) ஷானன் லீவர் 4)ஹெரல் டீ.லக்ஸ்வெல்

03) தொடர்பாடலுக்கான வரைவிலக்கணம் வெளியிடப்பட்ட ஆண்டு?
1) 1958 2) 1948 3) 1997 4) 2001

04) தகவல் வெளிப்படுத்தும் முறை எது?
1) சித்திரங்களும், சிற்பங்களும் 2) அபிநயங்களும், சைகைகளும்
3) இசைகளும், ஊடகங்களும் 4) மேற்கூறிய எல்லாம்

05) 15000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொடர்பாடலுக்கான ஓவியம் எது?
1) சிகிரியா 2) அஜந்தா 3) அல்டமீரா 4) பிரமிட்

06) தொடர்பாடல் சூத்திரத்தை முன்வைத்தவர் யார்?
1) ஷானன் லீவர் 2) ஹெரல் டீ.லக்ஸ்வெல் 3) ஏ.வி. டைசி 4) ஆபிரஹாம் லிங்கன்

07) தொடர்பாடல் சூத்திரம் முன்வைத்த ஆண்டு?
1) 1948 2) 1949 3) 1991 4) 2004

08) தொடர்பாடல் மூலம் அதிகம் எதிர்பார்க்கப்படும் விடயம்?
1) பணம் 2) பதில் 3) தாக்கம் 4) எதுவுமில்லை

09) தொடர்பாடல் சரியான முறையில் சென்றடையாமைக்கான காரணம்?
1) கடத்தல் 2) தடைகள் 3) தாமதம் 4) நேரவிரையம்

10) தொடர்பாடல் எத்தனை வகைப்படும்?
1) 2 2) 3 3) 5 4) 7

11) ஆளிடை தொடர்பாடலின் நன்மை எது?
1) பதில் உடனடியாகக் கிடைக்கும் 2) ஊடகம் தேவையில்லை
3) நேர வீண்விரையம் தவிர்க்கப்படும் 4) மேற்கூறிய எல்லாம்

12) பஸ்தரிப்பு நிலையத்திலுள்ள சிலரிடையே இடம்பெறும் தொடர்பாடல் எத்தகையது?
1) முறையான தொடர்பாடல் 2) முறைசாரா தொடர்பாடல்
3) குழுத் தொடர்பாடல் 4) வெகுஜனத் தொடர்பாடல்

13) வெகுஜன ஊடகம் எது?
1) பத்திரிகை 2) வானொலி 3) தொலைக்காட்சி 4) மேற்கூறிய யாவும்

14) அச்சு இயந்திரத்தை உருவாக்கியவர் யார்?
1) குட்டன் பார்க் 2) ஷாணன் லீலர் 3) ஹெல்ட் டீ.லக்ஸ்வெல் 4) ஏ.வி.டைசி

15) அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு?
1) 1420 2) 1492 3) 1440 4) 1312

16) பின்வருவனவற்றுள் யாரிடம் கற்பனைத்திறன் அதிகம் காணப்பட வேண்டியவர்?
1) பத்திரிகை வாசிப்பவர் 2) வானொலி கேட்போர்
3) தொலைக்காட்சி பார்ப்போர் 4) இணையத்தளம் பயன்படுத்துவோர்

17) சுட்டுவிரல், நடுவிரலின் அடிப்படையில் 'V' வடிவம் வெளிப்படுத்தும் தகவல்?
1) சந்தோசம் 2). திட உறுதி 3) வெற்றி 4) கவலை

18) தலைகீழ் பிரமிட் முறை குறிப்பது?
1) ஆளிடைத் தொடர்பு 2) வெகுஜனத் தொடர்பாடல்
3) செய்தி எழுதும் முறை 4) கட்டுரை எழுதும் முறை

19) தொடர்பாடலுக்கான தடையாக அமையும் காரணி எது?
1) மொழி 2) பிரதேச வேறுபாடு
3) ஊடகத் தடை 3) மேற்கூறிய யாவும்

20) முறைசார் தொடர்பாடல் மாதிரி முறைகள் எத்தனை?
1) 5 2) 2 3) 3 4) 4

21) வாசகர்களிடையே அதிமுக்கியமானதும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செய்தி எது?
1) மென்செய்தி 2) வன்செய்தி 3) புலனாய்வுச் செய்தி 4) கட்டுரைச் செய்தி

22) செய்தி நிறுவனத்தினுடைய பிரதான வருமானமாக அமையும் மூலம்?
1) பத்திரிகை விற்பனை 2) விளம்பரம்
3) கழிவுப் பொருட்கள் விற்பனை 4) மேற்கூறிய எதுவுமில்லை

23) செய்தி ஒன்றின் குணாம்சமாக அமைவது?
1) காலம் 2) தாக்கம். 3) அண்மை 4) மேற்கூறிய யாவும்

24) ஊடகயவியலாளனுக்கு செய்தி கிடைக்கப்பெறும் இடம் எவ்வாறு அழைப்பர்?
1) செய்தியறை 2) செய்தி முகவர் 3) செய்தி மூலம் 4) ஊடகநிறுவனம்

25) A.B.C. முறை விளக்குவது?
1) துல்லியம், நடுநிலை, தெரிவு 2) துல்லியம், அபூர்வம், குறுக்கம்
3) பயம், சமநிலை, வெளிப்படை 4) முரண்பாடு, சமநிலை, தெளிவு

26) கடதாசி முதன் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு?
1) கி.மு.300 2) கி.மு.330 3) கி.மு.400 4) கி.மு. 105

27) கடதாசியைக் கண்டுபிடித்த சீன நாட்டவர் யார்?
1) ட்சாயி லூன் 2) பைஸர் 3) ஏ.வி.டைசி 4) ஷாணன் லீவர்

28) இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை எது?
1) லங்காநேசன் 2) சுதேசமித்திரன் 3) உதயதாரகை 4) உரைகல்

29) இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட கட்சி எது?
1) தொழில் கட்சி 2) ஐக்கிய தேசியக் கட்சி
3) லங்கா சமசமாஜ கட்சி 4) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

30) பந்தி எழுத்து முறை ஆரம்பமான ஆண்டு?
1) 1642 2) 1731 3) 1694 4) 1740

31) புகைப்படம் ஒன்று பிரசுரிக்கும் போது அதில் மை கறை காணப்படுகிறது. இது எவ்வகையான தடை?
1) மொழித்தடை 2) காட்சித்தடை 3) ஊடகத்தடை 4) சூழல் தடை

32) பாடசாலைகளில் அதிகம் பயன்படுத்தும் ஊடகம்?
1) வானொலி 2) தொலைக்காட்சி 3) பத்திரிகை 4) வெளிநாட்டுச் சஞ்சிகைகள்



33) சிறுவர்களை அதிகளவு கவர்வதற்கு தொலைக்காட்சி ஊடகம் பயன்படுத்தும் உத்தி?
1) சினிமாப் பாடல்களை ஒளிபரப்புதல்
2) திரைப்படங்களை ஒளிபரப்புதல்
3) விளம்பரங்களை ஒளிபரப்புதல்
4) கார்டூன் படங்களை ஒளிபரப்புதல்

34) புதிதாக உற்பத்தி செய்த சலவை செய்யும் இயந்திரத்தை அறிமுகம் செய்ய பொருத்தமான ஊடகம்?
1) பத்திரிகை 2) சஞ்சிகை 4) தொலைக்காட்சி 4) வானொலி

35) புலனாய்வு இதழியல் ஆரம்பமான நூற்றாண்டு?
1) கி.பி. 19 2) கி.பி. 20 4) கி.பி. 4 4) கி.பி.21

36) இன்றைய யுகத்தில் கணினி இன்றியமையாத ஒன்று. இணையத்தளம் உருவாக்கப்பட்ட ஆண்டு?
1) 1844 2) 1923 4) 1984 4) 1990

37) பக்க வடிவமைப்பில் அதிகம் பயன்படுத்தும் மென்பொருள் (soft weare) எது?
1) Indesign 2) Page maker 4) Photo shope 4) மேற்கூறிய எல்லாம்

38) வீரகேசரி பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1) 1948 2) 1931 4) 1932 4) 1944

39) அரசாங்கத்தின் தகவல்களை வெளியிடும் பத்திரிகையை எவ்வாறு அழைப்பர்?
1) தினகரன் 2) தினமின 3) வர்த்தகமானி 4) விஞ்ஞானமானி

40) செல்லிடத் தொலைபேசியின் நன்மையாக அமையாதது?
1) புகைப்படம் எடுத்தல் 2) தகவல் பரிமாற்றம்
3) இணையத்தள பாவனை 4) ஆபாச படங்களை விநியோகித்தல்

# தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி

## பகுதி - II

01) "ஒரு நபர்" தகவல் ஒன்றை வெளியிட ஊடகங்களைப் பயன்படுத்துகின்றார்"
1) தொடர்பாடல் என்றால் என்ன?
2) தொடர்பாடலின் வரலாற்றை சுருக்கமாகக் கூறுக.
3) உமக்குத் தெரிந்த ஊடகங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
4) ஆதிமனிதனின் தொடர்பாடல் முறைகளைக் குறிப்பிடுக.
5) தொடர்பாடல் சுத்திரமான SMCR இனை விளக்குக.
6) தொடர்பாடல் செய்வதன் நோக்கம் என்ன?

02) "உமது பாடசாலையில் ஊடக கழகமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் மாதத்தில் இரண்டு சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றீர்கள்" என வைத்துக்கொண்டு,
1) சஞ்சிகை எவ்வகையான தொடர்பாடல் ஊடகம்?
2) இதனை உருவாக்க உமக்குத் தேவையான தகவல்களை எங்கிருந்து பெறுவீர்?
3) சஞ்சிகையை உருவாக்கப் பயன்படுத்தும் நவீன கருவிகளைக் குறிப்பிட்டு அதனுடைய தொழிற்பாட்டை சுருக்கமாகக் கூறுக.
4) சஞ்ச்சிகை ஒன்றின் பயன்பாட்டினைக் குறிப்பீடுக.

03) வாசகனின் தன்மையை அறிந்து ஊடக நிறுவனங்கள் தமது தகவல்களை அவர்களுக்கு ஏற்றாற்போல் வெளியிடுகின்றது.
1) இலங்கையில் வெளிவந்த முதல் பத்திரிகை எது?
2) முதலாவது தமிழ்ப் பத்திரிகை எது? அது எங்கிருந்து எப்போது வெளியிடப்பட்டது?
3) பத்திரிகையுடன் ஒப்பிடுகையில் வானொலியின் நன்மைகள் எவை?
4) தொலைக்காட்சியின் வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறுக.

# மனதைப் புண்படுத்தாத வகையில் ஊடகங்கள் செயற்படவேண்டும்

(நிரு,ஷாரா)



ஒருவரின் மனதை இன்னொருவர் பாதிக்க கூடாத வகையில் ஊடகம் செயற்படவேண்டும் எனவும், புனிதமான இந்த ஊடகத்துறையை விளையாட்டுப் பொருளாக, நகைப்புக்குரியதாக ஆக்கி விடாமல் செயற்பட வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சுதந்திர ஊடகக் குரலின் ஏற்பாட்டில் நேற்றுமுன் தினம் யாழ்.நாவலர் கலாசார மண்ட பத்தில் நடைபெற்ற ஊடக சுதந்திரதின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக இன்று ஊடக சுதந்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட அரச அதிபர், ஒருவரது நிர்வாகத்தில் தவறுகள், காணப்படுமாயின் எடுத்துக் கூறி சரியாக மக்களிற்கு சேவை செய்வதற்கு ஊடகம் சரியான வழிகாட்டல்களை வழங்கி வருகிறது. போர்க் காலங்களில் மக்களின் குரலாக ஊடகம் செயற்பட்டது என்றார்.

ஊடக சுதந்திரக் குரலின் தலைவர் இரா.புத்திர சிகாமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக ஊடகத்துறைக்காக உயிர் நீத்தவர்களை நினைவு கூறும் வகையில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்விற்கு ஜனாதிபதி சட்டத்தரணியும் மற்றும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்ன சிங்கம் பிரதமவிருந்தினராகவும், யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் சிறப்பு விருந்தினராகவும், தமிழ்த் தேசயக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, மூத்த ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர், வன்னி மாவட்ட சுதந்திரக்கட்சி இணைப்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குநரும் ஊடக சுதந்திரக் குரலின் நிர்வாகக் குழு உறுப்பினருமான தே.தேவானந் வரவேற்புரை ஆற்ற தொடர்ந்து ஊடக சுதந்திரக்குரலின் தலைவர் இரா.புத்திரசிகாமணி தலைமையுரையை நிகழ்த்தினார். தொர்டர்ந்து ஊடக சுதந்திரக்குரலின் அறிக்கை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கோபாலரட்ணம், கானமயில்நாதன், தில்லைநாதன், வித்தியாதரன்,பிரபாகரன் ஆகியோர் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா , சுதந்திரக்கட்சியின் வன்னி மாவட்ட இணைப்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன், சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர், ஊடகவியலாளர் அருந்தவபாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்வின் இறுதியில் சமாதானமும் நல்லிணக்கமும் என்ற கருப்பொருளில் நடைபெற்ற ஒளிப்படப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (சி)



# ஊடகங்களைக் கட்டியெழுப்பவேண்டும்



மீண்டும் ஒரு ஊடக உயிர் பறிகொடுக்கப் படாத நிலையில் ஊடகத்துறையைக் கட்டியெழுப்ப வேண்டும் என வீரகேசரி வார இதழ் பிரதம ஆசிரியர் தேவராஜ் தெரிவித்தார்.

உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நிமலராஜ் ஞாபகார்த்த அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற பிரபல கேலிச் சித்திரக் கலைஞர் பயஸின் கேலிச் சித்திரங்கள் அடங்கிய 'காலக் கிறுக்கல் என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழ் ஊடகவியலாளர்களுடன் பல்வேறு சிங்கள ஊடகவியலாளர்கள் இணைந்து பணியாற்றியதாகக் குறிப்பிட்ட வீரகேசரி நாளிதழின் ஆசிரியர், தற்போதய சமாதான சூழ்நிலையிலும் அவ்வாறே ஒற்றுமையாகச் செயற்படுகின்றனர் என்றார்.

அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில், ஊடக சுதந்திரம் பற்றிப் கூறப்பட்டுள்ளதாகவும், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுதற்கு அரசாங்கம் புதிய சட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

1999ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை 113 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் வீரகேசரி நாளிதழின் பிரதம ஆசிரியர் இதன்போது சுட்டிக்காட்டினார். (சி)

# குப்பைகளால் நிரம்பிவழியும் சங்கானை தொட்டிலடி வீதி



(கஜா)


சங்கானையிலிருந்து தொட்டிலடி செல்லும் வீதி குப்பைகளால் நிரம்பி வழிவதாக இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள சிலரே இரவு வேளைகளில் வீட்டிலுள்ள கழிவுப் பொருட்களைக் கொண்டுவந்து குறிப்பிட்ட இடத்தில் கொட்டுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் இப் பகுதியிலே நுளம்புப் பெருக்கம் கூடுதலாகக் காணப்படுவதால் தாம் சுகாதார ரீதியாகப் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டிய மக்கள், இதனை சுகாதார உத்தியோகத்தர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அதற்கான தீர்வினையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். (சி)

# மெய்தான் பாருங்கோ...

## மாற்றத்தை விரும்பாதவர்கள்



வதைபட்ட வாழ்க்கையின் நினைவுகளையும், சிதைபட்ட மனதின் தழும்புகளையும்

எத்தனை நாளைக்குத்தான் மனசில சுமந்து கொண்டு வாழுறது?

போருக்கு முன்னைய காலங்களில நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை நினைக்க இண்டைக்கும் அழுகை வரும் எங்களுக்கு. ஏனெண்டால் பாருங்கோ நாங்களும் நம்மடபாடுமாக வயல், தோட்டம், துரவு...எண்டு உழைப்புத்தான் எங்கட மூச்செண்டு வாழ்ந்தனாங்கள் கண்டியளே.

இடையில ஒரு போராட்டம்...எண்டு சொல்லி அதோடை இழுபடவேண்டி வந்ததால கடைசியில இருக்க இடமில்லாமல் சொந்த நாட்டிலேயே, சொந்த மண்ணுக்குப் பக்கத்திலேயே அகதிமுகாமில ஆடுகள், மாடுகள் மாதிரி பட்டிக்குள்ள வாழவேண்டிய நிலையாய் போச்சுது.

இரும்புக்கம்பிப் பட்டிக்குள்ள இரண்டு வருசம் இருந்திட்டு பிறகு ஒருமாதிரி வெளியில மீள்குடியேற்றமெண்டு ஊருக்கு வந்தா ஊர் கிடந்த அலங்கோலம்...? அதையேன் பேசுவான்!

ஊரைப் பாத்தவுடன திரும்பிப் பழையபடி முகாமுக்கு போனால் என்ன...? எண்டமாதிரி

மனசு இருந்தது பாருங்கோ!

எண்டாலும் இயலுமானவரை பிரயாசைப்பட்டு வளவு வாய்க்காலுகளைத் துப்புரவாக்கி முகாமிலயிருந்து கொண்டு வந்த தடி, தண்டுகளால ஒரு கொட்டில் போட்டுக்கொண்டு இருந்தம்.

ஆரம்பத்தில சில நிறுவனங்கள் உதவி செய்தாலும், அது எங்கட தேவைக்கும் பாவனைகளுக்கும் போதுமானதாக இருக்கேல்லைக் கண்டியளே!. சங்கக்கடையில குடுக்கிற ரேசன் சாமானோடை ஏதோ காலம் போய்க்கொண்டிருந்தது பாருங்கோ!

இந்தக்கால ஓட்டத்தில அவனவன் ஏதோ தங்கட பிரயாசத்தால முன்னுக்கு வரப் பாத்தாங்கள். எண்டாலும் அந்த முன்னுக்கு வாற நிலைமையெண்டது எல்லாராலையும் சாத்தியப்படாமல் போச்சுது.

இதுக்கு என்ன காரணமெண்டு கேட்கிறியளே?

எல்லாம் உளத்தாக்கம்தான். ஷெல்லடியளுக்கையும், வில்லங்கமாகப் போராட்டத்துக்குள்ள இழுபட்டுப்போய் செத்தவையளை நினைச்சு நினைச்சும்...அந்த நினைவுகளே நினைக்கிறவையளின்ரை உடம்பையும் உள்ளத்தையும் நல்லாத் தாக்கிப்போட்டுது

பாருங்கோ!

இவையளின்ர மனவேதனையளையும் உளத்தாக்கங்களையும் வெளியில அதாவது வன்னிக்கு வெளியில இருக்கிற கனபேர் இன்னமும் சரியாப் புரிஞ்சு கொள்ளேல்லைக் கண்டியளே!

அவையளின்ரை ஏழ்மை நிலையளை இப்பவும் நக்கலடிக்கிற: நையாண்டி பண்ணுகிற ஆட்கள் கனபேர் இருக்கினம். போருக்குள்ள அம்பிடாத தாங்கள் மட்டும் புண்ணியம் செய்த ஆட்களெண்டும், மற்றவையெல்லாம் போன ஜென்மத்தில பழிபாவம் செய்தவையெண்ட கணிப்பீடும் பல பேருக்கு அவேன்ர மனசில பதிஞ்சுபோய்க் கிடக்குது.

அதால வன்னிச்சண்டைக்குள்ள அம்பிட்ட சனங்கள் தங்கட சுயபிரயாசத்தால முன்னேறுகிறதையும் தங்கட வாழ்க்கையில ஒரு மாற்றத்தைக் கொண்டுவர விரும்புறதையும் போருக்குள்ள அம்பிடாத 'புண்ணியம் செய்த ஆட்கள்' விரும்புகினம் இல்லை.

எனக்கு உதைச்சொல்லத்தான் ஞாபகம் வருகுது பாருங்கோ!

நம்மடை எழுத்தாளர் செங்கை ஆழியான் இருக்கிறாரல்லோ! அவர் தன்ர 'கங்கைக்கரையோரம்' நாவலில என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமே!

'மாற்றங்களை எங்கள் சமூகம் ஒப்புக்கொண்டு விடுவதில்லை. ஒப்புக்கொண்டாலும்

தங்கள் வயிற்றெரிச்சலைக் காட்டாமல் விடுவதில்லை...'. இது எவ்வளவு ஆழமான கருத்தெண்டது விளங்குதுதானே உங்களுக்கு.

போருக்கை அம்பிட்டவன் மேல போய்ச்சேரும் வரைக்கும் கந்தல் உடுப்போடைதான் காலந்தள்ளவேணுமெண்டு நினைக்கிற ஆட்களுக்கு அவன் தன்ர உழைப்பால நல்ல உடுதுணியள் வாங்கி தனக்கேற்றமாதிரி நல்ல வடிவா உடுத்துக் கொண்டு திரியுறதை சகிக்க மாட்டினம் பாருங்கோ.

'அட! இஞ்சை பார்...பேந்தென்ன...'

'சூ..! ஆள் எழும்பியிட்டார்...'

'இனி இவையளைப் பிடிக்கேலாது...' எண்டு வாத்தையளை வாயால கவிட்டுக்கொட்டுற செயற்பாடுகள் வந்து, மாற்றத்தை விரும்பாதவர்களின் வயிற்றெரிச்சலையும், காழ்ப்புணர்வுகளையும்

வெளிச்சம் போட்டுக் காட்டுற சங்கதிதானொழிய வேறையொண்டுமில்லைக் கண்டியளே!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# நாளொன்றுக்கு 35 ரூபாவில் வாழும் பெரும்பாலான இந்திய மக்கள்



(புதுடில்லி)

இந்தியாவில் கிராமப்புறங்களில் வசிப்பவர்களில் 60 சதவீத மக்கள், தினமும் 35 இந்திய ரூபாய்க்கும் குறைவான செலவில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அரசு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

என்.எஸ்.ஓ.ஓ. என்ற மத்திய அரசு அமைப்பு நடத்திய சராசரி தனிநபர் செலவழிப்பு குறித்த ஆயவில் இது தெரியவந்துள்ளது.

இந்தியாவின் கிராமங்களில் வசிக்கும் மக்களில் 10 சதவீத பேர் 15 ரூபாய் செலவில் அன்றாட வாழ்க்கையைக் கழிக்கின்றனர் என்று ஆய்வு முடிவு கூறுகிறது.

மேலும், கிராமப்புற செலவழிப்பை பொறுத்தவரை, இந்தியாவிலேயே பீகார் மாநிலம் மிகவும் கீழான நிலையில் இருப்பதாகவும், சட்டீஸ்கர், ஒடிசா, ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்கள் இதற்கு அடுத்த நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், கேரளா, பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலத்திலுள்ள கிராமவாசிகள் அதிகம் செலவழிப்பதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

நகர்ப்புற சராசரி செலவழிப்பில் மகாராஷ்டிரா, கேரளா, ஹரியானா ஆகிய மாநிலத்தவர்கள் முதல் 3 இடம் பெறுகின்றனர் என்றும் அந்த ஆய்வில் தெரிகிறது.

# சி.பி.ஐ.யிலும் சில கறுப்பாடுகளாம்



(புதுடில்லி)

இந்தியாவில் ஊழல் மற்றும் முறைகேடு என சிக்குபவர்களை குறி வைத்து பிடித்து முறையான விசாரணை நடத்தி, சிறைக்குள் தள்ளிவரும் நம்பத்தகுந்த , இந்திய ஜனநாயகத்தில் நம்பிக்கையை மேலோங்க செய்து வரும் சி.பி.ஐ. துறையிலும் 2 டசின் கறுப்பு ஆடுகள் இருப்பதாக பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை உட்கட்டமைப்பு கண்காணிப்பு அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து சி.பி.ஐ. உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில் இந்த துறை மிக நேர்மையானது. இங்கு ஒழுக்கக்கேட்டுக்கு இடமில்லை. இருப்பினும் சில டி.எஸ்.பி., பொறுப்புக்களில் உள்ளவர்கள் நேர்மையின்மை, நம்பிக்கைத் துரோகம் போன்ற மனப்பாங்கில் இருப்பது கண்டறியப்பட்டது.


இதன்படி சுமார் 25 பேர் முக்கிய பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டு பவர் இல்லாத இடங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரை மீதான இறுதிக்கட்டத்திற்கு நீண்ட காலம் பிடிக்கும். 'விரைவில் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றம் மூலம் நிரூபிக்கப்பட்டால் இவர்கள் பணியில் இருந்து நீக்கவும் சட்டத்தில் இடம் இருக்கிறது என்றார்.

இந்தியச் செய்திகள்

# இராணுவ வீரர் சுட்டுக் கொலை

(ஜம்மு)

ஜம்மு காஷ்மீர் கிஷ்ட்வார் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கிஷ்ட்வார் மாவட்டத்தில் உள்ள பாலமர் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக இராணுவத்தினருக்கு நேற்றுமுன்தினம் மாலை தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து உள்ளூர பொலிஸாருடன் இராணுவத்தினர் இணைந்து தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது பாலமர் பகுதியில் மறைவிடத்திலிருந்து தீவிரவாதிகள் இராணுவத்தினர் மீது சுட்டனர். இதில் இராணுவ வீரர் ஒருவர் பலியானார். தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. நள்ளிரவு வரை இந்தச் சண்டை நீடித்தது. இருளை பயன்படுத்தி தீவிரவாதிகள் தப்பிச்சென்றுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



# மது விற்ற பணம் பொதுச்சேவைக்கு

(இலண்டன்)


இலண்டனில் மதுபானம் விற்ற பணம் உத்தரகண்ட மாநிலத்தில் மாற்றுத் திறனாளி களுக்கான பள்ளிக்கூடம் கட்ட பயன்படுத்தப்படவுள்ளது. பிரிட்டனின் பிரபல கிளென்பிடிச் மதுபான தொழிற்சாலையின உரிமையாளர்கள், ஒவ்வொரு 10 ஆண்டுக்கும் அரிய வகை விஸ்கியை ஏலம் விட்டு, அதன் பணத்தை அறக் கட்டளைகளுக்கு தானமாக வழங்குவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

இந்த மதுபான தொழிற் சாலையை நிறுவியவர், வில்லியம் கிரான்டின் பேத்தி ஜேனட் ஷீட் ராபர்ட். கடந்த ஆண்டு, 110 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய ஜேனட், கடந்த ஏப்ரலில் காலமானார். 55 ஆண்டு கால பழமையான சிங்கிள் மால்ட் விஸ்கிக்கு, ஜேனட் பெயர் சூட்டப்பட்டு, சமீபத்தில் அது ஏலம் விடப்பட்டது. 90 இலட்ச ரூபாய்க்கு இந்த விஸ்கி ஏலம் எடுக்கப்பட்டது. இந்த பணம் "லோட்டஸ் பிளவர்" அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தியாவில் ராஜஸ்தான், உத்தரகண்ட், அசாம், லடாக் ஆகிய பகுதிகளில், கடந்த 20 ஆண்டுகளாக, பல்வேறு நல திட்டங்களை லோட்டஸ் பிளவர் அறக்கட்டளை நிறைவேற்றி வருகிறது. தற்போது ஏலம் விடப்பட்ட விஸ்கியின் மூலம் கிடைத்த பணத்தை இந்த அறக்கட்டளை, உத்தரகண்ட் மாநிலத்தில் மாற்றுத் திறனாளி மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளியை கட்டுவதற்கு பயன்படுத்தவுள்ளது.

# இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு பேப்பர்

(இலண்டன்) .

பாகிஸ்தானில் செயற்படும் பத்திரிக்கைகளுக்கு இந்தியாவிலிருந்து காகிதத்தை இறக்குமதி செய்ய பாகிஸ்தான் அரசு அனுமதி வழங்கியுள்ளது.



இதுகுறித்து ஏற்றுமதி நிறுவனமான கன்னா பேப்பர் கம்பெனி இயக்குநர் சுனீத் கோச்சார் தெரிவித்துள்ளதாவது, இந்திய பத்திரிகை காகிதத்தின் விலை குறைவாக இருப்பதன் காரணமாக பாகிஸ்தானில் உள்ள 'தி டான்' மற்றும் 'ஜங்க் குரூப' போன்ற நிறுவனங்களுக்கு காகிதங்கள் தேவைப்பட்டது.

இதையடுத்து தற்போது 10 மெட்ரிக் தொன் அளவிற்கு இறக்குமதி செய்து கொள்ள பாகிஸ்தான் அரசு அந்நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த இறக்குமதி அட்டாரி-வாகா எல்லை வழியாக பாகிஸ்தானுக்கு செல்கிறது.

ஏற்கனவே இந்தியாவிலிருந்து 137 பொருட்கள் மட்டுமே இறக்குமதி, ஏற்றுமதிக்கு பாகிஸ்தான் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரயில் பாதை அமைக்கும் திட்டங்கள் நிலுவையில்

புதிய ரயில் பாதைகள் அமைப்பது உட்பட 340 ரயில்வே திட்டங்கள் நிதிப்பற்றாக்குறையால் நிலுவையில் உள்ளதாக ரயில்வே இணை அமைச்சர் முனியப்பா தெரிவித்துள்ளார். லோக் சபாவில் நேற்றுமுன்தினம் கேள்வி நேரத்தின்போது, அவர் தெரிவித்ததாவது, கடந்த 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் திகதி நிலவரப்படி, புதிய ரயில் பாதைகள் அமைப்பது, சாதாரண ரயில் பாதைகளை அகல ரயில் பாதைகளாக மாற்றுவது, இரண்டாவது ரயில் பாதை அமைப்பது என, 340 ரயில்வே திடடங்கள், நிதிப்பற்றாக்குறை காரணமாக நிலுவையில் உள்ளன. சாதாரண மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காகவே, கடந்த எட்டு ஆண்டுகளாக, பயணிகள் கட்டணத்தை ரயில்வே உயர்த்தவில்லை. அதிக அளவில் சரக்கு போக்குவரத்தை மேற்கொள்வது, ரயில் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிப்பது, வருவாய் வரும் முறைகளை சீரமைப்பது, ரயில்வே நிலத்தை வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தி வருமானம் பெறுவது, செலவுகளைக் கட்டுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் மூலம், ரயில்வேயின் வருவாயை அதிகரிக்க ரயில்வே துறை திட்டமிட்டுள்ளது.

# பயணியை கொன்ற ரிக்கெட் பரிசோதகர்



(சண்டிகார்)

பயணியை ரயிலில் இருந்து கீழே தள்ளிய, ரயில் டிக்கெட் பரிசோதகர் கைது செய்யப்பட்டார். பலத்த காயமடைந்த பயணி, மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

சம்பவத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பயணி பிராங்க் வில்பிரட் (வயது-23) என்பவரே இறந்தவராவார். இவர் கடந்த மாதம் 29 ஆம் திகதி அமிர்தசரஸ் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணித்தார்.

ரயில் கர்நால் ரயில் நிலையத்திற்கு வெளியே சென்ற பிறகு, இவர் பிளாட்பாரத்தில் விழுந்து கிடந்ததை சிலர் பார்த்தனர். இதுபற்றி பயணிகள் சிலர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ரயில்வே பொலிஸார், அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பலத்த காயமடைந்த அவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி இறந்தார். சம்பவம் பற்றி தெரியவருவதாவது, ரயிலில் பயணித்துக் கொண்டிருந்த பிராங்க் வில்பிரட்டிடம், ரயில் டிக்கெட் பரிசோதகர் மனோஜ்குமார் சில ஆவணங்களைக் கேட்டுள்ளார்.

இதில், வில்பிரட்டிற்கும், டிக்கெட் பரிசோதகருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஆத்திரமடைந்த டிக்கெட் பரிசோதகர் மனோஜ் குமார், பயணியைப் பிடித்து ரயிலில் இருந்து வெளியே தள்ளியுள்ளார். இதனால், பயணிக்கு தலையில் பலத்த காயமேற்பட்டுள்ளது. தற்போது காயம் காரணமாக இறந்துள்ளார்.

# மதம் கொண்டது யானை



இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள வடக்குநாதர் சிவன் கோவிலில் பூரம் விழாவில் பங்குபற்றிய யானையொன்று மதம்பிடித்து ஓடியதால் 62 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சம்பவத்தில் காயமடைந்தவர்களில் முதியவர்கள், பெண்கள் மற்றும் சிறார்களும் அடங்குகின்றனர்.

40 வயதான பெண்ணொருவர் யானையின் தாக்குதலால் வயிற்றில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யானையின்மீது ஏறியிருந்த இளைஞர்கள் இருவர், கீழே விழுந்தபோதிலும் மயிரிழையில் உயிர் தப்பியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னரே இந்த யானை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

# நைஜீரியா சந்தையில் திடீர்த் தாக்குதல் 34 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்



நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியான யோபி மாநிலத்தில் உள்ள கால்நடை சந்தையில், ஆயுதங்களுடன் வந்த மர்மக் கும்பல் தாக்குதல் நடத்தியதில் 34 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மர்மக் கும்பலில் வந்த நபர் ஒருவர் கண் மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதாகவும், இக்கும்பலில் ஒருவனை பிடித்த வர்த்தகர்கள் அவன் மீது பெட்ரோல் ஊற்றி கழுத்தில் டயரை மாட்டி தீ வைத்து கொளுத்தியதாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

20 வெடிகுண்டுகள் மற்றும் ஒரு துப்பாக்கி இத்தாக்குதலில் பயன்படுத் தப்பட்டதாக காவல்துறையின் செய்தித் தொடர்பாளர் டோயின் பாடஜ்சின் தெரிவித்துள்ளார். மேலும் இது பற்றித் தெரிவிக்கையில், இறந்த வர்களின் எண்ணிக்கையை துல்லியமாக தெரிவிக்க முடியவில்லை. இத் தாக்குதலில் 60இற்கும் மேற்பட்ட மக்கள் மரணம் அடைந்திருக்கலாம் என தெரிவித்தார்.

# நேபாள அமைச்சரவை இராஜினாமா



நேபாளத்தின் அமைச்சரவை இராஜினாமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கில் தேசிய ஐக்கிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் வகையில் அமைச்சர்கள் இராஜினாமாச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேபாள அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்த முக்கிய மூன்று அரசியல் கட்சிகள் இது தொடர்பான இணக்கப்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளன. மே 27 ஆம் திகதி நேபாளத்தின் புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டு ஒரு வருடத்துக்குள் பாராளுமன்றத் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மாவோஜிஸ்ட்டுக்கள் அரசியலில் பிரவேசித்துள்ள நிலையில், அங்கு அடிக்கடி ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் நியாயமான முறையில் நடக்கும்; எகிப்து இராணுவ ஆட்சியாளர் தெரிவிப்பு

எகிப்தில் இந்த மாதம் இறுதியில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தல், ஒளிவு மறைவில்லாமல் நியாயமாக நடக்கும் என இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். எகிப்தில் மக்கள் போராட்டம் செய்யத் தொடங்கியவுடன், ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதனையடுத்து இராணுவ உயர்மட்டக் குழு தலைமையில் இடைக்கால ஆட்சி நடக்கிறது. இம்மாதம் 23ஆம் மற்றும் 24ஆம் திகதி ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற உள்ளது.

ஏழு முக்கிய கட்சிகள் இந்தத தேர்தலில் போட்டியிடுகின்றன. தேர்தல் ஆணையமும், இடைக்கால இராணுவ உயர்மட்டக் குழுவும் தேர்தலை முறைப்படி நடத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி சில கட்சிகள் தேர்தலை புறக்கணித்து விட்டன.

இதற்கிடையே தலைநகர் கெய்ரோவில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தை கண்டித்து, சில கட்சியினர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் கலவரமாக மாறியதில் 20 பேர் கொல்லப்பட்டனர், 150 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச்சம்பவத்துக்கு இராணுவம் வருத்தம் தெரிவித்துள்ளது. இராணுவ உயர் மட்ட கவுன்சிலின் மூத்த அதிகாரி முகமது அல் அசார் குறிப்பிடுகையில், எதிர்வரும் 23ஆம் மற்றும் 24 ஆம் திகதி நடக்கும் தேர்தல் ஒளிவு மறைவில்லாமல் நியாயப்படி நடக்கும். இந்தத் தேர்தலில் இராணுவப் பின்புலம் உள்ள



வேட்பாளர்கள் யாரும் போட்டியிடவில்லை. இந்தத் தேர்தலை சர்வதேச நாடுகளைச் சேர்ந்த, 40இற்கும் அதிகமான கண்காணிப்பாளர்கள் பார்வையிட உள்ளனர். எனவே இந்தத் தேர்தல் 100 சதவீதம் நியாயமாகவே நடக்கும் என்றார்.

# ஒபாமாவின் காதல் லீலை அம்பலம் புதிய புத்தகத்தால் சர்ச்சை



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மீது இதுவரை எந்தவிதமான செக்ஸ் புகாரும் எழுந்ததில்லை. அவர் மீது உலக மக்கள் மிகுந்த மரியாதை வைத்துள்ளனர். ஆனால் இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்ற பழமொழிக்கு ஏற்ப ஒபாமாவும் செக்ஸ் லீலையில் கைதேர்ந்தவராக இருந்த விவகாரம் தற்போது வெளியாகி உள்ளது.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பெண் ஜெனிவியூவ் குக். இவர் அவுஸ்ரேலிய தூதரின் மகள். இவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா குறித்த சுயசரிதை புத்தகம் எழுதியுள்ளார். அது விரைவில் வெளிவர உள்ளது.

அதில் ஒபாமாவுக்கும் தனக்கும் இருந்த காதல் மற்றும் செக்ஸ் உறவு பற்றி எழுதியுள்ளார். கடந்த 1980ஆம் ஆண்டுகளில் நியூயோர்க்கில் குக் தங்கியிருந்தார். அப்போது ஒபாமாவுக்கு 20வயது இருக்கும். குக் இவரை விட 3 வயது மூத்தவர். தொடக்கத்தில் இவர்களுக்குள் பழக்கம் ஏற்பட்டதாகவும், பின்னர் இருவரும் நெருக்கமாகப் பழகியதாகவும் அப்போது லீலையில் ஈடுபட்டதாகவும் அவர் எழுதியுள்ளார்.

இதுதவிர விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் நியூயோர்க்கில் மேல் சட்டை எதுவும் அணியாமல் சராங்கு எனப்படும் நீண்ட துணியினால் ஆன உடையை அணிந்து ஒபாமா சுற்றித் திரிவார் என்றும் தனது சுயசரிதைப் புத்தகத்தில் குக் கூறியுள்ளார்.

# 4 பேரை சுட்டுக்கொன்று தானும் தற்கொலை



நபர் ஒருவர், நான்கு பேரை சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த தாக்குதலில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த நிலையில், 2 வயது குழந்தை உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது.

இக்குழந்தையை பொலிஸார் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். இருப்பினும் குழந்தை சிகிச்சை பலனின்றி இறந்து விட்டது. இதன் பின் பொலிஸார் நடத்திய விசாரணையில் தாக்குதலில் ஈடுபட்ட நபரின் பெயர் ஜாசன் ரெடிய் என்றும், அவர் போதைப் பொருள் ஒழிப்பு இராணுவப் பிரிவில் பணியாற்றியவர் என்றும் தெரியவந்தது.



புத்தரின் பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து தாய்வானின் தலைநகரில் இடம்பெற்ற நிகழ்வின் போது

# திருமணத்தைக் கண்டு ஓடும் வடகொரிய ஆண்கள்

இளம் வயதை எட்டும் அனைத்து ஆண், பெண்ணுக்கு திருமணக் கனவு ஏற்படுவது சர்வ சாதாரணம். இதற்காக அவர்கள் ஓரளவிற்கு வருமானம் ஈட்டுவது அவசியம். ஆனால் இந்த திருமணக் கனவு வடகொரியா இளைஞர்களை அச்சப்பட வைக்கிறது. இதற்குக் காரணம் அங்கு வானத்தைத்தொடும் அளவிற்கு அன்றாடச் செலவுகள் உயர்ந்து வருவதே ஆகும்.

அங்கு திருமணம் செய்து கொள்ள வேண்டுமானால் மணமகன் ஆண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.1 கோடி அல்லது அதற்கு 4 மடங்கு சம்பாதித்தால் தான் இன்பமாக வாழ்க்கையை நடத்த முடியும். இதனால் அங்குள்ள இளைஞர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

# அமைதியான முறையில் இறப்பதற்கு அனுமதி வழங்கிய நீதிமன்றம்

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 67 வயதான ஒருவர், நரம்பு சம்பந்தப்பட்ட நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்த நோய் காரணமாக, அவரால் பேசவோ, எழுதவோ முடியாது. அவருக்கு குழாய் மூலமாகவே உணவும், தண்ணீரும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், செயற்கைச் சுவாச கருவியும் பொருத்தப்பட்டு உள்ளது. இந்தச்சூழ்நிலையில், குடும்பத்துக்கு பாரமாக இருப்பதை விரும்பாத அவர், தான் மரணம் அடைவதற்கு அனுமதி வழங்கக்கோரி, நீதிமன்றை அணுகினார்.

ஒரு மருத்துவர், சமூக சேவகர் ஆகியோரின் முன்னிலையில், அவருடைய மனைவியின் ஒப்புதலுடன் இம்மனு தயாரிக்கப்பட்டது. இம்மனுவை விசாரித்த பெண் நீதிபதி தீய்ஸ், அந்த மனிதர் அமைதியான முறையில் இறப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று உத்தர விட்டார்.

அதற்காக, அவருக்கு செயற்கைச் சுவாசம் அளித்து வரும் கருவியை துண்டித்து விட்டு, அவர் மரணம் அடைய வழிவகுக்க வேண்டும் என்று உத்தர விட்டார். இச்சம்பவம் கடந்த 1993-ஆம் ஆண்டு இடம்பெற்றது குறிப் பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# சீனாவில் புதிய கடவுச்சீட்டு




சீன அரசு கடவுச்சீட்டில் புதிய நடைமுறையை கொண்டு வருகிறது கடவுச்சீட்டில் புதிய இலத்திரனியல் சிப் இருக்கும் அதில் தனிப்பட்டவரின் விபரங்கள் உள்ளடக்கியதாக இருக்கும். அதாவது பெயர், பிறந்த திகதி. புகைப்படம் மற்றும் கை விரல் ரேகை ஆகிய விபரங் கள் அதில் பொருத்தப்பட்டிருக் கும் என சீன பொது பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிக தொகைக்கு ஏலம் போன ஓவியம்



நோர்வே நாட்டைச் சேர்ந்த எட்வர்டு மஞ்ச் என்பவரின் "The Scream"என்ற கலைப்படைப்பு ஏறத்தாழ 120 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் எடுக்கப பட்டது. கடந்த 1895ஆம் ஆண்டைச் சேர்ந்த இந்த ஓவியம், நியுயோர்க் நகரத்தைச் சேர்ந்த நபர் ஒருவரால் ஏலத்தில் எடுக்கப்பட்டது. இந்த ஏலம் 12 நிமிடங்களில் நடந்து முடிந்தது. இந்த ஏலத்தொகையைக் கொண்டு நோர்வேயில் புதிய அருங்காட்சியகம், விடுதி மற்றும் கலைக்கூடம் ஒன்றை உருவாக்கப் போகின்றனர். இதற்கு முன்பு பிகாசோ வரைந்த Nude, Green Leaves மற்றும் பஸ்ட் ஆகிய ஓவியங்கள் 106.5 மில்லியனுக்கு கடந்த 2010ஆம் ஆண்டில் ஏலத்தில் எடுக்கப்பட்டன. இதற்கு அடுத்தபடியாக தற்போது தான் அதிக தொகைக்கு(119.9 மில்லியன் டொலர்) ஏலத்தில் ஓவியம் எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பழக்கம்

கடைசியாக உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எப்போது முடிவெடுத்தீர்கள்? அதற்காக என்னவெல்லாம் செய்தீர்கள்? இதே முடிவை அதற்கு எத்தனை முறை எடுத்திருப்பீர்கள்? எத்தனை முறை வெற்றி?

உங்கள் குழந்தைகள் ஒரு செயலைச் செய்யாமல் இருக்க என்னவெல்லாம் செய்திருப்பீர்கள்? எத்தனை அடி? எத்தனை திட்டு? இருந்தும் ஒன்றும் மாறவில்லையே ஏன்?


நம்முடைய நடவடிக்கைகளில் பெரும்பாலானவை ஆழ்மனத்தின் கட்டுக்குள் இருப்பவை, ஆனால் இந்த கவுன்சிலிங், அறிவுரை, யோசனை, திட்டு, அடி எல்லாம் பிரக்ஞைபூர்வ மனத்தையே குறிவைக்கின்றன.

பழக்கங்களின் சக்தி அளப்பெரியவை. பழக்கங்களை, உருவாக்குவதன் மூலமோ உருமாற்றுவதன் மூலமோ, தனிநபர் முதல் மொத்த சமூகம் வரை பயனடைய முடியும். ஒவ்வொரு நாளும கணினி முன் உட்கார்ந்ததும் எந்த யோசனையும் இல்லாமல், பயர்ஃபொக்ஸைத் திறந்து ஜிமெயில், கூகுள் ரீடர் பிறகு ட்விட்டர் என்று செல்வது எனக்கு வாடிக்கை. நிறைய வேலை இருக்கிறது ட்விட்டர் பக்கமெல்லாம் போகக கூடாது என்று முடிவெடுத்து, ஒரு நாள் இருக்கலாம், இரண்டு நாள் இருக்கலாம். ஆனால், மூன்றாவது நாள் என்னை அறியாமலேயே ட்விட்டரை திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன்.

நம்முடைய மூளைஃமனம் இரண்டு நிலைகளில் இயங்குகிறது. ஒன்று பிரக்ஞை பூர்வமானது (conscious) மற்றொன்று ஆழ்மனம் (sub-conscious) சார்ந்தது. பிரக்ஞை பூர்வ மனதால் ஒரு சமயத்தில் ஒரே ஒரு வேலையை மட்டுமே செய்ய முடியும். ஆனால் அதே நேரத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஆழ்மனதின் கட்டுப்பாட்டில் பல வேலைகள் நடந்து கொண்டிருக்கும்.

நீங்கள், ஒரு கணக்கைச் செய்ய, ஒரு புதிய முகவரியைக் கண்டுபிடிக்க பிரக்ஞைபூர்வ மனம் வேலை செய்ய வேண்டும், ஆனால் தினமும் மாலை உங்கள் வீட்டுக்குத் திரும்ப அந்த மனம் வேலை செய்ய வேண்டியதில்லை. நாட்டைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டே நீங்கள் உங்கள் வீட்டுக்கு பத்திரமாகத் திரும்பிவிடலாம்.

ஒரு காரியம் மீண்டும் மீண்டும் செய்யப்படும்போது, அது மூளையில் பதிவாகி விடுகிறது. அதுவே அடிக்கடி சீராகச் செய்யப்படும்போது, அது ஒரு பழக்கமாக மாறி, தேவைப்பட்ட நேரத்தில் ஆழ்மனதால் செயல்படுத்தப்படுகிறது. பிள்ளையார் கோயில் நிறுத்தத



தில் இறங்கினால், இடதுகைப் பக்கம் திரும்பி, நேராக பத்தடி நடந்து, கடையில் ஒரு சிகரெட் வாங்கி பற்றவைதது்க் கொண்டு, இன்னும் ஐம்பது அடி நேராக நடந்து, ஊதா நிற வீட்டின் இரண்டாவது மாடிக்குத்தான் செல்வோம், என்பதை உங்கள் ஆழ்மனம் அறியும்.

இப்படி பழக்கப்பட்ட ஆழ்மனச் செயற்பாட்டுக்கு அதிகமாகச் சொல்லபபடும் உதாரணம், காரை பின்நோக்கி இயக்குவது. பின்னே எந்த இடைஞ்சலும் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும், பக்கவாட்டில் இருக்கும் இரண்டு கண்ணாடிகளையும் பார்க்க வேண்டும், பிரேக்கை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும், அப்புறம் ரிவர்ஸ் கியரைப் போட்டு, கண்ணாடிகளைப் பார்த்து, அவற்றில் தெரியும் தூரத்தை தோராயமாகவாவ்து கணக்கிட்டு, காரைப் பின்நோக்கி இயக்க வேண்டும்.

அப்படி இயக்கும்போது வேகம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இவ்வளவையும் செய்துதான் காரை பின்நோக்கி இயக்குகிறோம். முதல் சில தடவைகள் இதற்குக் கூர்மையான கவனம் தேவை. ஆனால், பழகப் பழக அநாயாசமாக இத்தனையும் செய்துவிடுவோம்.

ட்யூக் பல்கலைக்கழகம் செய்த ஆராய்ச்சியில், ஒரு நாள் முழுவதும் நாம் செய்யும் செயல்களில் 45 சதவீதம், பிரக்ஞை தேவையே இல்லாத பழக்கங்கள்தான் என்று கண்டுபிடித்தனர். நீங்கள் எப்படிப்பட்டவர், எப்படிச் சாப்பிடுபவர், எடுத்த இடத்தில் பொருளை வைப்பவரா, சோம்பேறியா- எல்லாமே பழக்கத்தில்தான் இருக்கிறது. உங்கள் பழக்கம் உங்களுக்கு நிறைய நல்லது செய்கிறது.

நம்மில் பெரும்பாலானவர்கள், சூப்பர் மார்க்கெட்களுக்குச் செல்லும்போது, ஆழ்மனதாலேயே இயக்கப்படுகிறோம் என்கிறார்கள். ஒரு தயாரிப்பை மீண்டும் மீண்டும் பயன்படுத்துபவர்கள், அதைத் தவிர்த்து வேறு தயாரிப்புகளுக்குச் செல்வதில்லை. எனவே, அனைத்து நிறுவனங்களுமே உங்கள் பழக்கத்தை உடைத்து. அதில் அவர்கள் தயாரிப்புகளை நுழைக்கவே இலவசம், விளம்பரங்கள் என்று இந்தப் பாடு படுகிறார்கள்.

உண்மையில் பழக்கங்களை உருவாக்குவதும் கடினம். அவற்றை உடைப்பதும் கடினம். ஒரு பழக்கத்தை எடுத்துக்கொண்டால் அதில் மூன்று விஷயங்கள் அடங்கியிருக் கின்றன. அவை, குறிப்பு, செயல், பரிசு.

குறிப்பு என்பது ஒரு பழக்கம் எப்போது செயற்படுத்தப்பட வேண்டும் என்பதற்கானது. அலுவலகம் போய் உட்கார்ந்தவுடன் பயர்ஃபொக்ஸைத் திறக்க வேண்டும் என்பது குறிப்பு. அதைச் செயற்படுத்தும்போது ட்விட்டரில் நீங்கள் ரீட்வீட் செய்யப்பட்டிருப்பதை அறிவதுதான் பரிசு. பதற்றமாக உணர்வது குறிப்பு, சிகரெட் குடிப்பது செயல், பதற்றம் குறைவது பரிசு.

எந்த ஒரு பழக்கத்திற்கும் ஒரு மாற்றுப் பழக்கத்தை உருவாக்கலாம். பதற்றமாக உணர்வதையும், பதற்றம் நீக்குவதையும் அப்படியே வைத்துக் கொண்டு, செயலை மட்டும் மாற்றிக் கொள்ள முடியும் என்கிறார்கள். நண்பர்களுடன் அரட்டையடிப்பது, சுவாசத்தை இழுத்துவிடுவது, உங்கள் குழநதைகளுடன் விளையாடுவது உங்கள் பதற்றத்தை குறைக்கக்கூடும். இதை மறுபடி மறுபடி செய்வதன் மூலம் முந்தைய புகைப் பழக்கம் பின்னுக்கு தள்ளப்பட்டு, குழந்தைகளுடன் விளையாடுவதோ, அரட்டை யடிப்பதோ புதிய பழக்கமாக உருவாகிவிடும்.

புகைப்பழக்கத்தை விடும் சிலர், அதற்கு மாற்றாக, நாக்கு நம நமக்கும போதெல்லாம் ஏதாவது சாப்பிடத் தொடங்குகிறார்கள். ஒரு நாளைக்கு பத்து சிகரெட் குடிப்பவர், அதை நிறுத்திய பின்பு பத்து முறை சாப்பிடுகிறார். நேரங்கெட்ட நேரத்தில் சாப்பிடும நொறுக்குத் தீனிகளாலேயே அவர்கள் உடல் பெருத்துவிடுகிறது. சிகரெட்டை நிறுத்தும் பலருக்கு உடல் பெருப்பதற்கான காரணம் இது தான். ஆனால், புகைப்பழக்கம் என்பது மங்கியிருக்குமே தவிர, மூளையில் பதிந்தது அழிந்து விடாது. என்றாவது ஒருநாள் பதற்றமாக இருக்கும்போது சிகரெட்டை கையில் எடுத்தால் மங்கியிருந்த பழக்கம் மீண்டும் தொடரத் தொடங்கிவிடும்.



கர்ப்பிணிகள் பெரும்பாலும் கவனமாக இருப்பார்கள், தாங்கள் என்ன சாப்பிடுகிறோம் என்பதில் அதிக அக்கறை செலுத்துவார்கள். அதுவரை பயன்படுத்திக் கொண்டிருந்த பொருட்களை விட்டுவிட்டு அதைவிட சிறப்பாக ஏதாவது இருந்தால் அதற்கு மாறத் தயாராக இருப்பார்கள். இந்த நிலையை பயன்படுத்திக் கொள்ள வேண்டியது விற்பனையாளர்களின் திறமை.

The Power of Habit என்ற புத்தகத்தில் சார்ள்ஸ் தூகிக், இப்படிப்பட்ட ஒன்றை விளக்குகிறார். அமெரிக்காவின் ஒரு விற்பனை நிறுவனத்தில் குழந்தைகளுக்கான பொருட்களின் விற்பனை அத்தனை சிறப்பாக இல்லை. அங்கு வருபவர்கள் காய்கறி வாங்குகிறார்கள், உப்பு புளிவாங்குகிறார்கள் ஆனால் குழந்தைகள் சம்பந்தமான பொருட்களை அங்கு வாங்குவதில்லை. அவர்களை குழந்தைகளுக்கான பொருட்களையும் வாங்க வைக்க வேண்டும்.

அவர்களிடம் தங்கள் கடைக்கு வருபவர்களைப் பற்றிய தகவல்கள் இருக்கின்றன. பெயர், என்ன வேலை, எங்கு வேலை, சம்பளம் எவ்வளவு என்பது போக, உங்களுடைய கடன் அட்டை, நீங்கள் அடிக்கடி பார்க்கும் வலைத் தளங்கள், நீங்கள் படிக்கும் பத்திரிகைகள், நீங்கள் என்னென்ன பிராண்ட் பொருட்களை விரும்புகிறீர்கள், என்ன கார் வைத்திருக்கிறீர்கள் என்று பல தகவல்களை வைத்திருக்கிறார்கள். சில தகவல்களை அவர்களே சேகரிக்கிறார்கள், சிலவற்றை வெளியிலிருந்து வாங்குகிறார்கள்.

இந்தத் தகவல்களை வைத்து, உங் களுக்கு ஏற்ற சலுகைகளை அவர்கள் தருகிறார்கள். குழந்தைகளுக்கான பொருட்களை நோக்கி வாடிக்கையாளர்களை இழுக்க, முதலில் அவர்கள் ஒரு பதிவை உருவாக்குகிறார்கள். தான் கர்ப்பமாக இருப்பதை ஒருவர் வெளியே சொல்ல விரும்பினால் அவர் அந்தப் பதிவில் தன் பெயரை பதிந்து கொள்ளலாம். இப்படி தானாக முன்வந்து பதிந்து கொண்டவர்கள் என்னென்ன வாங்குகிறார்கள் என்பதை ஆராய்ச்சி செய்கிறார்கள்.

அவர்களுடைய ஆராய்ச்சியில், 'மகப்பேறு காலத்தின் முதல் 20 வாரங்களில் பெண்கள் அதிகமாக கல்சியம், மக்னீசியம் மற்றும் சிங்க் விற்றமின்களை வாங்குகிறார்கள்' என்பது தெரிய வந்தது. அதோடு, அவர்கள் இப்போது வாசனையில்லா சோப்களையும் கைகழுவும் லோஷன்களையும் வாங்கத் தொடங்குகிறார்கள். மகப்பேறுக்கான நாள் நெருங்கும் போது அவர்கள் இந்த வாசனையில்லா லோஷன்கள் மற்றும் சோப்களை அதிக அளவில் வாங்குகிறார்கள்.


இப்படி தானாக முன்வந்து தரப்படும் தகவல்களைக் கொண்டு, மற்ற வாடிக்கையாளர்களையும் கவனிக்கிறார்கள். யாராவது ஒருவர் அதிகளவு வாசனையில்லா லோஷன் வாங்கினால் அவர் வாங்கிய மற்ற பொருட்களையும் கொண்டு, அவர் கருத்தரித்திருக்கலாம் என்று முடிவு செய்கிறார்கள். பின் அவருக்கு மற்ற சலுகைகளுடன் சில குழந்தைகள் பொருட்களுக்கான சலுகைகளையும் அனுப்பு கிறார்கள்.

அந்தப் பொருட்களை அடுத்த முறை வரும்போது அவர் வாங்கினா ரென்றால், அவருக்கு இன்னும் சில சலுகை கூப்பன்கள் அனுப்புகிறார்கள். அதிலும் குறிப்பிட்ட நேரம் பார்த்து கூப்பன்களை அனுப்புகிறார்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் கடைக்கு வரும் வாடிக்கையாளர் என்றால், அவருக்கு வெள்ளிக்கிழமை மின்னஞ்சலில் இந்தக் கூப்பன்கள் அனுப்பிவைக்கப்படும். அந்த வாடிக்கையாளரும் கொஞ்சம் கொஞ்சமாக அந்தக கடையில் குழந்தைகளுக்கான பொருட்களை வாங்கத் தொடங்கிவிடுவார்.

ஒரு தயாரிப்பை, வாடிக்கையாளர் அடிக்கடி பயன்படுத்த வேண்டுமானால், அதைப் பயன்படுத்த தேவைப்படும் பிரக்ஞை குறைவாக இருக்க வேண்டும், அல்லது இருக்கவே கூடாது. ஆழ்மனம் தானாகவே அதை பயன்படுத்தும் போதுதான் அது பயன்படுத்த இலகுவாக இருக்கிறது.

விலங்குகளைப் பயிற்றுவிப்பதில் நிபுணரான கேரன் ப்ரைரொர், 'ஒரு செயல் நடக்கும் வரை பயிற்சியாளர் காத்திருக்க வேண்டும். அது நடந்தால் அதைப் பழக்கமாக்கி விடலாம்' என்கிறார்.

பழக்கப்பட்ட விஷயங்களில், மாற்றங்கள் திணிக்கப்படும் போது, அவை வாடிக்கையாளர்களை கோபமடையச் செய்கின்றன. ட்விட்டர், ஃபேஸ்புக் போன்றவற்றில் பயனர் முகப்பு மாற்றப்படும் ஒவ்வொருமுறையும் எரிச்சல் வெளிப்படுவதைப் பார்க்கி




றோம். ஆனால், ட்விட் செய்யும் பழக்கம் மிகவும் வலுவாக இருப்பதால், இந்த மாற்றமெல்லாம் சில நாட்களில் பழக்கப்பட்டு விடுகிறது.

குழந்தைகள் வளர்ப்பும் இந்தப் பழக்கங்களை ஒட்டியே அமைகிறது. உங்கள் குழந்தை ஒரு வேலையைத் தவறாகச் செய்யும்போது அதைத் தண்டிப்பதால், மறுமுறை ஒழுங்காகச் செய்துவிடப் போவதில்லை. குழந்தைகள் ஒரு வேலையைச் சரியாக செய்யும்போது அவர்களை பாராட்டுவதன் மூலமே அந்தப் பழக்கத்தை உருவாக்க முடியும்.

சார்ள்ஸ் தூகிக், சொல்வது போல் ஒரு வேலையை எத்தனை வழிகளில் வேண்டுமானாலும் தவறாகச் செய்யலாம் ஆனால் ஒரே வழியில் மட்டுமே அதைச் சரியாகச் செய்ய முடியும்.

-மாயக்கூத்தன்

# போதைவஸ்து பாவனை குடாநாட்டில் அதிகரிப்பு



யாழ்.நகரிலும் நகரை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் ஹெரோயின் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் விற்பனையும், பாவனையும் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளது.

இப்போதைப் பொருட்களைக் கடத்துவோரும், அவற்றைப் பதுக்கி வைத்திருப்போரும் நகரப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றனர். இவர்களில் ஒரு சிலர் மட்டுமே பொலிஸாரிடம் சிக்கிக்கொள்கின்றனர்.

யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் அண்மைக்காலமாக இவ்வாறான வழக்குகள் அதிகமாகக் கையாளப்பட்டு வருவதாகவும் நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, நேற்றும் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

நாவாந்துறை ஆஸத் வீதிப் பகுதியைச் சேர்ந்த நான்கு நபர்களில் 4 ஆயிரத்து 800 மில்லிக் கிராம் ஹெரோயின் வைத்திருந்த நபரை 18 ஆம் திகதி வரை விளக்கமறியலிலும், 200 மில்லிக் கிராம் வைத்திருந்த 3 நபர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு யாழ்.நீதிமன்ற நீதவான் மா. கணேசராஜா உத்தரவிட்டார்

அதேவேளை, ஹெரோயின் வழக்குடன் தொடர்புடைய மற்றொருவரை நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் யாழ்.பொலிஸார் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

# விஜயகலாவிற்கு அபராதம் விதிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு களுத்துறை நீதவான் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

கடந்த மாதம் பதிவு செய்யப்படாத வாகனமொன்றை செலுத்திச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் விஜயகலா மகேஸ்வரன் களுத்துறையில் தடுத்துவைக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று இது குறித்த வழக்கு விசாரணைக்கு வந்த போது அரச கட்டணமான 2500 ரூபாவை செலுத்துமாறு விஜயகலா மகேஸ்வரனுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

# பாலியல் துஷ்பிரயோகம் வயோதிபர் கைது

மாங்குளம் பகுதியில் இரு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய வயோதிபர் ஒருவர் மாங்குளம் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

சுமார் 65 வயதையுடைய குறித்த வயோதிபர் சுமார் ஒரு மாத காலமாக குறித்த சிறுமிகள் இருவரையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்திருப்பதாக விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தந்தையை இழந்த நிலையில் கூலி வேலை செய்யும் தாயுடன் வசித்து வந்த குறித்த இரு சிறுமிகளையும் அயல் வீட்டில் வசித்து வந்த குறித்த வயோதிபரே பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் சிறுமிகளில் ஒருவர் 10 வயது உடையவர் எனவும், மற்றையவர் அவரிலும் இளையவராவர். அவர்கள் இருவரும் மாங்குளம் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று அழைத்து வரப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக் கென ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 17 வயதுடைய சிறுமி ஒருவரும் இளைஞர் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் நேற்று அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# மும்மொழிகளில் இல்லாத ஆணைக்குழு அறிக்கை

## ஆச்சரியம் என்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இதுவரை மூன்று மொழிகளிலும் வெளியிடப்படாமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ள தாக இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவின் தலைவி ஜீன் லம்பேர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கா தமது ஐந்து நாள் பயணத்தை நிறைவு செய்து நேற்றைய தினம் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மக்கள் விளங்கிக் கொள்வதற்கு மூன்று மொழிகளிலும் அது வெளியிடப் பட வேண்டும். குறிப்பாக குறிப்பாக ஆணைக்குழு முன் சாட்சியமளித்தவர்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அறிய மிகவும் ஆவலாக உள்ளார். எனவே அறிக்கையை மூன்று மொழிகளிலும் வெளியிடுவதே சிறந்தது. அத்துடன், ஆணைக்குழுவின் பரிந்துர்ரகளில் சாதகமான பல விடயங்கள் உள்ளது. இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தனது கருசனையைக் கொண்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் நான் இலங்கைக்கு வந்து பார்வையிட்டதை விடவும் தற்போது இலங்கையின் மக்களின் அபிவிருத்திப் பணிகளில் பல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.


# உறவின் சங்கமம்

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் ஆன்மீக சிந்தனைகளைப் பகிரும் உறவின் சங்கமம் ஒன்று கூடல் நிகழ்வு அகவொளி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது.

## கனேடிய...

கிளிநொச்சிப் பகுதியில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட நிலையில், பரந்தனிலுள்ள தனது காணிகளைப் பார்வையிட வந்திருந்தார். பின்னர் அங்கேயே தங்கியிருந்துள்ளார். சம்பவ தினமான நேற்று முன்தினம், இரவு 8.15 மணியளவில் அயல் வீட்டில் தனது வழமையான உணவை எடுத்துக் கொண்டு தனது வீட்டிற்குச் சென்றுள்ளார். இரவு 9.00 மணியளவில் இவரின் வீட்டில் அலறல் சத்தம் கேட்கவே, அயல் வீட்டார் ஓடிச் சென்று பார்த்தவேளை, வெட்டுக் காயங்களுக்கு இலக்காகிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இதனையடுத்து சம்பவம் தொடர்பாக அப்பகுதி கிராம சேவையாளர் ஊடாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (கே)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானிய பிரதிப் பிரதமர் கட்சுயா ஒகாடா நேற்று சந்தித்துப் பேசினார். கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழருக்கான...

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு பிரதமரிடம் தமது பயணம் தொடர்பான அறிக்கையையும் சமர்ப்பித்தது. அனைத்துக் கட்சி எம்.பிக்களுடன் கலந்துரையாடிய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் கருத்துக்கள், ஆலோசனைகளையும் கேட்டறிந்தார். அத்துடன் எம்.பி.க்களின் இலங்கைக்கான விஜயம், உரிய தருணத்திலும்," இரு தரப்பு உறவுகளின் முக்கியமான கட்டத்திலும் இடம் பெற்றுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவ்கார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரி நாராயணசாமி ஆகியோரும் உடனிருந்தனர்.

இதேவேளை, இந்திய எம்.பிக்கள் குழுவின் இலங்கை விஜயம் நேரடியாக பல விடயங்களை அவதானிக்க முடிந்ததாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினரின் இலங்கை விஜயம் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும், அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தனிப்பட்ட...

யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். யாழ்.குற்றப்புலனாய்வுப் பொலிஸார் உட்பட இராணுவத்தினர் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் 12 துப்பாக்கி ரவைகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்றில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எஸ், பா)

## தேசியக்கொடி...

பெற்ற சுதந்திர ஊடகக்குரல் அமைப்பினரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா, சம்பந்தன் தேசியக் கொடியை ஏந்தியது தவறெனக் கூறி பகிரங்க மன்னிப்புக் கேட்டிருந்தார்.

அதேபோன்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், அரியநேத்திரன் ஆகியோரும் தமது கண்டனங்களை வெளிட்ட நிலையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின் தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் 07.05.2012 திங்கட்கிழமை, 09.05.2012 புதன் கிழமை, 11.05.2012 வெள்ளிக் கிழமை மற்றும் 13.05.2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப் பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலப் பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும்,

08.05.2012 செவ்வாய்க்கிழமை, 10.05.2012 வியாழக்கிழமை மற்றும் 12.05.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

09.05.2012 புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## மீண்டும்...

சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.தோட்டத் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் உட்பட மக்களுக்கு அவசர நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். அவர்களின் தேவைகளை அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டும். இந்த தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென காட்டாட்சியினருக்கு நினைவுபடுத்துகிறோம்.

சம்பள உயர்வுடன் தேசிய ஐக்கியமும் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் அவசியம். நாட்டின் சார்பான தீர்மானங்களை மேற்கொள்வதில் மக்களுக்கு சமத்துவமான பங்கு அவசியம் எனவும் ரணில் கூறினார்.

## ஜப்பானிய...

குழுவினரை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

தனது விஜயத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றைய தினம் சந்தித்த அவர் பிரதமர் டி.எம். ஜயரட்னவை இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

# தமிழீழம் கோரிய சம்பந்தரை சிங்கக்கொடி ஏந்த வைத்துள்ளோம்

## பெருமைப்படுகிறது ஐ. தே. க.

தனித் தமிழீழம் கோரி கொள்கை உறுதியுடன் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று ஐக்கிய இலங்கைக்குள் ஓர் அரசியல் தீர்வு வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்தத் தீர்மானத்திற்குக் கொண்டு வரப் பாடுபட்டு உழைத்த கட்சி என்ற வகையில் நாம் பெருமை கொள்கின்றோம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஒரே கொடியின் கீழ் ஆட்சி புரிய வேண்டும் என்ற தமது தீர்மானத்தைக் கூட்டமைப்பினர் நாடடிற்கு வெளிப்படுத்தும் வகையில் யாழில் இடம்பெற்ற பொது எதிரணியின் மேதினக் கூட்டத்தில் இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக்கொடியை ஏந்தி தீர்வுக்கான சமிக்ஞையைக் காட்டியுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்து நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலை நிறுத்துவதற்கான பொது எதிரணியினரின் பயணத்தில் நாம் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்கின்றோம்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தனித் தமிழீழம் கோரி கொள்கை உறுதியுடன் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று ஐக்கிய இலங்கைக்குள் ஓர் அரசியல் தீர்வே எமக்கு வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்துள்ளனர். இது நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் ஆக்கபூர்வமான வெளிப்பாடாகும்.

கூட்டமைப்பினர் தமது தீர்மானத்தை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் யாழில் இடம்பெற்ற பொது எதிரணியினரின் மேதினக் கூட்டத்தில் எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இணைந்து நமது நாட்டின் தேசியக் கொடியான சிங்கக்கொடியை கையில் ஏந்தினார். கூட்டமைப்பினரை இந்தத் தீர்மானத்திற்குக் கொண்டு வந்து முன்னின்று செயற்பட்ட கட்சி என்ற அடிப்படையில் நாம் பெருமை கொள்கின்றோம்.

பொது எதிரணியினரால் கொண்டாடப்பட்ட மேதினக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். இதன் மூலம் தமிழ் மக்களும் எம்முடன் கைகோர்த்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

யாழில் நாம் நடத்திய மேதினக் கூட்டத்தின் மூலம், சிறந்த கொள்கையுடன் ஆட்சி புரியக் கூடிய கட்சி எமது ஐக்கிய தேசியக் கட்சி என நாம் உலகத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளோம். அது மட்டுமல்லாது, நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் எம்முடன் இணைந்துள்ளனர் என்பதை நாம் தெளிவாகவும் எடுத்துக்காட்டியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முழுநிலா கலைவிழா

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையமும் ஐயனார் கலாமன்றமும் இணைந்து நடத்தும் முழுநிலா கலைவிழா இன்று இரவு 7.30 மணிக்கு ஐயனார் சனசமூக நிலைய அரங்கில் ஐயனார் கலாமன்றத் தலைவர் க.இராசரத்தினம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா, கிராம அலுவலர் இ.குலசிங்கம், வேலணைப் பிரதேச சபை உபதலைவர் சி.கார்த்திகேசு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கலைவிழாவில் நடனம், சமூக நாடகம், நகைச்சுவை நாடகம் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதால் அனைவரும் திரண்டுவந்து கண்டுகளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (85)

# பதின்ம வயது திருமணம் வாலிபனுக்கு விளக்கமறியல்

16 வயதுக்குட்பட்ட சிறுமியுடன் குடும்பம் நடத்திய வாலிபர் ஒருவர் யாழ். நீதிமன்றினால் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இவ்விளைஞன் சுமார் ஒருவருட காலமாக இந்த சிறுமியுடன் குடும்பம் நடத்தி வந்துள்ளார். கல்யாணப் பதிவு இடம்பெறவில்லை. திருமணமும் முறைப்படி நடைபெறவில்லை. இந்நிலையில் சிறுமி கர்ப்பவதியானார். பிரசவ நாள் நெருங்கவே இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பதிவின்போது யுவதியின் வயது வைத்தியருக்குத் தெரியவந்ததையடுத்து பொலிஸாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் வாலிபனைக் கைது செய்தனர். இவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இவரை விசாரணை செய்த நீதவான் மா.கணேசராசா இவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார். (137)

# கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு பொன்சேகாவை மாற்ற உத்தரவு



(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகாவை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு நவலோகா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது

நவலோகா வைத்தியசாலையிலுள்ள சரத் பொன்சேகாவுக்கு போதியளவான பாதுகாப்பை வழங்க முடியாதுள்ளதாகவும், இவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றினால் போதிய பாதுகாப்பை வழங்க முடியும் என சிறைச்சாலை அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளின் வேண்டுகோளை கவனத்தில் எடுத்துக் கொண்ட நீதிபதி, சரத் பொன்சேகாவை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

# கோப் அறிக்கை 8 இல் விவாதம்

கோப் எனப்படும், பொது நிறுவனங்கள் பற்றிய நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. ஒரு நாள் விவாதமாக இது இடம்பெறவுள்ளது. இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பல மாதங்கள் ஆனபோதும், அதனை அச்சிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக, இதுவரையில் அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கை பல வருடங்களின் பின்னர் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும் இந்த அறிக்கைக் குறித்த விவாதத்துக்கு ஒரு நாள் போதாத நிலையில், அதனை ஒரு வாரமாக நீடிக்குமாறு இந்த விவாதத்தில் கோரவிருப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

# குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடன்சுமை தாங்காது நஞ்சருந்தி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்த சம்பவம் அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சந்நிதிவீதி பத்தமேனியைச் சேர்ந்த சுப்பையா சிவபாதம் (வயது-48) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரணமானார். இவர் ஆபத்தான நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரும் வழியில் மரணமானார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, தெல்லிப்பளை பிள்ளையார் கோயிலின் அன்னதான மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் எடுத்துக்கொண்ட அவர் ஆலய உபயகாரர்களினால் பணம் வழங்கப்படுவதற்கு முன்பாக கடனாக 8 இலட்சம் ரூபாவரை பணத்தைப் பெற்று அன்னதான மண்டபத்தைக் கட்டியிருக்கிறார். உரிய காலத்தில் ஆலய உபயகாரர்களால் பணம் வழங்கப்படாததால் மனக்குழப்பம் ஏற்பட்ட நிலையிலேயே நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். (யா)

# இலங்கைக்கு எதிராக வாக்களிக்க கூடங்குள அனுமதியே காரணம்

## என்கிறது திவயின

(கொழும்பு)

தமிழகத்தில் கூடங்குளம் அணுமின் நிலையத்தை திறக்க தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இடமளித்தமை காரணமாகவே, இந்தியா ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான யோசனையை ஆதரித்ததாக பி.பி.சி இந்திய சேவையின் விசாரணையாளர் நாரான் பூஷண் தெரிவித்துள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான யோசனையை ஆதரித்தால் மாத்திரமே அணுமின் நிலையத்தை திறக்க இடமளிக்கப்படும் என ஜெயலலிதா தெரிவித்திருந்ததாகவும் இதனடிப்படையில் இந்திய மத்திய அரசு, ஜெயலலிதாவுடன் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார். பின்கதவு வழியாக இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது என பூஷண் தெரிவித்துள்ளதாகவும் திவயின கூறியுள்ளது.

# குடிசன மதிப்பீட்டின் அறிக்கை ஓரிரு தினங்களில் வெளிவரும்

2011 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் முதற்கட்ட அறிக்கை இன்னும் ஓரிரு நாட்களில் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம 27 ஆம் திகதி முதல் மார்ச் 21 ஆம் திகதி வரை நடைபெற்ற 2011 ஆம் ஆண்டுசனத்தொகைக் கணக்கெடுப்பு ஒரு மாதத்திற்குப் பின்னர் வெளிவரவுள்ளது.

இவ்வறிக்கையானது மாவட்ட ரீதியிலான சனத்தொகை மதிப்பீட்டினை உள்ளடக்கியதாகவும் 1981 மற்றும் 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்புடன் ஒப்பீடுசெய்யப்பட்டு வெளிவருமென குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளி விபரவியலாளர் திருமதி மகேஸ்வரன் தெரிவித்தார்.

உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் 2001 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை கணக்கெடுப்பு குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இதனால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் சனத்தொகைக் கணக்கெடுப்பை மேற்கொள்வதில் பெரும் சிரமம் காணப் பட்டதால் அப்பகுதிகளில் சனத்தொகைக் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகவே 2011 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின் முதற்கட்ட அறிக்கையில் வடக்கு மற்றும் அம்பாறை தவிர்ந்த கிழக்குப் பகுதிகளில் உள்ள சனத்தொகையானது 2001 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்புடன் ஒப்பிடப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சனத்தொகை மதிப்பீடு தொடர்பான 2 ஆம் கட்ட அறிக்கையானது இன்னும் ஒரு மாத காலப்பகுதிக்குள் வெளிவரும் என்றும் அவ்வறிக்கையானது இம்முறை வெளிவரும் தகவல்களை விட மேலதிக தகவல்கள் அடங்கியிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கிண்ணியாவில் கிடங்கு வெட்டியபோது புகை கக்கியதைக் காணலாம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.